153

# முத்தாரம்



ஆசிரியர்:
மு. கருணாநிதி

0-50

# முத்தாரம்

[இலக்கியத் திங்கள் ஏடு]

ஆசிரியர் :

**மு. கருணாநிதி**

வெளியிடுபவர்:

**மாறன் எம். ஏ.,**

அச்சிடுவோர்:
'முரசொலி' அச்சகம்,
சென்னை—6.

அலுவலகம்:
4-128, மவுண்ட் ரோடு,
தபால் பெட்டி எண்: 712
சென்னை—6.

'டெலிபோன்' எண்:
85225

**ஆண்டு சந்தா**

உள்நாடு ரூ. 6—0—0
வெளிநாடு ரூ. 7—0—0

**ஆறுமாத சந்தா**

உள்நாடு ரூ. 3—0—0
வெளிநாடு ரூ. 4—0—0

ஆரம் : 1 | மே, 1957 | முத்து: 8



கதை :

| | |
|---|---|
| மு. கருணாநிதி | ... 11 |
| கா. அப்பாதுரை | ... 17 |
| கி. அல்லி | ... 29 |
| வி. ஜி. விசுவநாதன் | ... 49 |
| மாறன் | ... 52 |
| இல. மழலைச் செல்வன் | ... 60 |
| முதல்வன் | ... 72 |
| அதிகமான் | ... 91 |
| கதிரவன் | ... 101 |

கட்டுரை :

| | |
|---|---|
| பி. சி. கணேசன் | ... 6 |
| அறிஞர் அண்ணா | ... 15 |
| இராசாக்கண்ணு | ... 41 |
| சோமலெ | ... 65 |
| முல்லை சத்தி | ... 82 |

கவிதை :

| | |
|---|---|
| கவிஞர் வாணிதாசன் | ... 5 |
| கருணானந்தம் | ... 9 |

பெருங்கதை :

| | |
|---|---|
| டாஸ்டாவஸ்கி—தமிழில்: சொர்ணம் | ... 114 |
| சித்திரத் தொடர்கதை | ... 37 |



சென்னை-600 005.
198963
m211,456MR

9-ம் தேதியே விற்பனைக்குக் கிடைக்கும்!

'முரசொலி'யில் தொடர்கதையாகப் படித்தீர்கள்—

இப்போது திரை ஓவியமாகப் பத்தகத்தில் படியுங்கள்!

# : புதையல் :

திரைக்கதை வசனப் புத்தகம்!

விலை 8 அணா கழிவு 40 சத வீதம்

(தேவையான பிரதிகளுக்கு கழிவு நீக்கி முன் பணம் அனுப்பவும். அல்லது வி. பி. யில் அனுப்ப வேண்டுமென்றாலும் தெரிவிக்கவும். முன் பணம் அனுப்புவோருக்கே முதல் சலுகை தரப்படும்.)

எம். கே. பதிப்பகம்,

த. பெ. 712 சென்னை—6.

---

விரைவில் விற்பனைக்குக் கிடைக்கும்!

உயர்ந்த எண்ணங்கள் குலுங்கும் கருத்துக் கருவூலங்கள்!

மாறன், எம், ஏ, எழுதிய

## ஏன் வேண்டும் இன்பத் திராவிடம்?

கொள்கை விளக்கக் கையகராதி!

விலை ரூபாய் 1-25.

★

பி. சி. கணேசன், பி. எஸ்ஸி. பி. டி. எழுதிய

## அபிசீனிய அடிமை

சுவையான கதைப் பின்னல்!

விலை ரூபாய் 1.

விபரங்களுக்கு

முத்துவேல் பதிப்பகம்,

77, மதுரை ரோடு, : : திருச்சி—8.

# முத்துக்கள்

இந்த இதழ் முத்தாரம் மனங் கவரும் முகப்பு ஓவியத்துடனும்; எண்ணங் கவரும் எழுத்தோவியங்களுடனும் உங்கள் கரங்களை அலங்கரித்துக் கொண்டிருக்கிறது.

'ஆண்களுக்கு இதயமில்லை'—வங்க இலக்கியத்தின் முன்னணி எழுத்தாளர் வரிசையில் நிற்கும் ஒரு சிறுகதை வேந்தரின் எழுத்தோவியம்! உள்ளத்தைத் தொடும் விதத்திலே மனித உணர்ச்சிகள் அதிலே படம் பிடித்துக் காட்டப் பட்டிருக்கின்றன!

'தலைவிதி'—ஒரு இந்திக் கதை; தமிழிலே தரப்பட்டிருக்கிறது,

'மாகியின் பரிசு'—அமெரிக்க நாட்டு இலக்கிய வானின் இளம் பரிதியாய்த் திகழும் ஓ ஹென்றியின் சிறந்த சிறுகதைகளுக்குள்ளாகவே சிறந்து விளங்குவது; அந்த விலை உயர்ந்த 'பரிசி'னையும் இந்த இதழ் உங்களுக்குத் தந்திருக்கிறது.

இளம் எழுத்தாளர்களுக்கு முத்தாரத்தில் எப்போதுமே வரவேற்பு உண்டு என எழுதியிருந்தோம்! அதன்படி பல கதைகளை அனுப்பி வைத்தீர்கள். ஆனால் அவைகளில் சிலதான் இந்த இதழில் இடம் பெற்றிருக்கின்றன. நல்ல கதைகளை—கட்டுரைகளை 'முத்தாரம்' வரவேற்கிறது.

## உங்கள் பார்வை

* ... தங்கள் ஏடு நாட்டிலே தொடர்ந்து சிறப்பாக பணியாற்ற வேண்டுமாயின், ஒரு சில மாற்றங்கள் தேவை. அதாவது ஒரு அறிஞர் வரலாறை தங்கள் இதழில் எழுதி வந்தால், எங்களுக்கு இன்னும் பயனுள்ளதாக இருக்கும்; உங்கள் இதழுக்கும் மதிப்பு அதிகமாகும்.

—க. கரிகாலன்
கிருஷ்ணகிரி.

* ... முதலில் மறைந்த வீரர்களின் விளக்கமும் படமும், அது முடிந்தவுடன் இருப்பவர்களின் படமும் விளக்கமும் கொடுக்க வேண்டும்....

—எஸ். கிருஷ்ணன்,
பலராமபுரம்,

* ... ஏப்ரல் 'முத்தாரத்தில்' திருவாளர் கருணானந்தம் எழுதிய "ஓய்வு கிடைத்தது" என்ற கவிதை அழகாக இருக்கிறது. என். ஜி. ஓ. அன்பர்கள் பலருக்கு இது விகடமாக அமைந்திருப்பதுடன் கருத்துள்ளதாகவும், சுவைதரக்கூடியதாகவும் இருக்கிறது; திருவாளர் வி. ஜி. விஸ்வநாதன் எழுதிய "புகழ்பெற்ற எழுத்தாளன்" மிக்க தத்ரூபமாக இருப்பதுபோல் அழகிய நடையுடன் அமைந்துள்ளது.

—ராமசாமி
ஸ்ரீவில்லிபுத்தூர்.

* ... ஆசிரியர் மு. க. வின் தொடர் கதையொன்று கவிதை நடையில் ஆரம்பிக்கும்படிக் கேட்டுக் கொள்கிறேன்.

—சுந்தரம்,
சிவகங்கை.


விற்பனையாகின்றன !

கவின்மிகு கருத்துப் பேட்டகங்கள் !

மு. கருணாநிதி எழுதிய
வெள்ளிக்கிழமை
விலை ரூ. 2—0—0

★

மாறன், எம். ஏ. எழுதிய
வால் நட்சத்திரம்
விலை ரூ. 1—0—0

★

கே. ஏ. மதியழகன் எழுதிய
" டாக்டரம்மா "

திராவிடப் பண்ணை
தெப்பக்குளம் : திருச்சி-2

# போதுமடா.....

கவிஞர் வாணிதாசன்

மகனே போதுமடா! நீயென்
வயிற்றில் பிறந்தபின் நான்பெற்ற மகிழ்ச்சி

அகங்கைத் தேனாய் அன்றிருந் தேனே!
அகங்கைத் தேளாய் இன்றானேனே!

உன்னைப் பெறுமுன் நான் உன்னைக்குக் கரும்பு
உனைப் பெற்றபின்போ உன்னைக்கு வேம்பு
என்சொல் விழியோ இன்ப விருந்து
இப்பொழுதோ நான் குமட்டும் மருந்து

அன்றுநான் தென்றற் குளிர்பூஞ் சோலை
இன்று நான் தீய்க்கும் மணல்வெளிப் பாலை
குன்றினை உடைக்கும் உன் அப்பன் தோளை
சூம்பிய தோளென்று சொல்வாய் நீ நாளை!

பி.சி. கணேசன்

'எழுத்தறிவித்தவன் இறை வனாகும்!' என்று, ஆசிரியர்களைப் பற்றி பேசுவோரும் எழுதுவோரும் அடிக்கடி குறிப்பிடுகின்றனர். எழுத்தறிவிக்கும் ஆசிரியனை, யாரும் இறைவனாக்க வேண்டாம்! மனிதனாக வாழவிட்டால் — வாழ வகை செய்து கொடுத்தால் போதுமானது.

ஆனால், பொதுமக்களே, ஆசிரியருக்கு மதிப்புக் கொடுங்கள் என்று சொல்லுவதில் எந்த விதமான பொருளும் இருக்க முடியாது. மதிப்பை, மரியாதையைக் கேட்டுப் பெற முடியும் என்று எண்ணுவது பேதமை! அப்படிப் பெற்றாலும் அது மதிப்பாக இராது; நடிப்பாகவே இருக்கும்!

சமுதாயத்தில் ஒரு மனிதன் மதிப்பும் மரியாதையும் பெற நான்கு விஷயங்கள் காரணமாயிருக்கின்றன.

1. பணம்
2. அதிகாரம்
3. அறிவு
4. ஒழுக்கம்

பணமுடையோன் எல்லாமுடையோன்! பணம், அது இருக்கின்ற காரணத்தினாலேயே, அதிகாரத்தை ஆட்டிப் படைக்கின்றது; அறிவு பெறத் துணை நிற்கிறது; அறிவுபெற ஆற்றல் இல்லாதபோது, இருப்பதாகப் பாவிக்கும் உரிமையளிக்கிறது. பணம் படைத்தோரின் சிற்றறிவும் பேரறிவாக விளம்பரம் பெறுகிறது. அதிகாரம் என்ற சொல்லிலேயே அதன் தன்மை விளக்கமாகத் தெரிகிறது. அதிகாரத்திடம் மக்களுக்கு உள்ள பயம் எல்லாம், அதிகாரம் நீதியின் பக்கம் நின்று செயல்படும் என்பதால் அல்ல! நீதியையும் புறக்கணித்துச் செயல்படும் ஆற்றல் அதற்கு இருக்கிறது என்பதால் தான் மக்களுக்கு அதனிடத்தில் அத்துணை பயம்!

அறிவு—ஒருவனிடம் உள்ள அறிவைப் பிறர் உணர அவர்களிடமும் ஓரளவுக்காவது அறிவின் சாயல் இருக்க வேண்டும்; அறிவாளிக்கு அளிக்கப் படுகின்ற மதிப்பும் பிரதிபலன் கருதாமல் அளிக்கப்படும் மதிப்பாகும். ஆனால், அறிவாளியின் தன்மையை பிறர் அறிய காலம் அதிகமாகும். உள்ளத்தோடு

உள்ளம் ஒன்றிப்பழகும் வாய்ப்பும் வேண்டும். ஆகவே, அறிவு மதிப்படையக் காலம் வேண்டும்; கருத்துடையோர் எண்ணிக்கையும் சமுதாயத்தில் மிக வேண்டும்.

ஒழுக்கம் பெறும் மதிப்பு, இயற்கையானது; ஒழுக்கமுடையோரைக் கண்ட மாத்திரத்திலேயே, நமது உள்ளத்திலிருந்து மதிப்பு ஊற்றுபோல் பெருக்கெடுத்து வழிகிறது. எடுத்துக்காட்டாககாந்தியடிகளின் வாழ்க்கையிலிருந்து ஒரு சம்பவத்தைக் குறிப்பிடலாம்! ஆக்ஸ்ஃபோர்டு பல்கலைக்கழகத்தில் உரையாற்ற காந்தியடிகள் ஒருமுறை சென்றிருந்தார். விருந்தினர்கள் பேச வரும்போது எழுந்து நின்று மரியாதை செய்யும் வழக்கம் அங்கில்லை; உட்கார்ந்தபடியே தொப்பிகளைக் கழட்டி மட்டுமே மரியாதை செய்வார்களாம். ஆனால் காந்தியடிகள் சென்றபோது, ஒருவரும் கூறுமலேயே அனைவரும் அவர்களை அறியாமலேயே எழுந்து நின்று மரியாதை செய்தார்களாம். காந்தியை விடப் பேரறிஞர்கள் சென்ற போது ஏற்படாத சிறப்பு அவருக்கு செய்யப்படக் காரணம்...? காந்தியடிகள் வெறும் உபதேசியாக மட்டும் வாழவில்லை! சொன்ன கோட்பாடுகளை முடிந்தவரையில் வாழ்ந்து காட்டினர்.

எனவேதான், ஆசிரியன் சமுதாயத்தில் அந்தஸ்து பெற வேண்டுமானல் பணம், அதிகாரம், அறிவு, ஒழுக்கம் ஆகிய இந்த நான்கிலும் அவன் கவனம் செல்ல வேண்டும். முன்னிரண்டும் ஆட்சி பீடத்தில் விருப்போரைப் பொறுத்தது; பின்னிரண்டும் ஆசிரியனையே பொறுத்தது!

பணத்தைப் பொறுத்தமட்டில் ஆசிரியனுடைய வாழ்க்கைத் தரம் மிகவும் உயரவேண்டும்; மாடுகளும் ஆடுகளும் நல்ல நிலையில் வைத்துக் காப்பாற்றப்படுகின்றனவா என்பதைக் கண்காணிக்கவாவது ஒரு எஸ். பி. சி. ஏ. சங்கம் இருக்கிறது. ஆனால் ஆசிரியனைப் பொறுத்த வரையில்...? வெறும் சம்பளத் தீர்மானங்களைப் போட்டு மட்டும் பயனில்லை; சாதாரணக் குடும்ப வாழ்க்கையில் மட்டுமல்ல—பொது வாழ்க்கையிலும் கூட-அழுத பிள்ளைதான் பால் குடிக்கும்! ஆகவே, ஆசிரியர்கள் தொழிற் சங்க ரீதியில் தங்கள் ஸ்தாபனங்களை அமைத்துக் கொள்ள வேண்டும். இதில் வெட்கப்பட ஒன்றுமில்லை; பத்திரிகைக்காரர்களே தொழிற் சங்க ரீதியில் செயல்பட ஆரம்பித்து விட்டார்களே? பின் ஆசிரியர்கள் மட்டும் அச்சப்படுவானேன்? தொழிற் சங்க ரீதியில் என்று சொன்னவுடனேயே, வேலை நிறுத்தம் யாருடைய நினைவுக்கும் வர வேண்டிய அவசியமில்லை; ஆசிரியன் வேலை நிறுத்தம் போன்ற விபரீத விஷயங்களில் ஈடுபட்டால் மாணவ உலகம் பாழ்படும், கல்வி நிலைமை சீர்கெடும் என்பதைப் பொறுப்பள்ள எவரும் ஒப்புக்கொள்ளுவர். ஆனால் பலம் பொருந்திய தொழிற் சங்கங்களை வைத்திருப்போரே கேட்டவுடன் ஊதியம் பெறும் நிலையில் இருக்கின்ற காட்சியைப் பார்க்கிறோம். தவிர, ஆசிரியப் பிரதிநிதிகளின் எண்ணிக்கை மேல்சபையில் அதிகப்படுத்தப்படுவதோடு கூட, சட்ட மன்றங்களுக்கும் கணிசமான அளவில் அவர்கள் தேர்ந்

தெடுத்து அனுப்பப்பட வேண்டும். ஆனால் அதுமட்டும் போதாது. கௌரவ மாஜிஸ்டிரேட்டுகளாக, பஞ்சாயத்து, நகராட்சி மன்றங்களில் நியமன உறுப்பினர்களாக அவர்கள் நியமிக்கப்படலாம். அப்படிப்பட்ட நிலை ஏற்படின், ஆசிரியர்கள் வாழ்கின்ற இடத்திலேயே அவர்களுக்குச் செல்வாக்கு ஏற்பட வழியுண்டு. அதோடு, கல்வியைப்பற்றி ஆராயும் எந்தக் குழுவிலும் ஆசிரியர் பங்குபெற வாய்ப்பு வெண்டும்!

இந்நிலையெல்லாம் ஆசிரியனுக்கு வர-வந்தாலும் அதற்குரியத் தகுதிபெறஆசிரியர்கள் அறிவையும் ஒழுக்கத்தையும் வளர்த்துக் கொள்ள வேண்டும். ஆசிரியனது அறிவு செம்மையான ரீதியில் வளர, குடும்பக் கவலை அவனை விட்டு நீங்க வேண்டும். வறுமையோடு அவனுக்குள்ள தோழமை ஒழிய வேண்டும். ஆசிரியனுக்கு பஞ்சப்படியோடு புத்தகப் படியாகவும் ஒரு தொகை மாதந்தோறும் வழங்கப்படலாம். குறைவற்ற வாழ்க்கையே ஒழுக்கத்தை விழுமிய முறையில் வளர்க்கும். அறிவும் அந்தஸ்தும் ஏற்பட்டு ஒழுக்கமும் கடமையும் கண்ணெனக் கொண்டு பணிபுரியும் ஆசிரியனே காலத்தின் பாதையில் கருத்துக் கோயில்களை நிர்மாணிக்கும் சிற்பிகள்.

இன்றைய ஆசிரியர்கள் நடமாடும் எலும்புக் கூடுகளாய், தோல்வி மனப்பான்மையின் தூதுவர்களாய், எடுப்பார் கைப் பிள்ளைகளாய், எதையும் கண்டு அச்சப்படுவோராய், அவல வாழ்வு வாழும் நிலை மறைய வேண்டும். வளரும் பருவத்தில் உள்ள மாணவன், ஆசிரியனின் பிரதி பிம்பமாகவே ஆகிறான். சிரித்துச் செழித்த முகமுடைய ஆசிரியன் சிறந்த மாணாக்கர்களைப் படைக்கிறான். அழுமூஞ்சி ஆசிரியன், அவன் படைக்கும் மாணவ உலகம்......அந்தோ! எண்ணிப் பார்க்கவே அச்சமாயிருக்கிறது.

சாக்ரடீசின் மாணவன் பிலேட்டோ, பிலேட்டோவின் மாணவன் அரிஸ்டாட்டில், அரிஸ்டாட்டலின் மாணவன் அலெக்சாண்டர் .......பட்டியல் எப்படி? ஆசிரியர்கள் தங்களுடைய தூய பொறுப்பைத் தட்டிக் கழித்துவிட முடியாது. நம்பிக்கையோடு வாழ அவர்கள் கற்றுக் கொள்ள வேண்டும். அச்சத்தால் இருக்கின்ற உரிமையையும் அவர்கள் இழந்துவிடக்கூடாது. ஆசிரியர்கள் அவர்கள் செய்யும் தொழிலில் பெருமை கொள்ள வேண்டும். வருமானம் இல்லாத வக்கீலும். பட்டினி கிடக்கும் ஓவியனும், உழைக்காமல் உண்ணும் மிராசுகளும் அவர்களது நிலையை எண்ணிப் பெருமையோடு பேச, அறிவின் தூதுவர்கள் வருங்கால எண்ணத்தை எண்ணிய வழியில் திருப்பிவிடும் சூத்திரக் கயிற்றைக் கையிலே கொண்டோர், ஏன் செய்யும் தொழிலை சிறுமை படைத்ததாக எண்ணி வெட்கப்பட வேண்டும்?

நிறைந்த அறிவு, நேரிய ஒழுக்கம், நெஞ்சத் துணிவு, நம்பிக்கை, செய்கின்ற பணியிலே பெருமை- இந்தக் கூட்டுச் சரக்காக ஆசிரியன் விளங்க வருங்கால சமுதாய நலனிலே அக்கறை கொண்ட அரசாங்கமும் சமுதாயமும் ஆவன செய்ய வேண்டும்!

# பிழை-திருத்தம்!

அப்பாவின் கைப்பாவை குப்ப சாமி—
    அழகான கோமதிக்குத் தாலி கட்டித்;
தப்பாமல் முப்பது போன் தந்தா லன்றித்
    தன்னகத்துக் கன்னவளை அழைத்துக் கொள்ள
ஒப்பாதேன் மனமென்று மாம னார்க்கு
    உரைத்துவிட்டு, ஊர்திரும்பி ஊமை யானான்!
எப்போதும் மற்றவரை ஏற்றி விட்டு
    இருந்தஇடம் பெயராத ஏணி போன்ற

செல்லப்பன்

ஆரம்ப ஆசிரியர் பெற்றெடுத்த
ஐந்தாம்பெண் கோமதிதான் என்ன செய்வாள்?
கூரம்பு நெஞ்சினிலே பாய்ந்த தைப்போல்
கொடுமைமிகும் நிபந்தனையால் குமைந்து போனாள்!
"ஊர்வம்பு பேசுவதைத் தாங்க மாட்டேன்!
உயிர்சிறிது; மானந்தான் பெரிதாம்! என்பால்
பேரன்பு சுரந்திடுவீர்! பெருமை யோடு
பெரியமனங் கொண்டென்னை உரிமை செய்வீர்!"
என்றெழுதிக் கண்ணீரில் ஊற வைத்து
எத்தனையோ கடிதங்கள் அனுப்பிப் பார்த்தாள்!
ஒன்றிலுமே பயனில்லை; ஓய்ந்து போனாள்!
உடன்பிறந்தாள் துயர்கேட்ட மூத்த மங்கை—
சென்றவளைத் தன்வீட்டிற் கிட்டு வந்து
சிறியதொரு தனியறையில் இருக்கச் செய்து,
அன்றிரவே கணவனையும் அனுப்பி, அந்த
அப்பாவி மணமகனை அழைத்து வந்து
சிறப்பான விருந்தெல்லாம் நடத்தி வைத்து;
சிறிதுநாள் கணவனுடன் அப்பாற் சென்றாள்!
முறைப்பான மாப்பிள்ளை மூன்றாம் நாளே
முரடான தந்தைக்கு முடங்கல் தீட்டி—
"அறப்பாதை தவறிநின்றேன் இதுநாள் காறும்;
அப்பாசொல் முதன் முறையாய் மீறிஇந்தப்
பிறப்பாலே உண்டான பயனைக் கண்டேன்!
பிழை தெரிந்தேன்; வருகின்றோம் இன்றே!" என்றான்!

கருணானந்தம்




நீலமுகில் திரளை — கோல மயில் உருவை—சோலை எழிலை —பாலை மணற்பரப்பைத் தூரி கையால் படைக்கின்ற ஓவியன்!

அணிதேர்ப்புரவி — மணிமுடி மன்னன் — ஆடலழகி—ஊடும் பாவை—அவன் கைவண்ணம் காட்டுகின்ற சித்திரங்கள்!

ஆடை நெய்வோன் — பானை தருவோன் — கூடை முடைவோன்—குமுறும் நெஞ்சினன்-ஏழை மனிதன் — இவையெல்லாம் அவன் எண்ணத்தை எதிரொலிக்கும் ஓவியங்கள்!

அரசியலார் — அறிஞர் மன்றம்-கலைஞர் குழுக்கள்-அனைத்திலுமே அவனுக்குச் சிறப்புண்டு! அவனைப்போல் ஓவியனை எதிர் நிறுத்த யாராலும் ஆகாதென்று; "ஆதவன் ஒருவன்தான்; இந்த ஓவியனும் ஒருவன்தான்" எனச் சொல்லி மகிழ்ந்திருந்தார். ஆண்டுதோறும் தங்கத்தால் சட்டமிட்டு, வைரத்தால் வாழ்த்தெழுதி மன்னவனும் பாராட்டுப் பரிசளிப்பான்! கொடுத்திட்ட பரிசுதனை அடுத்து வந்து மன்னன் பார்க்கவர் விரும்புவான் என்று படை எடுத்திட்ட ஏழைகள் பால் வழங்கிடுவான்; வைரத்தைத் தங்கத்தைப் பங்கு செய்து!

முழுத்தமிழர் ஆட்சியெனில் ஏழைகளின் முறையீடு-குறைபாடு இல்லாது இருந்திருக்கும்; எவனோ பல்லவப்பெருமன்னன்; கலையிலே வல்லவன் எனப் பெயர் பெற்றோன் ஆளுகின்ற காலமது!

குறையில்லா சித்திரங்கள் குவிக்கின்ற தமிழனுக்கு ஓர் குறையுண்டு!

மலை தழுவி மேகம் மயங்கியிருத்தல் போல் வரைகின்ற நேரத்தில்—தன் தோள் தழுவியொருத்திப் பின்நின்று சுவைத்திட்டால்—அந்த இன்பம் கிடைத்திட்டால்-என எண்ணி ஏக்கத்தால் சுழலுகின்ற ஆடவனின் உருவங்கள் ஆயிரம் வகை தீட்டிவிட்டான்!

இரு புரு ஒன்றையொன்று மரக்கிளையில் நெருங்குதல் போல் எழுதுகோல் அசைகின்ற தருணத்தில்—அவன் இதழ்

மு. கருணாநிதி

நெருங்கும் இதமொன்று இல்லையே எனக் குறைப்பட் பட்டான்!

காட்டாற்றின் வேகத்தை எழுதி விட்டான் வண்ணத் தால்!...எண்ணத்தை உலுக்கு கின்ற வேகம் காட்டும் காத லாற்றை வரைவதென்றால் கவி ஞருண்டோ?

விலைபோட்டுக் கலைப் படைப் பை வாங்குதற்குப் பெண் ணொருத்தி வந்திட்டாள் ஒரு நாள்!

திருநாள் இதுவென்று மகிழ்ந் திட்டான்! பேச்சிடையேகாதல் வலை போட்டாள்! இலைபோட்டு அழைத்த பின்னர் உணவருந் தப் பசிகாரன் தடையா சொல் வான்? துணைவர்களாய் விடு வோமென்று துணிந்திட்டார், சித்திரத்தில் சிந்தை தந்தேன் எனச் சொன்னாள் பெண் ணழகு! இத்தினத்தில் இன்பம் பெற்றேன் எனச் சொன்னான், அன்னவனும்!

ஓவியம் வாங்க வந்தேன்; உயிர் ஓவியம் பெற்று விட் டேன்...ஒன்பது நாள் கழித்துத் திரும்ப வருகின்றேன்; ஒப்பு தலைப் பெற்றோரிடம் பெற்று விட்டால் உந்தன் தோள் தழு விக் கிடப்பதற்கு அட்டியில்லை எனச் சொன்னாள். அருவியோ ரம் மகிழ்ந்திருப்போம் வா என் ருன். சம்மதித்தாள்.

வெண்மேகக் குழு சரிவது போல் வீழ்கின்ற அருவி, கொக்கு நிறக் கூந்தல்தனை உவமை காட்டும் பேரழகை சுவைத்தவாறு சுவைத்திருந் தார்!

''அத்தான்'' என்றாள்; ''ஏன்'' என்றான்! ''அடியாள் அருவித னில் குளித்துவிட்டு ஆடையெல் லாம் நனைந்திருக்க அமர்ந்திருக் கும் விதத்தினிலே படமொன்று எழுதுவீரா?'' எனக் கேட்டாள். அப்படமே திருமணப் பரிசு என்றான்; முத்தமிட்ட இதழ் திறந்து! போய் விட்டாள்; அந் தப் பொழுதெல்லாம் இன்பம் நல்கி விட்டு!...

○

இன்பவல்லி அருவியிலே நீராடி அமர்ந்திருக்கும் காட்சி தனைத் தீட்டுதற்குக் கோல் எடுத்தான். பால் வகுத்துக் குறள் வகுத்த வள்ளுவனும் காணாத பேரழகைப் பெண்வடி வில் கண்டு விட்டோம் எனக் களித்து எழுதலுற்றான்!

விழியழகை—விதவிதக் கதை பேசும் விதமாக சித்தரித்தான்! இதழ்ப் பொலிவைத் தீட்டும் போது தூரிகைக்கு முத்தம் தந்தான்! நீராடி அமர்ந்திருக் கும் படமன்றோ; மேலாடை மட்டும்தான் உண்டு; அதனாலே இளமைதனைக் காட்டுகின்ற உலலெடுப்பை அழகாக வரைந்துவிட்டு மயங்கிவிட் டான்! போட்டியிட்டுத் தோற் றதாலே தலை குனிந்த வித மாகப் பொற்குடமொன்றை அவள் கையினிலே தந்தான்! பரிமளத் தூள்பெட்டியொன்று வலக்கையில்!...எழுதி முடித்து விட்டு, தொழுது நின்றிருந் தான்; காதல் வரும் திக்கு நோக்கி!

○

ஒன்பது நாள் ஆனதாலே வந்து விட்டாள்; ஓடோடி அணைத்துக்கொண்டான். 'நீராடி அமர்ந்திருக்கும் சித்தி ரம் தயார்' என்றான். பெற்றோ ரும் சம்மதித்தார் எனச் சொன் னாள். பேரின்பம் இதுவன்றோ

எனச் சொல்லிப் பூரித்தார், ஓவியத்தைக் காண்பதற்கு ஒய்வு பெற்று கலைக் கூடத்துள் நுழைந்தார். தன்னைப் போல் அணுவளவும் வேறுபாடின்றிப் பொன்னைப் போல் இருக்கின்ற மேனியையும் எழுதிக் காட்டி, பொற்குடத்தைப் போட்டிக்கு நிறுத்தி வைத்து தீட்டியுள்ள சித்திரத்தை வியந்தாள்! மகிழ்ந்தாள்! அவ்விடமே

இருவருமே ஒருவராய்த் தழுவிக் கொண்டார்.

திடுமெனக் குறும்புச் சிரிப்பொன்றை உதிர்த்து விட்டு; "தோற்றுவிட்டீர் அத்தான், இந்தத் தோகையிடம்!" என்றாள். திகைத்துவிட்டான்.

"நீராடி எழுந்துவந்து நனைந்து போன கூந்தலுடன் பாறையினில் அமர்ந்திருக்கும் பெண்ணுக்கு நெற்றியிலே குங்குமத் திலகம் ஏதத்தான்?" எனக் கேட்டு நகைத்து விட்டாள்!

தழுவி நின்ற பிடியைவிட்டு ஓவியனும் நழுவி விட்டான்... பின் தொடர்ந்தாள்... காணவில்லை... நெடுந் தொலைவுதேடிச் சென்றாள்... பின்னர் கலைக்கூடம் திரும்பி வந்தாள்... கலைக்கூடம் இருந்த இடம் தீக்காடாய் இருத்தல் கண்டாள்!... ஓவியனைக் காணுமல் குரலெடுத்துக் கூவி அழுதாள்; ஓடிச் சென்று அருவியோரம் நின்று பார்த்தாள்...

அருவியிலே மனித உருவொன்று மிதத்தல் போல் தெரிந்ததாலே குதித்து விட்டாள்... அவனேதான் பிணமாக மாறிவிட்டான்! மண நாளைக் குறித்து வந்த மங்கை நல்லாள் அவனோடு சேர்ந்து கொண்டாள்! குளிக்கையிலே கோதையின் குங்குமத்தைஅழிக்காதோ அருவிநீர் எனக் கேட்டாள் அப்போது! இருவர் உயிர் அழித்துவிடும் அருவிநீர் எனத் தெரிந்தால் கேட்டிருக்க மாட்டாள்!...

●●●

## சுலபமான வழி!

பிரான்சு நாட்டின் தலைசிறந்த ஆசிரியர் விக்டர் ஹியூகோ, 'ஏழைபடும்பாடு' போன்ற உலகப் புகழ்பெற்ற நவீனங்கள் எழுதியவர். அவர் 1848-ம் வருஷம் பிரெஞ்சு சட்டசபையான சேம்பரின் ஒரு அங்கத்தினராயிருந்தார். சபையில் ஏதோ விவாதம் நடந்து கொண்டிருந்தது. ஹியூகோ அதைச் சற்றும் கவனியாமல், பக்கத்தில் இருந்த ஒரு நண்பரோடு சம்பாஷித்துக்கொண்டேயிருந்தார். விவாதம் முடிந்ததும் ஓட்டெடுத்தார்கள். சம்பாஷணையிலே ஈடுபட்டிருந்த ஹியூகோ என்ன விவாதம் என்பதைக் கவனியாமலே, கைதூக்கினர்.

"கடைசியில் பேசினரே, அந்தப் பிரசங்கி சொன்னதைக் கேட்டீர்களா?" என்று கேட்டார் நண்பர்.

"இல்லை" என்றார் ஹியூகோ. "விவாதத்தைக் கவனியாமல் கைதூக்கி விட்டீர்களே?" என்றார் நண்பர்.

"அது ஒன்றும் கஷ்டமில்லை. அதோ உங்களுக்கு முன்னே மூக்குக்கண்ணுடி போட்டுக்கொண்டு உட்கார்ந்திருக்கிறாரே ஒரு குள்ளமான மனிதர்; அவர்தான் எனக்கு வழிகாட்டி. அவர் எழுந்திருந்தால், நான் உட்கார்ந்திருப்பேன். அவர் உட்கார்ந்திருந்தால், நான் எழுந்து கைதூக்குவேன், நான், அவர் இரண்டு பேருக்குமாக அவரே பிரசங்கங்களைக் கேட்டுவிடுகிறார்," என்றார் ஹியூகோ.

—'சரசுவதி'

# சட்ட சபையில் முதல் முழக்கம்

[2—5—57 அன்று சென்னை சட்டசபை சபாநாயகராக திரு. யு. கிருஷ்ணராவ் தேர்ந்தெடுக்கப்பட்டதை ஒட்டி அறிஞர் அண்ணா ஆற்றிய உரையின் சுருக்கம்.]

"மதிப்பிற்குரிய அவைத் தலைவர் அவர்களே! தாங்கள் இந்தச் சபையின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதில் பெருமகிழ்வடைகிறேன்.

தாங்கள் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்க வேண்டும்; ஆனால் போட்டி தவிர்க்க முடியாத ஜனநாயகக் கடமையாகி விட்டது. ஆனாலும் போட்டி, தங்கள் புகழை உயர்த்தும் வகையிலேயே முடிவுற்றிருக்கிறது.

தங்களின் அறிவாற்றலை நான் மாணவப் பருவமுதல் அரசியல் நடவடிக்கைகளைக் கவனித்து வரும் இன்றுவரை அறிந்து வருகிறவன். தங்களின் நேர்மை இந்தச் சபையின் கண்ணியத்தையும், பெருமையையும் நிச்சயம் காப்பாற்றும் என்ற உறுதிப்பாடு எங்களுக்கு இருக்கிறது.

தாங்கள் ஒரு உயர்ந்த குடும்பத்தில் தோன்றியவர்கள். தங்கள் வட்டாரத்தில் ஈடு இணையற்றபுகழுடன் விளங்கும் டாக்டராவீர்கள்.

தாங்கள் மருத்துவத் துறையில் பெற்றுள்ள அறிவையும் ஆற்றலையும் நாங்கள் அறிவோம். அதில் யார் இளைத்தவர்களோ அவர்களுக்கு மருந்து கொடுத்து பலம் பெறச் செய்யும் தாங்கள், அரசியல் துறையிலும் இளைத்தவர்களிடம் அன்புகொண்டு நல்லதொரு அரசியல் மருத்துவராகவும் விளங்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

நம் நாட்டில் ஜனநாயகம் குழந்தைப் பருவத்தில் இருக்கிறது. அதிலும் நாங்கள் இதுபோன்ற பாராளுமன்ற ஜனநாயக அமைப்புகளின் நடவடிக்கைகளுக்குப் புதியவர்கள்—அனுபவமில்லாதவர்கள். அந்த வகையில், குழந்தை தவறு செய்துவிட்டால்—குறும்புத்தனமாக நடந்துகொண்டால் — தாய், அதிகமாக அடித்துவிடாமல் கண்டித்து, கட்டிஅணைத்துக் கொள்வதுபோல், எங்களையும் தாங்கள் நடத்தவேண்டும்; தங்கள் புன்சிரிப்போடு கூடிய கட்டளையினால் திருத்த வேண்டும்; பயன்படத்தக்க ஜனநாயக வாதிகளாக ஆக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அறிஞர் அண்ணா

சிறு சிறு தவறுகள் ஏற்பட்டு விட்டால், அவற்றைத் திருத்துகிற அதிகார பீடத்தில் இன்று தாங்கள் அமர்ந்திருக்கிறீர்கள். எதிர்க் கட்சியினர் என்றால், நாங்கள், சர்க்கார் செய்யும் எதையும்—எல்லாவற்றையும் எதிர்த்துக்கொண்டிருப்போம் என்பதல்ல!

உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால், எதிர்க்கட்சி என்பது மாப்பிள்ளைத் தோழனுக்கு ஒப்பிடக்கூடியது. ஏன் எனில் தோழன், மாப்பிள்ளையின் கையை இடைவிடாமல் பிடித்துக்கொண்டிருப்பதற்குக் காரணம், 'காரியங்கள் ஒழுங்காக நடைபெற வேண்டும்,' என்ற நல்லெண்ணம்தான். அதுபோல நாங்கள் சர்க்கார் காரியங்கள் ஒழுங்குற நடைபெறவேண்டும் என்பதற்குத்தான் எதிர்க் கட்சியில் இருக்கிறோம்.

சட்டசபையில், நாங்கள் புதியவர்கள்—அனுபவமில்லாதவர்கள் என்பது உண்மைதான் என்றாலும், அந்த அனுபவத்தை நாங்கள் உரிய காலத்தில் பெறத் தவறிவிட்டவர்களே தவிர, அதனைப் பெறவே முடியாதவர்கள் அல்ல.

நாங்கள் ஒரு விசித்திரமான அரசியல் கூட்டத்தைச்சேர்ந்தவர்கள் என்பதை நீங்கள் அறிவீர்கள்; இந்தச் சபையும் நன்கு அறியும். நாங்கள் அப்படி விசித்திரமான அரசியல் கூட்டத்தவராயிருப்பதற்கு நாட்டில் உள்ள விசித்திரமான நிலைகள்தான் காரணமாகும்.

நல்ல மருத்துவராகிய தாங்கள், நோய்களின் வெளித் தோற்றத்திற்கு மருந்து தந்து வருவதுடன் திருப்தியடையமாட்டீர்கள்; நோயின் மூல காரணத்தையும் அறிந்து அதற்கொப்ப மருந்து தருவீர்கள். அதுபோலவே, நாட்டிலுள்ள பிரச்சினைகளின் வெளித் தோற்றத்தை—அறிகுறிகளை மட்டும் கண்டால் போதுமானதல்ல; அவற்றிற்கான மூல காரணத்தையும் அறிந்தாக வேண்டும். நல்ல மருத்துவராகிய தாங்கள், அறிந்த ஒன்றே இது! ❀

## சாமர்த்தியமான வியாபாரி!

எப்பேர்ப்பட்ட சாமானையும் விற்றுவிடக் கூடிய மகா திறமையுள்ள ஒரு வியாபாரிக்கு, வாழ்க்கையில் என்னவோ வெறுப்புத் தட்டியது. அவர் ஒரு ஆற்றுப் பாலத்தின் மீது ஏறி, நீரில் குதித்து சாக ஆயத்தமானார்.

ஒரு போலீஸ்காரன் ஓடி வந்து, "ஓய்! குதித்து விடாதே, தற்கொலை கூடாது" என்று தடுத்தான்.

"ஏன் கூடாது?" என்றார் வியாபாரி.

பத்து நிமிஷ நேரம் வியாபாரிக்கும் போலீஸ்காரனுக்கும் ஏதோ பேச்சு நடந்தது. பின்பு- இருவரும் நீரில் குதித்து விட்டனர்.

# மூன்று காதலர்கள்

பன்மொழிப்புலவர். கா. அப்பாத்துரை

'புருவம் கறுப்பொழியப் பிள்ளை கறுப்பில்லை; விழிகள் கறுப் பொழியவேறெதும்கறுப் பில்லை' என்றுதான் பெண்களின் மலர் மேனியைக் கவிஞர்கள் வருணிப்பார்கள். ஆனால் காயாம்பூ இதற்கு விலக்கான ஒரு காரிகையாய் இருந்தாள். புருவத்துக்குரிய கருமை யழகு மட்டுமன்றி, வில் போன்ற வளைவு நயமும் அவள் மேனியெங்கும் படர்ந்து, அவளுக்குக் கண்கொள்ளாக் கவர்ச்சி அளித்திருந்தது. கருவிழியின் கருமை ஒளியும் உயிர்த் துடிப்பும் அவள் அங்கங்கள் ஒவ்வொன்றிலும் நிலவிக் காண்பவர் அமைதிக்குப் பங்கம் விளைவித்து வந்தது. அவள் சொற்களில் புருவத்தின் வளைவு நயமும், விழிகளின் கூர்மையும், துடிப்பும் ஒருங்கே செயலாற்றின. விழிகளில் தெறித்த குறும்பு அவள் சொற்களிலும் தெறித்தாடிற்று.

விளையாட்டுப் பருவத்திலே அவள் எப்போதும் ஒரு சிறு பெண் படைக்குத் தலைவியாக விளங்கினாள்: அதே சமயம் மற்ற சிறுவரை அவள் சும்மா விடுவதில்லை. 'அவள் என்னைக் கிள்ளிவிட்டாள். இவள் என்னை அடித்து விட்டாள்,' என்று அவள் ஒருபோதும் யாரைப் பற்றியும் பெரியவர்களிடம் குறை கொண்டு சென்றதில்லை. ஆனால் 'காயாம்பூ என்னைக் கிள்ளிவிட்டாள்; குளத்தில் தள்ளி விட்டாள்,' என்று சிலபலர் அவளைப் பற்றி ஓயாது குறை கூறுவதுண்டு. அதே சமயம் அவள் தன் நடை உடை கவர்ச்சியாலும், கலகலப்பான பேச்சாலும் பெரியவர்கள் கோபத்தைக்கூட எளிதில் மாற்றி, வாலிகண்டபுரத்து மக்களிடையே ஒரு சிறிய இளவரசி அல்லியாகத் திகழ்ந்தாள்.

பள்ளி கடந்து, கல்லூரி சென்றபோதும் காயாம்பூவின் குறும்பு வளர்ந்ததே அன்றி, குறையவில்லை. திருமணமாகாத ஆசிரியருக்கு அவள் திருமணக் கடிதமும் மணவாழ்த்துப் பாடல்களும் எழுதி மாணவ மாணவியரிடையே பரப்பிவிடுவதுண்டு. காதல் நாடகத்தில் ஈடுபட்ட பெண்டிர்முன் ஆண் வேடத்தில் தோன்றியும், அத்தகைய ஆடவர்களைப் போலக் கடிதங்கள் அனுப்பி அந்தப் பெண்களைக் கிண்டல் செய்வாள். ஆனால் அதன் பயனாகவே கல்லூரித் தலைவர் கோபத்துக்கும் ஆளாகி, அவள் தேர்வுக்கு முன்பே வீட்டுக்குத் திரும்ப நேர்ந்தது.

அவள் அழகின் கவர்ச்சியில் ஈடுபட்டு, அவள் திரும்பிய திசையி லெல்லாம் ஓடாத இளைஞர் இல்லை. ஆனால் எவரும் அவளைத் தம் வசப்படுத்த முடியாமல் திண்டாடினர். ஆயினும் அவள் கல்லூரியை விலக நேர்ந்தபோது, அவளுக்காகவே கல்வியைத் துச்சமென்று உதறித் தள்ளிவிட்டு, வாலிகண்டபுரமே தாம் கண்ட இன்ப உலகமென்று கருதித் திரிந்த இளைஞர் மூவர் இருந்தனர். அவர்களில் ஒருவன் அவளைப் போலவே வாயாடி-அவன் பெயர் மருது. மற்றொருவன் மதுரை—அவன் வாய் பேசாமலே அவள் குறிப்பறிந்து நடந்து வந்தான். மூன்றாவது இளைஞன் செங்கோடன் என்பவன்—அவன் பெருஞ் செல்வத்

துக்கு உரியவன். அவனுடன் உறவுகொள்ளப் பெண்களைப் பெற்ற செல்வத் தாய்தந்தையர் மிகப் பலர் காத்துக் கிடந்தனர். ஆனால் காயாம்பூவின் நிழலாக, அவன் அவளைவிட்ட கலாமலும், அவளை முற்றிலும் அணுகாம லும், அவளைச்சுற்றி வட்ட மிட் டான்.

கல்லூரியிலும் சரி, வாலி கண்டபுரத்திலும் சரி, காயாம்பூ வுக்குப் பெண்களிடம் போட்டி இருந்ததில்லை. ஆடவர்களை அவள் சிறிதும் சட்டை செய்த தில்லை. ஆனால் கல்லூரியை விட்டு வாலிகண்டபுரம் வந்த பின் அவள் நிலையில் ஒரு மாறு தல் ஏற்பட்டது. அவள் சென்ற விடமெல்லாம் அவளுக்குரிய மூவகை நிழல்களாக மருது, மதுரை, செங்கோடன் ஆகிய மூவரும் சென்றனர். மருதுவின் வாய்த்துடுக்கும் கலகலப்பும், மதுரையின் இன்னமைதியும், செங்கோடனின் பணமும் அவளைச் சுற்றி ஒரு நடக்கும் கோட்டையாக அமைந்தன. அவள் விரும்பினாலும் வெறுத் தாலும், சிரித்தாலும் சினந் தாலும் இந்தக் கோட்டை அவளை விட்டு விலக மறுத்தது. "என்னைச்சுற்றி இப்படி ஏன் ஓயாமல் வட்ட மிடுகிறீர்கள்?" என்று காயாம்பூ அடிக்கடி அலுத்துக் கொள்வதுண்டு. அச்சமயங்களில் செங்கோடன் முகத்தைப் பார்க்க அவளுக்கு இரக்கமாக இருக்கும். 'நான் வட்டமிடவில்லை. நேரே உன்னை யடையப்போகிறேன்' என்று கூறுவதுபோலிருந்தது அவன் குறும்புப்பார்வை. ஆனால்மருது பேச்சுக்கு எதிர்ப் பேச்சுக் கொடுத்து வாதமிடுவான். "நீ சாட்டையாக இருந்து சுழற்றி விட்டால் பம்பரம் ஏன் சுழ லாது; வட்டமிடாது? நீ பேசாமல் என்னைத் திருமணம் செய்துகொள். அதுதான் மற்ற இருவரிடமிருந்தும் தப்பவழி!" என்பான்.

## கவனம்..!

பெண்: (கடைக்காரனிடம்) ஏனய்யா; விலை உயர்ந்ததென்று சொல்கிறாயே; இந்தத் துணி வெளுத்து விடுமா?

கடைக்காரன்: (வேறு எங்கேயோ கவனமாக) ஆமாம்; மிக அழகாக வெளுத்துவிடும்!

மதுரையும், செங்கோடனும் காயாம்பூவிடத்தில்தான் வாய் பேசவில்லையே தவிர, தமக்குள் ளும் மருதுவுடனும் ஓயாது பூசலிடத் தயங்கவில்லை. "காயாம்பூ ஒரு வாயாடியை ஏற்கப்போவதில்லை. உன் னுடன் ஓயாது வாயாட அவ ளால் முடியாது. அவள் என் னிடம்தான் உண்மையில் காதல் கொண்டிருக்கிறாள் என் பது எனக்குத்தெரியும். ஆகவே நீங்கள் இருவரும் அவளை என் னிடமே விட்டுவிட்டுத் திருமண வாழ்த்துக்குத் தயாராயிருங் கள்," என்று மதுரைபேசினான். செங்கோடன் இதை மறுத் துரைத்தான். "வாய்ப் பேச்சும் சோறு போடாது. காதலும் வயிறு நிரப்பாது. காயாம்பூ வுக்கேற்ற இன்பமாளிகையும் மற்றவைகளையும் நான்தான் அளிக்கமுடியும். ஆகவே அவள் என்னைத்தான் மணக்கப்போகி றாள். நீங்கள் வயிறு நிரம்ப மண விழாவில் உண்டு, வாய் நிறைய வாழ்த்திவிட்டுப் போக லாம். வேறு மனக்கோட்

டைக் கட்டாதேயுங்கள்,'' என்பான்.

மூன்று காதலரின் போட்டிப் பூசல்கள், வாத எதிர்வாதங்கள், மூன்று வகையான காதல் பூசனைகள்—சில சமயம் காயாம்பூவுக்கு நேரப் போக்காக அமையும். ஆனால் அவையே பல தடவை அவளுக்குத் தீராத் தொல்லையாகவும் இருந்தன. அவள் கைக்குட்டை கீழே விழுந்து விட்டால், அது மண்ணில்மிதிபட்டு இருப்பதையும் பாராமல் சண்டையிட்டுக் கொள்வர். இறுதியில் மூவரில் ஒருவர் கையிலிருந்து அழுக்கடைந்து, தும்பு தும்பாகக் கிழிந்த உருவிலேயே கைக் குட்டை அவள் கைக்கு வந்து சேர நேரும். அவளுக்கு நீர் வேட்கை ஏற்படும்போது, மூவரும் சென்றுதான் கொண்டுவர வேண்டுமாம்! நான்தான் கொண்டு வந்து கொடுக்க வேண்டும்—என்று ஒரே கிண்ணத்தைக் கைப்பற்ற மூவரும் போட்டியிடுவர். இறுதியில் அவள் கையில் வெறும் கிண்ணந்தான் வந்து சேரும். அதில் இருந்த நீர் முழுவதும் போட்டிப் பூசலுக்கிடையில் நிலத்திலும் மூவர் உடைகளிலும் சிந்திப் போய்விடும்.

காயாம்பூ மூன்று காதலர்களில் எவரிடமும் தனிப் பாசம் காட்டவில்லை. எவரையும்தனிப் படப் பகைக்கவும் இல்லை. இதனால் மூவர் போட்டிகளும் என்நாளும் போட்டிகளாகவே இருந்தன. அவள் தோழியர்களுக்கு இங்கிலை என்றும் காசில்லாப் படக்காட்சி—நாடகக் காட்சியாய் அமைந்தது. எல்லோரையும் நையாண்டி செய்த அவளைத் தோழியர் நையாண்டி செய்யத் தொடங்கினர். ''காயாம்பூ திருமணம் செய்துகொள்ளப்போவதில்லை. மூன்று காதலர்களுடன் என்றும் கன்னியாகவேதான் கழிக்கப் போகிறுள்,'' என்று அவர்கள் எங்கும் புறங்கூறத் தொடங்கினர்கள். மூவரில் ஒருவரும் அவளைவிட்டு வேறு பெண்ணை நாடவில்லையாதலினுல் அந்தப் பேச்சையெல்லாம் நம்பினர்கள். 'மூன்று காதலர்களைக் கொண்ட வாடாத கன்னி மலர்' என்ற தொடர் காயாம்பூவின் வாழ்வை எட்டிக் கொண்டது. அவள் எவ்வளவு உதறித் தள்ள முயன்றும், அது அவளை விட்டு விலக மறுத்தது.

''உங்கள் மூவரில் எவரையும் நான் மணம் செய்துகொள்ளப் போவதில்லை. நீங்கள் இப்படி என்னைச் சுற்றி அலைய வேண்டாம்,'' என்று அவள் ஒருநாள் மூவரையும் பார்த்துச் சீறினுள்.

''அப்படியானுல் நீ யாரை மணம் செய்யப் போகிருய்?'' என்று கேட்டான் மருது.

''அது என் பிரியம். உனக்கு அதுபற்றி என்ன கவலை?'' என்று சாடினுள் காயாம்பூ.

''என்னைத் தவிர வேறு யாருக்கு அதுபற்றிய கவலைக்கு உரிமை உண்டு. வேறு எவன் உன்னை அணுகினுலும்,மூவரும் பொங்கி,போட்டியை நிறுத்திக் கொண்டு அவனைக் கொன்றெழித்துவிடுவோம்,'' என்ருன் மருது.

அவர்கள் போட்டி வாழ்வில் முதல் தடவையாக மதுரை இதை ஆமோதித்தான். செங்கோடன்கூட அதற்கு ஆதரவும் தெரிவித்தான்.

மூவரின் ஒற்றுமையைக் கண்டு காயாம்பூ நகைத்தாள். ''சரி, அப்படியானல் நான் ஒருவரையும் மணம் செய்யப் போவதில்லை!'' என்ருள். ஆனல் அவள் தன் தவறை அடுத்த கணமே உணர்ந்தாள். 'மூன்று காதலர்களைக் கொண்ட வாடா மலர்க் கன்னி'' என்ற அவள் பெயருக்குப் புத்துயிர் ஏற்பட்டு விட்டது. ''வாடா மலர்க் கன்னிக்குரிய மாருத இளம் காதலர்களாகவே நாம் ஓயாது சுற்றுவோம்'' என்று மூவரும் ஒருங்க குரல் எழுப்பினர்.

ஊராரும் காதலரும் முற்றிலும் ஒற்றுமையாய்த் தனக்கு இப்படிப் பெயர்சூட்டிவிட்டது கண்ட காயாம்பூவின் உள்ளம் அனைவர்மீதும்பொங்கிக் குமுறி எழுந்தது. 'மூவருள் யாரையும் மணம் புரிந்துகொள்ள மாட்டேன்' என்ற பல்லவியை அவள் மாற்ற எண்ணினுள். திடீரென ஒருநாள் இது ஒரே விசித்திரமாக அவள் வாயிலிருந்து தெறித்தது.

''மூவரும் ஒன்ருக ஏன் போட்டி யிடுகிறீர்கள்? மூவரையும் ஒருங்கே எப்படி நான் மணந்துகொள்ள முடியும்? முறையாக வாருங்கள். ஒருவர் பின் ஒருவராக மணந்துகொள்கிறேன். ஆனல் ஒருவர் வாழ் நாளில் மற்ருெருவரைமணந்து கொள்ள முடியாது,'' என்ருள்.

இப்போதும், கூறிய மறுகணமே அவள் நாவைக் கடித்துக் கொண்டாள். 'ஐயோ! இவ்வளவு லேசாகச் சொல்லி விட்டேனே!' என்று' அவள் அங்கலாய்த்தாள்.

அவள் வாசகங்களுக்கு—மிக மோசமான வசை வாசகங்களுக்குக்கூட — இப்போதும்

இரண்டு எதிர்பாராத பயன்கள் இருந்தன. ஊரார் களித்தின்புறும் புதுமைச் சுவை—அவளையே நையாண்டி செய்து இன்புறும் நகைச்சுவை—அதில் இருந்தது. அத்துடன் அந்த வசைக்கு இலக்கான காதலர்கள் மூவரும் மற்றவர்களைவிட மிகுதியாக அதில் ஈடுபட்டு மகிழ்ந்தனர். ஆனல்—அது, இதைக் கூறியவள் உள்ளத்தைச் சுட்டது.

காதலர் மூவரும் அந்த வாசகத்தை அவள் முன்னும், தம்மிடையேயும் அதைத் திரும்பத் திரும்பக் கூறி மகிழத் தயங்கவில்லை. ஊரார் அனைவரும் அதைக் கொண்டு அவளையும் நம்மையும் நையாண்டி செய்த போதுகூட அவர்கள் ஒரு சிறிதும் அதில் மகிழ்ச்சி குன்றவில்லை. ஏனெனில் அந்த வாசகத்தில் மறைந்திருந்த ஒரு நுட்பம் அவர்களுக்கு நகைச்சுவையையும் இன்பத்தையும் தராதிருக்க முடியவில்லை.

அவர்கள் மூவருள் ஒவ்வொருவரையும் அவள் வெறுக்காது ஏற்கச் சித்தமாயிருந்தாள்—எல்லோரும் இதை எண்ணி

எண்ணியே வாசகத்தின் கோர முடிவை மறந்திருந்தனர்.

மூவரையும் அவள் ஓரளவு விரும்ப முடிந்தது—இதுதான் அவர்கள் பெற்ற நகைச் சுவையின் மர்மம்.

அவர்கள் நகைச் சுவை அவர்களுக்கு மகிழ்ச்சி கொடுக்கவில்லை. அதே சமயம் அவர்கள் மகிழ்ச்சியையும் அந்த நகைச்சுவை கெடுக்கவில்லை.

''மூவரில் யார் முதல்காதலராயிருப்பது?''

—மூவர் உள்ளங்களும் இக் கேள்வியிலும் அதற்கு விடை காண்பதிலும் முனைந்தன.

''மூவரில் யார் முந்திக் கொள்ளக் கூடும்?''

—அவள் உள்ளமும் முதல் தடவையாக, சிறிது கவலையுடன், இந்தக் கேள்வியைக் கேட்டுக் கொண்டது. ஏனெனில் மூவரில் யார் வேண்டாம்என்று துணிவதுதான் அவளுக்குச் சிரமமாயிருந்ததே தவிர. யார் வேண்டும் என்று துணிவது அவ்வளவு சிரமமாய் இல்லை.

அவள் மதுரையிடம் உண்மைக் காதலைக் கண்டாள். அவள் அறிந்தோ, அறியாமலோ அவள் உள்ளம் அவனைத் தான் நாடிற்று. ஆனால் உண்மைக் காதலன் எவ்வளவு காலம் வேண்டுமானாலும் காத்திருக்க முடியும்—எவ்வளவு காத்திருந்தாலும் காதல் களிப்பு ஊறுகாய் சுவைபோல, மிகுதியாகத்தான் இருக்கும். ஆனாலும் அவன் முந்திக் கொள்ள மாட்டானா என்றும் விரும்பாமல் இருக்க முடியவில்லை.

காதலுக்கு மதுரை, தோழமைக்கு மருது என்று கருதியிருந்தது அவள் உள்ளம். மதுரை முந்திக் கொள்ளத் தவறினால் மருது முந்தலாம்; இந்த எண்ணத்திலும் அவளுக்கு சிறிது மகிழ்ச்சி இருந்தது.

செங்கோடனை அவள் வெறுக்கவில்லை. ஏனென்றால் மற்ற இருவரிடமும் இல்லாத பணம் அவனிடத்தில் இருந்தது. ஆனாலும் மற்ற இருவரிடமும் இருந்த ஈடுபாடு அவளுக்கு அவனிடம் இல்லை. காதலைப் பெற்று அனுத்தபின் தோழமையையும் பெறவேண்டும். இரண்டும் இல்லையெனத் தீர்ந்துவிட்டால் பணத்தை வைத்துக்கொண்டு வாழ்வில் ஓய்வு தேடலாம் என்றும் அவள் உள்ளம் திட்டமிட்டது.

ஆனால் நடந்தது அவள் எதிர்பார்த்த வகையிலல்ல; முறை கீழாக அமைந்தது!

மதுரை தயங்கினான்; மருது முந்திக் கொண்டாலும் வாதாடத் தொடங்கியிருந்தான். அதற்குள் செங்கோடன் கை வரிசையைக் காட்டினான்.

''மருது, என்னை முந்த விடு. இதோ காத்திருக்கிறதுஉனக்கு ஓர் ஆயிரம்,'' என்றவுடன் வாதாடிய மருது ஆயிரம் வாங்கிக்கொண்டு சற்றுத் தயங்கிப் பின்னடைந்தான். ''காயாம்பூ, எப்போதும் உன்மேல் ஒரு கண் வைத்துக்கொண்டு பொறுத்திருப்பேன். என்னை மறந்து விடாதே!'' என்று கண்ணைச் சிமிட்டிக்கூறிக்கொண்டு அவன் சிறிது தொலைவு விலகிச் சென்றான்.

''மதுரை, என்னை முந்திவிடுவாய் என்று எண்ணுகிறேன் காத்திருக்க உனக்கு மூவா

யிரம்!'' என்றான் செங்கோடன்.

மதுரை முதலில் சிறினான். பின் பணத்தை ஒரு புறமும் மங்கையை ஒரு புறமும் மாறி மாறிப் பார்த்தான். மங்கை முகத்தின் அமைதி கண்டு வேண்டா வெறுப்புடன் பணத்தை வாங்கினான். "இந்தப் பணம் கரையும் வேகத்தில் உன் வாழ்வும்...''—அவன் முடிக்குமுன் செங்கோடன் அவனை நெக்கித் தள்ளிவிட்டு காயாம்பூவைக் கைப்பற்ற முன்னேறினான்.

குறும்பாட்டத்தில் முந்திக்கொண்டிருந்த காயாம்பூ காதல் போராட்டத்தில் தோற்றாள். பணம் தவிர எதுவுமற்ற செங்கோடனை அவள் வேண்டா வெறுப்புடன் மணந்துகொண்டாள். வாலிகண்டபுரத்தார் கேலிகளுக்குத் தற்காலிகமாக ஒரு ஓய்வு ஏற்பட்டது — போட்டிக் காதலரிருவருள் மருது ஆயிரம் பணத்தையும் எண்ணிக் கொண்டே கேலி பேசத் தொடங்கியிருந்தான். "ஆயிரம் நாள் பிரிவு இருக்காது என்று எண்ணுகிறேன். அதற்கு ஆயிரம் வெள்ளி போதாதா?'' என்று சிறிது எக்களிப்புடனேயே பேசினான். அதே சமயம் மதுரை பெருமூச்சுடனும் ஏக்கத்துடனும் மூவாயிரம் வெள்ளியையும் அவற்றை மறதியில் மூழ்கடிக்கக் கூடிய குடியிலேயே செலவிட்டான்.

செங்கோடனை அவள் காதல் நெஞ்சுடன் சந்திக்கவில்லை. கடமைக்கு மட்டுமே உரியவனாக வரவிடுத்தாள். மண நாள் இரவே அவன் பணம் அவளுக்கு உரியதாயிற்று. அது முதலே அப்பணத்திற்குரியவன்மீது அவளது விருப்பு வெறுப்பாகி—கசப்பாக வளரலாயிற்று.

அவள் வாழ்வின் ஒவ்வொரு பகலும் ஓர் ஊழி—ஒவ்வோர் இரவும் ஒரு பேரூழி ஆயிற்று.

'இன்று கழிந்தது, இனி நாளையும் கழியவேண்டுமா?' — இப்படி நாட்கள் கழிந்தன. எப்படியோ கடமையுணர்ச்சியும் மழுங்கிற்று. அவன் இன்பத்தை அவள் கருதவில்லை—அவன் கட்டளைகளைக்கூட அவள் மீறத் துணிந்தாள்.

வாழ்க்கை அவளுக்கு மட்டுமல்ல; அவனுக்கும் கசப்பாயிற்று.

மங்கையைவிட மது அவனுக்கு மிகுந்த கவர்ச்சி தரத் தொடங்கிற்று. அவன் குடித்தான்; மேலும் மேலும் குடித்தான்.

அவள் அவன் செயலைத் தடுக்கவில்லை. அவன் குடித்து அழிவது நலம் என்று கருதி அதில் அவனை ஊக்கினாள்.

அவனை ஊர் தூற்றத் தொடங்கிற்று. அவள் பயப்படவில்லை.

கணவன் செங்கோடன் இறந்தான்—அவள் தன் அறியாத்தனத்தால் ஏற்ற விலங்கு தளர்ந்ததென மகிழ்ந்தாள். மாதக் கணக்காகத் தனக்குக் கிடைத்த தண்டனைக் கீடாக, மதுரை தன் கைமைநிலைபற்றிக் கேட்டு, தன்னை வந்து காண்பானு என்றும் அவள் கவலை கொண்டாள்.

ஆனுல் அடுத்து வந்தவன் மதுரை அல்ல; மருது!

கனி கிடைக்கவில்லை; காய் தான் கிடைத்திருக்கிறது. அவள் கனிக்காக சிறிது காத்திருக்க, சாக்குப்போக்கு கூற எண்ணினுள். ஆனுல் மருது என்ன நினைப்பானே என அஞ்சி, கனி கைவராத நிலையில் அவள் அவனை ஏற்ருள். அவள் தனக்குத்தானே ஓர் ஆறுதல் கூறிக் கொண்டாள்.

முதற் கணவன் இறந்த ஒரு மாதத்திலா மறு மணம்? இந்தப் பெண்ணுக்கு இதயமில்லையா—என்று கேட்டனர் மக்கள். இதுபற்றி மருது கவலைப்படவில்லை. ஆனுல் காயாம்பூ உள்ளத்தை இது உறுத்தியது. அவளுக்கு இதயம் இருந்தது. இதை அவள் இப்போது தான் நன்கு உணர்ந்துகொண்டிருந்தாள். ஆனுல் அந்த இதயம் மாண்ட கணவனையோ, தற்போதைய கணவனையோ நாடவில்லை. கண்காணுத மதுரையைப்பற்றியே அந்த இதயம் ஓயாது சிந்தித்துச் சிந்தித்து சீரழிந்தது.

வாயாடி மருது மணமான பின் வாயாடவில்லை. காதல் போட்டியில் சலிக்காத அவன், மணமான பின்தான் மங்கையின் உள்ளம் தன் திசையில் இல்லை என்பதை உணர்ந்தான். அவன் தன்னுலியன்ற மட்டும் அவளுக்கு ஆர்வம் ஊட்ட முனைந்தான். தன் பேச்சுத்திறனுல் மட்டுமன்றி, தன் அன்பு, தியாகம், காதல் திறன்—ஆகியவற்றையும் அப்பெண்ணரசியின் காலடியில் படைக்க முற்பட்டான். ஆனுல் திரும்பிய பெண்ணுள்ளத்தின் கொட்டத்தை அடக்க யாரால் முடியும்! அவன் அன்பு அத்தனையும் அவள் அழுகையைப் பெருக்கிற்றேயன்றி அடக்கவில்லை. ''நீ ஏன் முந்தி வந்தாய்? மதுரையையல்லவா எதிர்பார்த்தேன்,'' என்று அவள் கூறத் தயங்கவில்லை.

கன்னியாயிருந்த காயாம்பூ மருதுவைக் கண்டிருந்தாள். ஆனுல் காதல் மணம், அவன் உள்ளத்தை முழுக்க முழுக்க ஒரு காதலன் உள்ளமாக, காதற் கணவன் உள்ளமாக மாற்றியிருந்தது. அந்த அளவுக்குக் காயாம்பூவின் போக்கு அவன் உள்ளத்தில்—கொதிப்பையல்ல—கசப்பை ஊட்டிற்று.

''உன் மதுரை வரட்டும். நீ கூறியபடி செங்கோடன் முறை கழிந்தது. என் முறை கழிகிறது. அவன் வருகைக்குக் காத்திரு! நான் போகிறேன்,'' என்று அவன் நள்ளிரவில் எழுந்து சென்ருன்.

அவள் அவனைத் தடுக்கவில்லை; வாதாடவில்லை.

மதுரையைப் பற்றிய எண்ணம் அவள் உள்ளத்தைக்கலக்கியிருந்தது. அவனைப் போக விட்டு அவள் மறு திசையில் முகம் திரும்பிப் படுத்துக் கொண்டாள்.

மறுநாள் ஊரெல்லாம் அல்லோக கல்லோலப்பட்டது.

'நியூ சினிமா'

மருது ஒரு மருத மரத்தடியில் தூக்கிட்டு மாண்டிருந்தான். ஊரார் அவனுக்காக அழுத னர்—அழுவதற்கு ஒரு தனிக் காரணமும் இருந்தது. அவன் மடியிலிருந்த முடங்கலின்படி தன்னிடமிருந்த ஆயிரம் வெள் ளியையும் காயாம்பூவுக்கே அளித்துச் சென்றிருந்தான். தன் மனைவியின் நற்குணத்தைக் கூட அதில் புகழ்ந்திருந்தான்.

செங்கோடன் கொடுத்த பணம்—அதை அவன் செலவு செய்யவில்லை. அவளுக்கே எழுதி வைத்திருந்தான்.

தன் சாவுக்கு அவள் காரண மென்பதை அவன் முற்றிலும் மறைக்க முற்பட்டிருந்தான்.

அவன் அவள்மீது சாகும் போதும் கொண்டிருந்த காதல் பழைய வாயாடி மருதுவின் காதல் அல்ல; இதை மீண்டும் கைம் பெண்ணான காயாம்பூ அறிந்தாள்.

அவள் உள்ளம் என்றுமில்லா ஆர்வத்தில், பழைய கன்னி காயாம்பூ அறியாத துடிதுடிப் புடன் மதுரைக்காக ஏங்கிற்று. அவன் வருவான், வருவான் என்று காத்திருந்தாள்.

மதுரையின் காதல் மற்ற காதலர்களின் உணர்ச்சிகள் போன்றதன்று. அது தொடக் கத்திலிருந்தே ஆழமானது. ஆனால் அவன் அதை வெளி யிட்டுக் கூறவோ, அதைச் செயற் படுத்தவோ சக்தியற்ற வனா யிருந்தான். காயாம்பூ தவிர, வேறு பெண்ணிடம் பழகாததனால் காதற் பெண்டி ரின் இயல்பும் முற்றிலும் அவர் களிடம் தான் கொள்ள வேண் டும் முறையையும் அறியாதிருந் தான். இக்காரணங்களாலேயே அவன் காயாம்பூவைப் பெறுவ தில்முந்திக்கொள்ளாமல்தயங்க நேர்ந்தது. ஆனால் செங்கோ டன் முந்திக்கொண்டபோது அவன் உடனே மனமுடைந் தான். அவனுக்கிருந்த கொஞ்ச நஞ்ச தன்னம்பிக்கை யும் தகர்ந்தது. செங்கோடன் கொடுத்த மூவாயிரத்தையும் கூட அவன் வேறு எதற்கும் பயன் படுத்தவில்லை. இந்த மனக் கசப்பையும் மனமுறிவை யும் ஆழ்ந்த மறதிப் போதை யில் மூழ்கடிக்கும் குடிகளி லேயே துணிந்து செலவு செய் தான். அப்படியும் காயாம் பூவை மறந்து வாழமுடியாது தன்னால்—என்று உணர்ந்து— தவித்து—தடுமாறி—அயல் நாடு ஓடினான். கூலியாய் வாழ்ந்து நலிகிறான்.

செங்கோடன் இறந்ததோ, அதன்பின் மருது இறக்க நேர்ந் ததோ அவனுக்குச் சிறிதும் எட்டவில்லை. ஆனால், மனத் துயராலும் கூலி வேலையாலும் வறுமையாலும் நோயாலும் அரிக்கப்பட்டு, குற்றுயிராகச் சாவின் கோரவாயிலை அணு கும் சமயம், அவனுக்கு இறுதி யாக அவளை ஒரு முறை பார்த்து விட்டுச் சாகவேண்டும் என்ற ஒரே ஏக்கம் ஏற்பட்டது. புறப்பட்டான். வரும்போது செய்த பயணத்தைவிட இது அவனுக்கு நீண்டதாக, இடர் நிறைந்ததாக இருந்தது. காயாம்பூ இருந்த இடத்தை அவன் அணுகியபோதும், எவர் கண்ணிலும் படாமல் காயாம்பூவைச் சென்று சந்திக்க விரும்பினான். ஏனெ னில் காயாம்பூவை அவன் இன்னும் மற்றொருவன் மனைவி யாகவே மனக் கண்களால் கண்டான்.

மதுரை வருவான், வருவான்

என்று காயாம்பூ நாட்கள், வாரங்கள், மாதங்கள்—காத்திருந்தாள்.

ஆனால், முடிவில் அவளும் நம்பிக்கை இழந்தாள். செங்கோடனின் செல்வத்தில் பாதியளவு இன்னும் அவளிடமே இருந்தாலும், அவள் உடைந்த உள்ளம் மதுரை இல்லாமல் அதை அனுபவிக்க இடம் தரவில்லை. அதை அவள் மன வெறுப்புடன், அருகிலே இடிந்து தளர்ந்து கிடந்த ஓர் அம்மன் கோயிலைச் செப்பனிடுவதற்காகக் கொடுத்துவிட்டு, மருது தூக்கிட்டுக் கொண்டு மாண்ட மருத மரத்திலேயே தானும் உயிர்விடுவதென்று புறப்பட்டாள்.

நேரம் நள்ளிரவு. அவள் கொல்லைக் கதவைத் திறந்தபோது ஏதோ சடாரென்று உட்பக்கமாகச் சாய்ந்தது. அவள் முதலில் என்னவோ என்று அஞ்சினாள். பின் சாகத் துணிந்த தனக்கு வந்த அச்சத்தை எண்ணிப் பேய்ச் சிரிப்புச் சிரித்தவளாய், சாய்ந்ததைக் கவனித்தாள். அது ஒரு மனித உருவம் என்று கண்டாள். சாகத் துணிந்தவளுக்கு வரும் இயல்பான உணர்ச்சிக் கனிவு அவளை ஆட்கொண்டது. அவள் அவனை நீர் தெளித்து உணர்வுருத்தினாள். "நீ யார்? ஏன் இப்படி வந்து சாய்ந்திருக்கிறாய்? உனக்கு என்ன நேர்ந்தது?" என்றாள்.

அவன், அவள் எதிர்பார்த்து எதிர்பார்த்து ஏங்கிக் கிடந்த மதுரை என்பது அப்போது தெரியாது. ஆதலால் அவள் காலடி தழுவி, "காயாம்பூ! என்னை மன்னித்து விடு. நீ இன்னொருவன் மனைவி என்பது தெரிந்தும், இறக்கும் சமயம் உன் காலடியில் கிடந்தாவது இறக்க எண்ணி வந்திருக்கிறேன். இந்தச் சமயம் செங்கோடனுக்குக்கூட என்மீது இறக்கமில்லாமல் போகாது." என்றான் மதுரை.

அவள் திடுக்கிட்டாள். அவனை வாரி அணைத்தெடுத்து தன் கட்டிலில் கொண்டு கிடத்தினாள். மெல்லத் தன் உள்ளத்தில் சேர்த்து வைத்திருந்த உண்மைகளையும் பட்டபாட்டினையும் எடுத்து உரைத்தாள். அவன் வருவான் என்ற நம்பிக்கை இழந்து, அன்றே தன் பணம் முழுவதையும் கோவிலுக்

குக் கொடுத்த செயலை ஆற்றாமையுடன் கூறி அழுதாள். இன்னும் ஒரு மணி நேரம் சென்றிருந்தால் மருதுக்கு தான் செய்த சதியால் அவன் தூக்கிட்டுக்கொண்ட மரத்திலேயே தானும் தொங்கியிருக்க நேரிடும் என்று கூறிக் கதறினாள்.

செங்கோடன் இறந்ததும், அதன்பின் மருது அவள் காதல் பெறாது மாண்டதும், தனக்காகவே தையல் காத்திருந்ததும் கேட்ட மதுரை ஒருபுறம் தன்

மடமைக்கு வருந்தினான். மறுபுறம் தன் இறுதி இன்பத்தை எண்ணி யாவும் மறந்தான். ஆயினும் கடைசியில் தன்னையே உயிராகக் காதலித்த பிரியையிடம் வாலிபனாக வராது குற்றுயிராய் வந்த நிலையினை எண்ணி வருந்தினான்.

இன்பம் இனிது; துன்பங்களின் இறுதியில் இன்பம் இன்னும் இனிது; ஆனால் சூழ்நிலையால் அவன் அதை அனுபவிக்கமுடியவில்லை. நீண்டகால நோயாலும் நலிவாலும் ஒரு சில நாட்களில் அவள் காலடியிலேயே கிடந்து இனிய கனவுகளுக்கிடையே உயிர் நீத்தான்.

கன்னியரை அடக்கியாண்டு காளையர் உள்ளங்களை ஆட்டிப் படைத்த காயாம்பூ, தன் காதலுள்ளமறிந்த காதலனை ஆட்கொள்ள முடியாமல், மீண்டும் கன்னியாகவே வாழ்வினைக் கழிக்க நேர்ந்தது. மூன்று மண வாழ்வு கழிந்தும் அவள் உளம் தளர்ந்ததேயன்றி, வயது இருபதுக்கு மேல் ஏறவில்லை. திரும்பவும் இன்ப வாழ்வு வாழும் எண்ணம் அவளுக்கு இல்லை. அதே சமயம் தன்பிழைகளுக்கான ஒரேபரிகாரம் சமூக சேவையே என்பதை அவள் உணர்ந்தாள்.

வாலிகண்டபுரம் மக்களிடையே அது முதல் அவள் ஒரு தெய்வமானாள். அவளைக் கேலி செய்தோர் தொகை வரவரக் குறைந்தது. ஏனெனில் அவள் இளைஞர்க்கும் நங்கையர்க்கும் ஒரு தமக்கையாயிருந்து தன்னாலியன்ற தொண்டு செய்தாள். பெரியோர் முதலோரைப்பேணினாள். சிறுவர் சிறுமியருக்குத் தாயைப்போல் ஆதாரமாய், அவர்கள் உடல் நலத்திலும் அக்கறை செலுத்தினாள்.

நாற்பது ஆண்டுகள் சென்றபின் காயாம்பூ இயற்கை அடைந்தாள். அவள் விருப்பப்படி மக்கள் மதுரையை அடக்கம் செய்த இடத்திலேயே அவளையும் அடக்கம் செய்தனர். மண்ணுலகில் இளமையின் அறியாமைக்கும் அனுபவமின்மைக்கும் ஆளான இரு உள்ளங்கள் மீண்டும் மண்ணிலே—இணையற்ற இயற்கையின் மடியில் ஒருங்கு புதையுண்டன.

[தாமஸ் ஹார்டியின் ஆங்கில நாவலொன்றைத் தழுவியது.]

ooo

ஒரு பிரபல கம்பெனியின் மேனேஜர் தன்னுடைய 'டைப்பிஸ்ட்' பிழையில்லாமல் கடிதங்களை 'டைப்' செய்வார் என்பதிலே உள்ள நம்பிக்கை முழுவதையும் இழந்தார்.

எனவே ஒவ்வொரு கடிதத்தின் கீழும்; கீழ்க்கண்ட வாசகங்கள் கொண்ட 'ரப்பர் ஸ்டாம்ப்' ஒன்றைக் குத்தி அனுப்பி வைத்தார் :

"என்னுடைய டைப்பிஸ்டினால் அழகாக 'டைப்' அடிக்க முடியாது; ஆனால் அவள் மிகவும் அழகானவள்!"

—'நியூயார்க் டைம்ஸ்'



# ‘தலைவிதி’

**கி. அல்லி**

எவ்வித நோக்கமுமின்றி வெகு நேரம் சுற்றிய பிறகு நாங்கள் தெருவோரமிருந்த ‘பெஞ்சி’யின்மீது அமர்ந்தோம்.

நைனிடாலின் அழகிய மாலைநேரம் சிறிது சிறிதாக மங்கிவந்தது. பஞ்சு போல—நீராவி போல முகில்கள் எங்கள் தலைகளைத் தொட்டுக் கொண்டு விரைந்து சென்றன. மங்கிய ஒளியிலும் இருளிலும் தோய்ந்து அவை சில நேரம் மஞ்சளாகவும்

சில நேரம் வெள்ளையாகவும், சில நேரம் செங்கிறமாகவும் தோன்றி எங்களுடன் விளையாட விரும்புவது போலக் காணப்பட்டன.

எங்கள் பின்னால் 'போலோ' மைதானம் இருந்தது. எதிரே ஆங்கிலேயருடைய உல்லாசக் கூடம் இருந்தது. அங்கிருந்து இனிய சுவையுடைய இசையின் ஒலி வந்து கொண்டிருந்தது. பக்கத்தில் மனங்கவரும், ஒப்பற்ற 'தால்' இருந்தது.

'தாலி'ல் படகுகள், பாய் மரங்களைப் பறக்க விட்டபடி ஒன்றிரண்டு ஆங்கிலப் பிரயாணிகளை ஏற்றிக் கொண்டு அங்குமிங்கும் அலைந்து கொண்டிருந்தன. சில ஆங்கிலேயர் தங்களுடன் சில மங்கையரைச் சேர்த்துக் கொண்டு, தங்கள் ஊசி போன்ற சிறு படகுகளைப் போட்டி போட்டுக் கொண்டு விரைவாகச் செலுத்திக் கொண்டிருந்தனர். கரையில் சில ஆங்கிலேயர் தங்கள் தூண்டிலைத் தண்ணீரில் போட்டு விட்டு மிகத் துணிவோடு ஒரு மனப்பட்டு 'மீன் தியான'த்தில் மூழ்கியிருந்தனர்.

பின்னால் 'போலோ' வெளியில் குழந்தைகள் கூச்சலிட்டுக் கொண்டு விளையாடிக் கொண்டிருந்தனர். கூச்சல், அடிதடி, திட்டுகள்—முதலியனவும் விளையாட்டில் அடங்கியவைதான் போலும்! இந்த விளையாட்டையே தங்கள் அந்நேரக் குறிக்கோளாகக் கொண்டு, அந்தச் சிறுவர்கள் தங்கள் மனம், பலம், அறிவு, அனைத்தையும் ஈடுபடுத்தி அக் குறிக்கோளை ஈடேற்ற விரும்பியவர்கள் போல் காணப்பட்டனர். அவர்களுக்கு எதிர் காலத்தைக் குறித்து கவலையில்லை; இறந்த காலத்தைப் பற்றிய நினைவில்லை. அவர்கள் முழுக்க முழுக்க நிகழ் காலத்தில் வாழ்பவர்களாக, உண்மை வாழ்வு வாழ்பவர்களாக இருந்தனர். குழந்தை உள்ளத்தின் இந்த 'ஒரே இலக்கணம்' எங்களை மகிழ்ச்சியில் ஆழ்த்திற்று.

தெருவில் மக்களின் முடிவற்ற தொடர் போய்க் கொண்டிருந்தது; வந்து கொண்டிருந்தது; அதற்கு எல்லையில்லை; இறுதியில்லை. அந்தத் தொடர் எங்கே போய்க் கொண்டிருக்கிறது என்பது யாருக்குத் தெரியும்? எல்லா வயதுடைய மக்களும், எல்லா வகையான மக்களும் இருந்தனர்.

அதிகார வர்க்கத்தைச் சேர்ந்த ஆங்கிலேயர் அதிலிருந்தனர்; கந்தலாடையால் அலங்கரித்துக் கொண்டு குதிரையின் லகானைப் பிடித்தபடி செல்லும் மலைநாட்டினர் இருந்தனர், இவர்கள் தங்கள் தன்மானத்தையும் மனிதனுக்கு உரிய மதிப்பையும் கசக்கி எறிந்து, தங்கள் இதயத்தை வெறும் பொட்டலாக்கிக் கொண்டு, வயிறு கழுவும் வேலையைக் கற்றுக் கொண்டவர்கள்; வால் பிடிப்பது தவிர வேறொன்றும் அறியாதவர்கள்.

ஓடிக் கொண்டு, ஆடிக் கொண்டு, சிரித்துக் கொண்டு குறும்புத்தனம் செய்து கொண்டு செல்லும் சிவப்புநிற ஆங்கிலேயக் குழந்தைகளும் இருந்தனர்; மஞ்சள் பூத்த கண்களை அகல விரித்துக் கொண்டு தந்தையின் விரலைப் பிடித்தபடி நடக்கும் நம் நாட்டு அறிவுக் கூர்மையுள்ள சிறுரும் இருந்தார்கள்.

ஆங்கிலேயத் தந்தைமார் தங்கள் குழந்தைகளோடு ஓடிக்கொண்டும், சிரித்துக் கொண்டும், விளையாடிக் கொண்டுமிருந்தனர், நம் நாட்டின் தந்தைமார் பெருந்தன்மையைத் தம்மைச் சுற்றிலும் அணைத்தபடி, செல்வத்தின் இலக்கணத்தை அறிவிப்பது போலச் சென்று கொண்டிருந்தனர்.

ஆங்கிலேய மங்கையர் மெல்ல விரும்பாதவராய், மிக விரைந்து சென்று கொண்டிருந்தனர். அவர்களுக்கு நடப்பதில் களைப்போ, சிரிப்பதில் தயக்கமோ இல்லை. உடற்பயிற்சி என்ற பெயரில் குதிரை மீது அமர்ந்து சென்றனர்; குதிரையை அடிக்கையிலே, விருப்பமேற்பட்டால் ஒரு மலை நாட்டவனைச் சவுக்காலடிக்கவும் செய்வர்.

இன்னொரு பக்கம் நம்நாட்டு விளக்குகள்—மங்கையர் திலகங்கள் தெருவோரமாக, அடக்கமாக, நாணம், பெண்மை, பண்பாடு— இவற்றின் இலக்கணமாக, நிலத்திலே பார்வையைப் புதைத்தவாறு, மெல்லடி வைத்து நடந்துகொண்டிருந்தனர்.

2

நேரம் ஓடிக் கொண்டேயிருந்தது. இருள் அடர்ந்து பரவியது. மேகங்கள் வெண்ணிறம் அடைந்து ஒன்று சேர்ந்தன. மக்கள் தொடர் மெள்ள மெள்ளக் குறையலாயிற்று. ஒன்றிரண்டு மனிதர்கள் ஆங்காங்கே குடை பிடித்துச் சென்றனர். நாங்கள் அங்கேயே அசையாமல்அமர்ந்திருந்தோம். பனி பெய்யத் தொடங்கியது. எங்கள் 'ஓவர்கோட்' நனைந்து விட்டது.

பின்னுல் திரும்பிப் பார்த்தோம். அந்த வெளி பனிப் போர்வை போர்த்துக்கொண்டு அமைதியாக உறங்கிக் கொண்டிருந்தது.

எங்கும் முழு அமைதி நிலவியிருந்தது. 'தல்லிடா'வின் மின் ஒளி விளக்கு மாலை போல ஒளி விட்டுக் கொண்டிருந்தது. அந்த ஒளி இரண்டு மைல் பரவிக் கிடந்த தண்ணீர்க் கண்ணுடியில் மின்னியது.

நாங்கள் பார்த்துக் கொண்டேயிருக்கும்போது ஒரு அடர்த்தியான திரை வந்து இக்காட்சியை மறைத்தது. ஒளி அடங்கியது; மின்னல் அழிந்தது. அந்தக் கரிய பெரிய மலைகளும் அந்த வெள்ளைத் திரைக்குப் பின் ஒளிந்து கொண்டன. அருகிலிருந்த பொருள்கூட கண்ணுக்குத் தெரியவில்லை. மாபெரும் வெள்ளம் வந்து விட்டது போன்ற ஒரு உணர்வு. தூய மாக் கடல் விரிந்து, பிறப்பின் ஆணிவேரோடு அனைத்தையும் தன்னுள் ஆழ்த்திக்

கொண்டது போல அந்த அடர்ந்த, ஆழமான வெண்மையில் அனைத்தும் ஆழ்ந்து விட்டன. மேலே, கீழே, நாற்புறமும் அந்த அசைக்க முடியாத வெண்மையே பரவியிருந்தது.

இத்தகைய அடர்த்தியான பனியை நாங்கள் கண்டதேயில்லை. பெரிய பெரிய துளியாகப் பனி பெய்தது. தெரு இப்போது முற்றிலும் மக்கள் நடமாட்டமற்றதாக இருந்தது. முன்பு கண்ட அந்தத் தொடர் எந்தப் பொந்தில் சென்று அடைந்து கொண்டதோ!

அந்தப் பெரிய, தூய வெளியில் எங்கிருந்தோ பதினேரு முறை 'டண்—டண்' என்ற ஓசை எழுந்தது. தொலைவிலிருந்து ஏதோ கல்லறையினின்று கேட்பது போன்றிருந்தது. நாங்கள் அவரவர் விடுதியை நோக்கிக் கிளம்பினேம்.

வழியில் நண்பர்களுடைய விடுதி இருந்தது. வழக்கறிஞர்களான நண்பர்கள் இருவரும் விடை பெற்றுச் சென்றனர். நானும் இன்னெரு நண்பரும் தங்கியிருந்த விடுதி இன்னும் சற்றுத் தொலைவில் இருந்தது.

'தாலி'ன் கரையிலேயே நாங்கள் நடந்து சென்ருேம். எங்கள் 'ஓவர் கோட்' முற்றிலும் நனைந்து விட்டது. மழை இருப்பதாகத் தெரியவில்லை. குளிரோ இந்தக் கோட்டின் மீது இன்னெரு கம்பளி இருந்தால் நன்ருயிருக்கும் என்று எண்ணச் செய்தது.

வழியில் கரையை ஒட்டி ஒரு பெஞ்சு இருந்தது. என் மனம் அலைவுற்றது. உடனே விடுதிக்குச் சென்று இந்த நனைந்த உடைகளைக் களைந்து வெது வெதுப்பான படுக்கையில் படுத்துறங்க வேண்டுமென்று தோன்றியது. ஆனல் என்கூட இருந்த நண்பருக்குத் திடீரென்று ஒரு வெறி தோன்றும்; திடீரென்று அடங்கும். அந்த வெறி எந்த உருவில் தோன்றும் என்பது நிலையில்லை. "வாருங்கள், இங்கே சற்று உட்காரலாம்," என்ருர் அவர்.

உடலைக் கிழிக்கும் பனியில், இரவு ஒரு மணி வேளையில், நனைந்த, குளிர்ந்த, பனி பெய்திருந்த பெஞ்சில் நாங்கள் அமர்ந்தோம்.

ஐந்து, பத்து, பதினைந்து என்று நிமிடங்கள் கடந்தன. நண்பர் எழுபவராயில்லை. நான் சற்று எரிச்சலோடு, "வாருங்களேன்," என்றேன்.

"அட, கொஞ்சம் இருங்களேன் !"

கையைப் பிடித்திழுத்து அவ என்னை உட்கார வைக்கவே வேறு வழியின்றி உட்கார்ந்தேன். அந்த வெறி எளிதில் தீர்வதா யில்லை. 'கொஞ்சம்' என்றது உண்மையில் கொஞ்சமாயிருக்கவில்லை.

பேசாமல் உட்கார்ந்திருப்பது சலிப்பைத் தந்தது. மனதுக்குள் பொறுமிக் கொண்டிருந்த போது திடீரென்று நண்பர், "பாருங்கள்! அங்கே என்னவென்று பாருங்கள்," என்ருர்.

நான் அவர் காட்டிய இடத்தையே நோக்கினேன். பனியின் வெண்மைக்கு இடையே சிறிது தொலைவில் ஒரு கறுப்பு உருவம் தெரிந்தது. அது எங்களை நோக்கி வந்து கொண்டிருந்தது. "யாரோ வருகிருர்கள்," என்றேன் நான்,

மூன்று கஜ தூரத்தில் ஒரு சிறுவன் அடர்ந்த தலை மயி

ரைக் கோதியவாறு வந்து கொண்டிருந்தான். தலையிலும் கால்களிலும் ஒன்றும் இல்லை; அழுக்கடைந்த சட்டை ஒன்று அணிந்திருந்தான்.

அவன் கால்கள் எங்கே இருக்கின்றன என்பதோ, அவன் எங்கே போகிறான் என்பதோ, எங்கே போக விழைகிறான்-என்பதோ தெரியவில்லை. கடும் பனியில்—எல்லை தெரியாத ஏதோ ஒரு 'சூன்ய வெளி' நோக்கி நெடும் பயணத்தில் ஈடுபட்டிருக்கிறானோ அவன்—என்று எண்ணினேன், நான்!

அல் சுங்க நிலையத்து விளக்கொளியில் பார்த்தபோது அவனுக்குப் பத்து வயதிருக்கலாம் என்று தோன்றியது. வெண்ணிறத்தவனாயிருந்தபோதிலும் அழுக்கினால் கறுத்தவனாய் காணப் பட்டான். கண்கள் அழகோடு அகன்றவைகளாக இருந்தன. ஆனால் 'வெறிச்' சென்று இருந்தன. நெற்றியில் இப்போதே சுருக்கங்கள் தென்பட்டன. பச்சிளம் பாலகனிடம் அந்த 'வயோதிகத் தழும்பு'களா? வயதால் அல்ல; வறுமையால் அவன் அதிக அனுபவம் பெற்றிருக்கத்தான் வேண்டும்!

அவன் எங்களைப் பார்க்கவில்லை; அவன் எங்குமே பார்க்கவில்லை; கீழே இருந்த தரை, மேலே நாற்புறமும் சூழ்ந்திருந்த பனிப் படலம்,—எதிரே தண்ணீர், அமைதியான உலகம்—எதையுமே பார்க்கவில்லை; அவன் தன்னை மட்டுமே பார்த்துக் கொண்டிருந்தான்.

அவன் தன் ஒளியற்ற கண்களை அகல விழித்தான்.

"உலகமே உறங்கிக் கொண்டிருக்கும்போது நீ மட்டும் ஏன் அலைந்து கொண்டிருக்கிறாய்?"

பையன் பேசாது நின்றான். அவன் முகம் மட்டும் ஏதோ பேசியது.

"எங்கே தூங்குவாய்?"

"இங்கேதான் எங்கேயாவது...!"

"நேற்று எங்கே தூங்கினாய்?"

"கடையில்!"

"இன்று அங்கே ஏன் படுக்கவில்லை?"

"வேலையிலிருந்து நீக்கி விட்டார்கள்."

"என்ன வேலை?"

"எல்லா வேலையுந்தான். ஒரு ரூபாயும் மீந்த சோறும் கிடைக்கும்."

"மறுபடியும் வேலை செய்வாயா?"

---

"இந்தப் பேனா என்னய்யா விலை?"
"பதினைந்து ரூபாய் அம்மா!"
"அடாடா! எனப்பா யானை விலை, குதிரை விலை சொல்றியே! உன் பக்கத்துக் கடையிலேயே பத்து ரூபாய்தானே சொல்றாங்க?"
"அங்கயே வாங்கிவிடுகிறதுதானே!"
"அங்கே 'ஸ்டாக்' இல்லையாமே!"
"இங்கேயும் 'ஸ்டாக்' இல்லாதபோது வாங்கம்மா; ஐந்து ரூபாய்க்கே தர்றேன்!"

''உம்...''

''இன்று என்ன சாப்பிட்டாய்?''

''ஒன்றுமில்லை...''

''இப்போது எங்காவது சாப்பாடு கிடைக்குமா?''

''கிடைக்காது...''

''பசியோடு தூங்கி விடுவாயா?''

''ஆமாம்...''

''எங்கே?''

''இங்கேதான் எங்காவது''

''இதே உடையுடனா?''

பையன் மீண்டும் கண்களாலே பேசி வாய் மூடி நின்ருன். அவன் கண்கள், ''என்ன முட்டாள்தனமான கேள்வி!'' என்று கூறுவதுபோல் தோன்றியது.

''அப்பா...அம்மா......?''

''இருக்கிருர்கள்!''

''எங்கே?''

''இங்கிருந்து பதினேந்துமைல் தொலைவில் ஒரு கிராமத்தில்!''

''நீ ஓடி வந்து விட்டாயா?''

''ஆமாம்!''

''ஏன்?''

''எனக்கு நிறைய தம்பி தங்கைகள் இருக்கிருர்கள். அதனுல் ஓடி வந்து விட்டேன். அங்கே வேலையும் இல்லை; சோறும் இல்லை. அப்பா பசியாக இருந்தார்; அம்மா பட்டினியாக இருந்தார்கள். அதனுல் ஓடி வந்து விட்டேன். எனக்கு நண்பன் ஒருவன் இருந்தான். அதே ஊர்க்காரன். என்னை விடக் கொஞ்சம் பெரியவன். இருவரும் சேர்ந்து இங்கே வந்தோம். அவன் இப்போது இல்லை!''

''எங்கே போய் விட்டான்?''

''இறந்து விட்டான்!''

இந்தச் சிறு வயதில் இவனுக்கு மரணத்தின் அறிமுகம் ஏற்பட்டுவிட்டது! நான் சிறிது வியப்போடு, ''இறந்து விட்டாஞ?'' என்று கேட்டேன்.

''ஆமாம்; முதலாளி அடித்துக் கொன்று விட்டார்; பாவம்; இறந்து விட்டான்.''

''சரி; நீ எங்களோடு வா!''

அவன் எங்களோடு வந்தான். நாங்கள் திரும்பி வழக்கறிஞரான நண்பரின் விடுதிக்குச் சென்ருேம்.

எங்கள் அழைப்பைக் கேட்டு வழக்கறிஞர் விடுதி அறையினின்று இறங்கி வந்தார். அவர் 'காசுமீர்'ப் போர்வையைச் சுற்றிக் கொண்டிருந்தார். கால்களில் 'சாக்சு'ம் செருப்புகளும் இருந்தன. குரலில் சிறிது எரிச்சலும் அசட்டையும் கலந்திருந்தது.

''ஓ! நீங்களா? என்ன செய்தி?''

''உங்களுக்கு வேலையாள் வேண்டும் என்று சொன்னீர்களல்லவா; இதோ பாருங்கள்; இந்தப் பையனை அழைத்து வந்திருக்கிறேன்!''

''எங்கிருந்து அழைத்து வந்தீர்கள்? இவனை நீங்கள் அறிவீர்களா?''

''அறிவேன் — நாணயமானவன்!''

''ஐயா, மலை நாட்டவர்கள் பொல்லாதவர்கள். சிறுவர்களிடத்திலும் தீக் குணங்கள்— கெட்ட இயல்புகள் மறைந்து இருக்கும். நல்ல ஆள் ஐயா நீங்கள்! எங்கிருந்தோ அழைத்து

வந்து விட்டீர்கள், 'இதோ வேலைக்காரன்' என்று!''

''கேளுங்களேன், இவன் நல்ல பையன்!''

''நீங்கள் வேடிக்கையான மனிதர்! இத்தகைய தாழ்ந்த வனை வேலைக்கு வைத்துக் கொண்டால் மறுநாளே கிடைத்ததைச் சுருட்டிக் கொண்டு ஓடி விடுவான்.

''நீங்கள் கேட்க மாட்டேன் என்கிறீர்கள். நான் என்ன செய்யட்டும்!''

''என்னத்தைக் கேட்பது? ஐயா, நீங்கள் விளையாடுகிறீர்கள். சரி; நான் போய் தூங்க வேண்டும்!''

இவ்வாறு கூறி தினம் நான்கு ரூபாய் வாடகையுள்ள அறையில், அழகிய கொசு வலைக்குள் சென்றுறங்க விரைந்தார்.

திரையிட்டிருந்த கவலைக்கும் அப்பால், கண்ணியம் காட்டும் அவனது விழிகளிலே 'விஷத்தைப் பார்' என்கிறூரே நண்பர்; விந்தை மனிதர்!

### 3

அவர் சென்றபின் நண்பர் விடுதிக்கு வெளியே வந்து தம் சட்டைப் பையில் கையைவிட்டுக் குடைந்தார். பின் ஏமாற்றத்தோடு கையை வெளியே எடுத்துவிட்டு என்னை நோக்கிஞர்.

''என்ன?'' என்று கேட்டேன்.

''இவனுக்கு உண்ண ஏதாவது கொடுக்க விரும்பினேன். எல்லாம் பத்து ரூபாய் நோட்டுகளாக இருக்கின்றன,'' என்று ஆங்கிலத்தில் கூறிஞர் அவர்.

> **இரண்டு**
>
> நாம் செய்ய வேண்டியது இரண்டு. ஒன்று பணக்காரர்கள் எப்படி உழைக்கிருர்கள் என்பதை ஏழைகள் அறிய வேண்டும். ஏழைகள் எப்படிக் கஷ்டப்படுகிருர்கள் என்பதைப் பணக்காரர்களை அறியச் செய்ய வேண்டும்.

''என்னிடம்கூட நோட்டுகளாகத்தான் இருக்கின்றன என்று நினைக்கிறேன்; பார்க்கிறேன்.''

உண்மையாகவே என் சட்டைப் பையிலும் நோட்டுகளே இருந்தன. நாங்களிருவரும் ஆங்கிலத்திலேயே உரையாடத் தொடங்கினோம். இதற்கிடையே பையனின் பற்கள் தந்தியடித்துக்கொண்டிருந்தன; கடுமையான குளிர்.

நண்பர், ''இனி என்ன செய்வது?'' என்று கேட்டார்.

''பத்து ரூபாய் நோட்டைக் கொடுத்து விடுங்களேன்,'' என்றேன்.

அச்சத்தோடு என்னை நோக்கிய நண்பர், ''நண்பரே! செலவுப்பட்டியல் சரிப்பட்டுவராது. இதயம் எத்துணை கருணையுள்ளதாக இருக்கிறதோ, அத்தனை பணம் கையில் இல்லை,'' என்ருர்.

''சரி, போகட்டும். இந்தக் காலத்தில் கருணை கொள்வதே பெரிய காரியம்,'' என்றேன் நான்.

நண்பர் பேசாமலிருந்தார்; ஏதோ சிந்தித்துக்கொண்டிருப்பவர்போல் காணப் பட்டார்

பிறகு பையனிடம், "இன்று ஒன்றும் முடியாது. நாளைக்கு வா. 'ஓட்டல்-டி-பவ்' தெரியுமா? அங்கே நாளைக் காலை பத்து மணிக்கு வருகிறாயா?" என்று கேட்டார்.

"வருகிறேன். வேலை ஏதாவது தருகிறீர்களா, ஐயா?"

"ஆமாம்; ஆமாம். தேடித் தருகிறேன்!"

"அப்படியானால் போகட்டுமா?"—பையன் ஏமாற்றம், நம்பிக்கை இரண்டும் கலந்த குரலில் கேட்டான்.

"உம்..."

நீண்ட பெருமூச்சு விட்ட நண்பர், "எங்கே தூங்குவாய்?" என்று கேட்டார்.

"இங்கேதான் எங்கேயாவது பெஞ்சின் மேல், மரத்தின் அடியில், ஏதாவது கடை ஓரத்தில்."

பையன் சற்று நின்றான். எனக்குக் குழப்பமாக இருந்தது; அந்தப் பையன் மெள்ள அங்கிருந்து மூன்னேறிச் சென்றான்; பனியில் கலந்து விட்டான். நாங்களும் விடுதியை நோக்கிச் சென்றோம். காற்று 'சுர்'ரென்று எங்கள் கோட்டைத் தாண்டி அம்பு போல் துளைத்தது.

குளிரினால் நடுங்கிக்கொண்டிருந்த நண்பர், "குளிர் மிகக் கடுமையாக இருக்கிறது; அந்தப் பையனிடத்தில் துணிகள் மிகக் குறைவாக உள்ளன." என்றார்.

நான் தன்னலத் தத்துவத்தை உணர்த்துவது போல, "இதுதான் உலகம் நண்பரே! வாருங்கள். முதலில் வெம்மையான படுக்கையில் படுத்துக் கொள்ளுங்கள். பிறகு மற்றவர்களைப் பற்றிக் கவலைப்படலாம்." என்றேன்.

நண்பர் வருத்தமாக, "இது முற்றிலும் தன்னலமே! வேறு வழியற்ற நிலைமை-கொடுமை—வெட்கமற்ற தன்மை—எப்படி வேண்டுமானாலும் சொல்லலாம்!" என்றார்.

மறுநாள் நைனிடால் என்னும் சொர்க்கத்தின் கறுப்பு அடிமை விலங்கின் அருமை மகன்—அந்தப் பையன்-குறித்த நேரத்தில் 'ஓட்டல்-டி-பவ்'வில் எங்களைச் சந்திக்க வரவில்லை. நாங்கள் உல்லாசமாக அங்கு மிங்கும் சுற்றி விட்டுத் திரும்பத் தொடங்கினோம். அந்தப் பையன் வருவான் என எதிர்பார்த்து அமர்ந்திருப்பது தேவைஎன்று நாங்கள் எண்ணவில்லை.

காரில் ஏறிக்கொண்டேயிருக்கும்போது செய்தி கிடைத்தது. "முன் நள்ளிரவு ஒரு மலை நாட்டுச் சிறுவன் தெருவோரத்தில், ஒரு மரத்தடியில் குளிரினால் விறைத்து இறந்து விட்டான்."

செய்தியை அறிவித்தவர்கள், அந்த ஏழைச் சிறுவனின் வாயிலும், மார்பிலும், கைகளிலும், கால்களிலும் மெல்லிய பனிப் போர்வை போர்த்தப்பட்டிருந்ததாகக் கூறினர். இந்த உலகத்தின் நாணயமற்ற தன்மையை மறைக்க இயற்கை அந்தப் பிணத்தின்மீது வெண்ணிற குளிர்ந்த போர்வையைப் போட்டு மூடியது போலும்!

நான் செய்தியைக் கேட்டுவிட்டு, "உம், எல்லாம் அவரவர் தலைவிதி" என்று கூறிக் கொண்டேன்.

வேறு என்ன கூறுவது? சமூகத்தின் கொடுமைகளை மறைக்க உதவும் சொல் அதுதானே!


ராஜாவாக வேண்டிய ஆசையில்
பிலிப்பும்; எர்ப்ளேயும் சென்றுகொண்டி-
-ருந்தனர்!
இதே நேரம்—
பிலிப்பின்
சகோதரனாகிய
மன்னன் 14.ம் லூயி,
பொகேட் என்பார்
தரும் விருந்தில்
கலந்து கொள்-
-வதற்காக வந்து-
-கொண்டிருந்தார்.
இரும்பு முகமூடி
3
அதே இடத்திற்கு எர்ப்ளே
வந்து சேர்ந்தார்; கொல்லைப்-
-புறமாக பிலிப்பை அழைத்துச்
சென்று; மன்னர் தங்கியிருக்கும்
அறைக்கு நேராக மாடியில்
இருக்கும் அறையில் தங்க-
-வைத்தார்.
பொகேட் ராஜவிசுவாசி;
மன்னருக்கு விமரிசையாக
விருந்து கொடுத்தார்.

வழியிலே எர்ப்ளே அர்க்தகான் என்னும் தனது பழைய நண்பரைச் சந்தித்தார்; விவரம் கூறினார். அவனும் இந்த முயற்சிக்கு ஆதரவு தருவதாக வாக்களித்தான்.
எர்ப்ளே அறைக்குத் திரும்பினார்.....
இளவரசே!
என்ன சேதி? சீக்கிரம் சொல்லும்!
நீங்கள் ராஜாவாக வேண்டுமானால் முதலில் ராஜாவாக நடந்துகொள்ளக் கற்கவேண்டும். என்னோடு வாருங்கள்!
கீழேயுள்ள கட்டையை நீக்குகிறேன். அதன் வழியாக மன்னர் அறை முழுவதையும் காணலாம்!

அவர்தான் அரசனா? என்னைப் போலவே இருக்கிறானே!
அதோ பார்; விருந்து கொடுத்த பொகேட்டுடன் பேசிக் கொண்டிருக்கிறான்!
கீழே:
பொகேட்! நீர் அரசாங்கப் பணத்தை மோசடி செய்ததோடு அல்லாமல் அதை மறைக்க விருந்தும் நடத்தியிருக்கிறாய். உம்மை நாடு கடத்துகிறேன்.
பொகேட் அரசரின் எதிரியாகிவிட்டான்; இனி நான் அவரை நம் கையாளாக்கி விடுகிறேன்!

அரசன் தூங்கிக் கொண்டிருந்தான்; திடீரென்று அவனைச் சிலர் சூழ்ந்து கொண்டனர்.
யார் நீ?
உனது எஜமானர்கள்.
பிரான்சின் அரசனை என்ன செய்யப்போகிறீர்கள்?
அந்த வார்த்தையை மறந்து விடு. இனிமேல் நீ பிரான்சின் அரசனல்ல.
வண்டியில் ஏறு!
கோச் வண்டி புறப்பட்டது.
செல்லப்பன்
(தொடரும்)

# வளரும் தமிழ்

வரலாற்றுக் காலத்துக்கு முன்தொட்டு வளர்ந்து வருகின்றது தமிழ் என்பது அறிவுடைய ஆராய்ச்சிப் பெருமக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டதொரு செய்தியாகும். இத் தமிழின் இருபதாம் நூற்றாண்டின் வளர்ச்சியே நம் நோக்கத்தில் இப்போது அமைவதாகும்.

இருபதாம் நூற்றாண்டினைத் தமிழ் மொழியின் மறுமலர்ச்சிக் காலம் என்று ஆராய்ச்சியாளர் கூறுவர். இக்கூற்று மிகவும் உண்மையாய் அமைந்து விளங்குகிறது. இந் நூற்றாண்டிற்கு முன் அமைந்த காலத்தில் தக்கோரால் தமிழ் போற்றப்படவேண்டிய அளவிற்குப் போற்றப்படவில்லை. அதன் ஆக்கம், அழகு, செம்மை, சிறப்புமுதலியவற்றைஉணர்ந்த பெருமக்கள் பலர் இருந்தனர்; மொழி வளர்ச்சியும் ஒரு வகையில் அமைந்தது; எனினும் மொழித்துறை பலவற்றாலும் ஓங்கி வளர்ந்து வீறு பெறுவதற்குரிய அருந்தொண்டினைச் செய்தவர்கள் சிலரேயாய் அமைந்தனர். தனக்கென அமைந்த இயற்கைத் தன்மையால் தமிழ் மொழி வாழ்ந்து வரலாயிற்று.

இருபதாம் நூற்றாண்டு தமிழ்த் தொண்டர் பலரைப் பெற்றிருக்கின்ற காலம். தமிழ் மொழியின் வளர்ச்சியில் ஊக்கம் கொண்டு உழைக்கின்ற உத்தமர்களை இக் காலம் நன்றாகப் பெற்றிருக்கின்றது என்ற உண்மை நாள்தோறும் வெளியாகும் நூல்களிலிருந்து தெரிய வருகிறது.

## மூன்று வகை
## 1. செய்யுள்

ஓர் ஆண்டில் ஏறத்தாழ 1,500 தமிழ் நூல்கள் வெளியாகின்றன. இவற்றை மூன்று வகையாக வகுத்துக் காணலாம். முதலாவது செய்யுள்:

பேசும் படங்கள் இன்று மக்களின் கவனத்தைப் பெரும்பாலும் கவருகின்றன. அப்படங்களில் பாடப்படுகின்ற பாடல்களைச் சிறு நூல் வடிவில் வெளியாக்குகிறார்கள். அன்றியும் இசைத் தமிழுக்கு ஆக்கம் தருகின்ற இசைப் பாடல் தொகுதிகள் அண்ணாமலைப் பல்கலைக் கழகம்போன்ற அமைப்புகளாலும் மற்ற நூற்பதிப்புக் கழகங்களாலும் வெளியிடப்படுகின்றன.

கவிதை உருவில் இலக்கியங்கள் உருவாகி வருகின்றன. இவற்றைத் தலைக் கவிஞர்களாகிய சிலரும் மற்றைக் கவிஞர்களும் மிகச் செம்மை

பேராசிரியர் இராசாக்கண்ணு

## பார்த்துப் பழக.....

ஒரு பெரிய நிலப்பிரபுவை பேட்டி காண்பதற்காக குடியானவர்கள் சிலர் தூது கோஷ்டியாகச் சென்றார்கள்.

நிலப்பிரபு அவர்களைக் கண்டு பேசியதும் காப்பி சாப்பிட்டுவிட்டுப் போகச் சொன்னார்.

காப்பி வந்தது. குடியானவர்களுக்கு அதை முறையுடன் எப்படிச் சாப்பிடுவது என்று தெரியவில்லை. என்ன செய்வது என்றும் புரியவில்லை. அப்போது பிரபுவுக்கும் 'காபி' கொண்டு வந்து கொடுத்தார்கள். எனவே பிரபு எப்படிச் சாப்பிடுகிறார் என்பதைப் பார்த்துக்கொண்டு பிறகு தாங்களும் அவ்வாறே செய்வது என்று தங்களுக்குள்ளாகவே தீர்மானித்துக் கொண்டனர்.

'கப்'பில் இருந்த காப்பி முழுவதையும் பிரபு சாசரில் ஊற்றினார்.

குடியானவர்களும் அவ்வாறே செய்தார்கள்.

பிறகு பிரபு நாலைந்து கரண்டி சர்க்கரையை அதில் கவிழ்த்தார். தூது கோஷ்டியினரும் அதைப் பின்பற்றினர்.

பின்னர் பிரபு குனிந்து பக்கத்திலிருந்த பூனையிடம் அந்த சாசரை நீட்டினார்!

பிரபுவின் செல்லப் பூனை 'காபி'யைக் குடிக்க ஆரம்பித்துவிட்டது!

தூதுகோஷ்டியினர் சிலைகளாக நின்றனர்!

—'இ. வீக்லி'

யாக அமைத்துத் தருகின்றார்கள்.

தாலாட்டு, குறம், அம்மானை முதலிய செய்யுள் நூல்கள் இன்றும் மக்களுக்கு இன்பத்தைத் தருகின்றன. எனவே இப்படிப்பட்ட நூல்களும் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

கொலைச் சிந்து, வெள்ளச் சிந்து, புயல் சிந்து, வழிநடைச் சிந்து—இம் முறையிலமைந்த நூல்கள் ஒருசார் மக்களை மகிழ்விக்கின்ற காரணத்தால் அவை நாட்டில் அப்போதைக்கப் போது நடைபெறும் நிகழ்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டு வெளிவருகின்றன.

துதி, வணக்கம், பஞ்சரத்தினம், அலங்காரம் என்ற வடிவில் இறைவன்மாரையும் இறைவியரையும்ஏத்தும்தோத்திரப் பாடல்கள் புதிய முறையில் ஆக்கப்பட்டு அன்பர்களுக்கு விருந்தாக அளிக்கப்படுகின்றன.

பழைய புராணங்கள் மெல்ல மெல்ல மீண்டும் அச்சுவாகனம் ஏறுகின்றன. இவை அரும்பதவுரை, விளக்கவுரை முதலியவற்றுடன் வெளியிடப்படுகின்றன. சிறந்த கருத்துக்கருவூலங்கள் பல இத்தகைய பழைய நூல்களில் படிந்து கிடக்கின்றன. எனவே இப்படிப்பட்ட வெளியீடுகள் வரவேற்கப்படுதற்குரியனவே.

சங்க இலக்கியங்களாகிய பழைய இலக்கியங்களும், இடைக்கால இலக்கியங்களும், சமய சாத்திரங்களும், நாலாயிரம், தேவாரம், திருவாசகம் ஆகியவைகளும் புதிய பதிப்புக்களாகவும் மறுபதிப்புகளாகவும் வெளிவருகின்றன.

திருக்குறள் போன்ற நூல்கள் குறைந்த விலையில் பல வடிவில் எல்லோர் கையிலும் ஏறுமாறு அச்சிடப்படுவது வரவேற்கப்பட வேண்டியதொரு நிகழ்ச்சி.

இறுதியாக, செய்யுள் நாடகங்கள் சில மிகச் செம்மையாக உருப்பெற்று வந்து கொண்டிருக்கின்றன.

## 2. உரைநடை

இனி, இரண்டாவது வகையாகிய உரைநடையினைக் காண்போம். எண்ணற்ற நூல்கள் உரை நடையில் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

ஆங்கிலம் முதலிய பிறமொழிகளிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டு வெளியிடப்படுபவை பல.

கட்சிப் பிரச்சாரத்துக்கென சிறுகதை முதல் பலவகையான நூல்கள் வெளிவந்துகொண்டிருக்கின்றன. சிறுகதை இலக்கியமாக உருப்பெற்று வளர்ந்து வருகிறது.

வரலாற்று அடிப்படையில் எழுந்த நூல்கள் எவ்வளவோ! கோயில்களைப்பற்றி ஆராய்ந்து அவற்றின் வரலாறுகளைத் தெள்ளிதின் அறிவிக்கும் நூல்களும், திறன் ஆய்தல் என்ற முறையில் வெளியிடப்படும் நூல்களும், பழைய இலக்கியங்களை ஆய்ந்து எழுதப் பெறும் நூல்களும், விஞ்ஞானம், கணிதம், கலை, சட்டம் முதலிய புதிய துறைகளில் எழுதப்படும் நூல்களும் பலப் பல.

நாவல் எனப்படும் புதினம் நல்ல முறையில் வளர்ந்து வருகின்றது. உரைநடையில் எழுதப்பட்ட நாடகங்களும் பல.

## பிறவி விநோதம்!

முதுகொலும்பு உள்ள பிராணிகளை இருவகைகளாகப் பிரிக்கலாம். ஒன்று முட்டையிட்டுக் குஞ்சு பொறிப்பவை. மற்றொரு வகை குட்டி போட்டுப் பால் கொடுப்பவை. மீன் வகைகள், ஊர்வன, பறவைகள்— எல்லாம் முதல் வகையைச் சேர்ந்தவை. மற்ற உயர்ந்த பிராணிகள் இரண்டாவது வகையைச் சேரும். வௌவால், எலி, முயல் முதலியவைகளைப் போன்று கடலில் வாழும் திமிங்கலமும் குட்டி போட்டுப் பால் கொடுக்கும்.

ஒரு பிராணியைப் பார்த்ததும் அது எவ்வகையைச் சேர்ந்தது என்பதைக் கண்டு பிடித்துவிட முடியும். வெளியுருவத்தில் இருவகைக்குமிடையே ஒரேயொரு வித்யாசமுண்டு. அதாவது, மடல்போன்ற வெளிக்காது, குட்டி போட்டுப் பால் கொடுக்கும் பிராணிகளுக்கு மட்டுமே உண்டு.

ஆஸ்திரேலியாவில் பிளாடிபஸ் என்று ஒரு பிராணி இருக்கிறது. அதன் நான்கு கால்களும், வாயும் வாத்தினுடையது போன்று இருக்கும், எனவே அப்பிராணிக்கு 'வாத்து அலகு' என்றும் பெயரிட்டுள்ளனர். பறவையினத்தைப் போன்ற உறுப்புக்கள் இருப்பதால் இப்பிராணி முட்டையிட்டு, அடைகாத்து குஞ்சு பொறிக்கிறது. தன் குஞ்சுகளை தன் மார்பில் சுரக்கும் பாலை ஊட்டி வளர்க்கிறது!

—'பிறை'

## 3. பாட நூல்

மூன்ரும் பிரிவாகப் பள்ளிக் கூடங்களுக்கும் கல்லூரிகளுக்குமாக வெளிவரும் நூல்களைக் குறிக்கலாம்.

நம் முன் இன்று இருப்பது ஒரு புதினம். எழுதியவர் டாக்டர் மு. வரதராசனுர். வெளியீடு: பாரிநிலையம், சென்னை. விலை ரூபாய் ஐந்து. நூலின் பெயர் 'கயமை'.

இந் நூலைப் பற்றிச் சில சொல்லுமுன் புதினமாகிய இலக்கியத்தைப் பற்றி இரண்டொரு கருத்துக்களைக் கூற வேண்டும். புதினங்களில் சில மொழிபெயர்ப்பு அடிப்படையிலும், பல தனி முறையிலும் வளர்ந்து வருகின்றன. தனி முறையில் வளர்ந்து வருபவற்றை இரண்டு பெரும் பிரிவுகளாப் பிரித்துக் காணலாம். இறந்தகால வரலாற்றைப் பின்னணியாகக்கொண்டு பின்னப்பட்டவை பல. தமிழ் நாட்டுச் சமூகத்தை விளக்குவதற்கு எழுந்தவை பல. இவை சிறந்த கதையினை அடிப்படையாகக் கொண்டு அதில் வரும் உருப்பினர்களுடைய நலன்களையும் தீமைகளையும் பல்லாற்ருலும் விளக்கிச் செல்லுகின்றன.

'கயமை' எனும் முன் குறித்த புதினத்தை எழுதியவர், 'செந்தாமரை' முதலிய பல கதை நூல்களை எழுதிய சிறந்த எழுத்தாளராவார். முன்னுரை போல இந்நூலில் திருக்குறள், பொருட்பால், கயமை அதிகாரத்திலிருந்து ஐந்து குறட் கருத்துக்களை எடுத்துக் காட்டியிருக்கிருர். அவை, கயமைஅதிகாரத்திலமைந்த *4, 5, 8, 9, 10* ஆகிய குறள்கள் விளக்கமாகும்.

நாவல் துறையில் இது ஒரு புதிய முயற்சி. வள்ளுவர் கூறிய ஐந்து குறட் கருத்தை அடிப்படையாகக் கொண்டு டாக்டர் மு. வரதராசனுர் அவர்கள் *451* பக்கங்களில் இந் நூலினை எழுதியிருக்கிருர்.

இக் கதையின் தலைவராக விளங்கும் ஆணவரிடத்தில் கயமைக்குரிய பண்புகளை ஆசிரியர் பலப்பல நிகழ்ச்சிகளை அடிப்படையாக வைத்து விளக்கிக் காட்டுகின்ருர்.

★

## கதைக் கோவை

இக்கதை, அலுவலகத்தின் தலைமைக் கணக்காயராகிய ஆணவரையும், அலுவலகத்தில் வேலை செய்யும் வேங்கடேசன், பிரகாசம், சகாயன், குலசேகரன், வசீகரம், மென்மொழி, நல்லய்யன் எனும் கணக்கர்களையும்,மியார் எனும் வேலைக்காரனையும், வெங்கோபர், கிரிதரசாமி எனும் அலுவலகத் தலைவர்களையும் ஒட்டி ஓடுகிறது. மேலும் எம். எல். ஏ. ஆக விரும்பும் தங்கசாமி, எம். எல். ஏ. ஆக இருக்கும் சுந்தரவிஞயகர், எம். எல். ஏ.க்களை ஆக்கிப் படைக்கும் கனகலிங்கம், காரோட்டி கந்தன் ஆகியவர்கள் தொடர்பையும் இடையிடையே பெற்று வளர்கிறது.

ஆணவர், வசீகரம் காரணமாகச் சகாயன் ஆகியோரை அலுவலகத் தலைவர் வெங்கோபரின் துணை கொண்டு வேறு இடத்துக்கு மாற்றிவிடுகிருர். இந் நிகழ்ச்சி அலுவலகத்தில் சலசலப்பை உண்டாக்குகிறது. ஆணவருக்கும் வசீகரத்துக்கும் உள்ள முறையற்ற தொடர்பு

எல்லோராலும் வெறுக்கப்படுகிறது. புதிய கணக்கர்களாக நல்லய்யனும், மென்மொழியும் நியமிக்கப்படுகிறார்கள். நல்லய்யன் நல்லவன். மென்மொழி சிறந்தவள். வசீகரம் போலவே மென்மொழியும் ஆகிவிடுவாள் என்ற ஐயம் கணக்கர் பலரிடத்திலும் உண்டாகிறது.

கணக்கர்களுள் வேங்கடேசன் உலகறிந்த ஒருவனாய் அமைகிறான். அவனுக்கும் தொடக்கத்தில் மென்மொழியினிடத்தில் ஐயம் இருக்கிறது. நல்லய்யனே மென்மொழியை நல்லவள் என்று கண்டுகொள்கிறான்.

ஆணவர் மென்மொழியையும் தன் வயப்படுத்தற்கு இருமுறை முயன்று தோல்வியுறுகிறார். இதுபோது நல்லய்யன் மென்மொழியோடு நெருங்கிப் பழகி ஆணவரின் துடுக்குத்தனத்தை உணர்ந்து மற்றவர்களுக்கும் கூறி மென்மொழியின் நற்பண்பைப் புலப்படுத்துகிறான். தனக்கடங்காத மென்மொழியை அழிக்க முற்படுகின்ற ஆணவர் முதல் செயலாக நல்லய்யனை வேலையிலிருந்து விலக்குகிறார். உண்மையறியாத புதிய தலைவர் கிரிதரசாமியும் இதற்குத் துணையாகின்றார்.

வசீகரம் தங்கியிருந்த மகளிர் விடுதியிலிருந்து வெளியேற்றப்படுகிறாள். அவளுக்கும் ஆணவருக்கும் இருந்த தொடர்பு சரளாம்பாள் காரணமாக நெகிழ்ந்த நேரம் அது. எனவே எதிர்ப்பட்ட சகாயன் தனக்கு முரண்பட்டவன் என்பதையும் உணராது அவனுடைய சகாயத்தால் இருக்க இடம் பெற்றுத் தன்னையும் தந்து விடுகிறாள் வசீகரம். இதுவேளை சரளாம்பாள் தொடர்பால் செருக்குமிக்க ஆணவர் தன் மனைவியை அடிக்க அவள் தன் குழந்தைகளோடு தன் தாய்வீடு செல்கிறாள்.

சுந்தர விநாயகருக்கு எதிராக அவர் மைத்துனர் தங்கசாமியைப் பெரிய ஆளாக்குவதற்கு முயன்ற கனக லிங்கத்துக்கும் துணைவராய் அமைந்த ஆணவர் கைக்கூலி முதலியவற்றைப் பெற்று, காரும் பெற்று, கனகலிங்கத்தின் பேரில் அதை வைத்திருக்கிறார், மனைவியை

---

கல்லூரியின் சமையல்காரனை ஒருநாள் அதிகாரி அழைத்து, "உன் சமையலைப் பற்றி மாணவர்கள் ரொம்பக் குற்றம் சொல்லுகிறார்கள். மறுபடியும் சொல்லுவார்களானால் உன்னை டிஸ்மிஸ் செய்துவிடுவேன்," என்று பயமுறுத்தினார்.

"மாணவர் சொல்லுவதையெல்லாம் பொருட்படுத்தக் கூடாது, எஜமான்," என்றான் சமையல்காரன்.

"ஏன்?"

"அவர்கள் என்னிடம் வந்து, உங்கள் பிரசங்கங்களைப் பற்றியும் இதே மாதிரித்தான் குற்றம் கூறுகிறார்கள்."

இழந்து; மக்களை விடுத்து; வசிகரம் இடம் மாறியதால் அவளையும் அடைய முடியாதவராகி, சரளாம்பாளைப் பெற முடியாத நிலையில், தவித்துத் தனியே கடற்கரையில் காருள் அடங்கிக் கிடந்த ஆணவர், இரண்டாம் முறையாகச் சகாயனேடு வந்த வசிகரத்தைக் கண்டதும் அவளைத் தன்னுடன் அழைத்துச் சென்று கடற்கரையில் தனி இடத்தே கொலை செய்து விடுகிருர்.

அக்கொலையை அறிந்தவன் காரோட்டி கந்தன் ஒருவன் தான். தம் வஞ்சக நெஞ்சத்தால், இக்கொலையைச் செய்தவன் மென்மொழிக்கு வேண்டிய நல்லய்யன்தான் என்றும், அதற்குக் காரணம் வசிகரத்துக்கும் மென்மொழிக்கும் பகை யென்றும் கொலை விசாரணை செய்ய வந்த போலீசாரிடம் சொல்லிவிடுகிருர், ஆணவர். பண பலமும் செல்வாக்கும் பெற்ற ஆணவர் கொலைக் குற்றத்தினின்றும் தற்காலிகமாகத் தப்பித்துக் கொள்கிருர். வஞ்சகர் செயலால் வஞ்சி மென்மொழி சிறைத் தண்டனையையும் நல்லய்யன் தூக்குத் தண்டனையையும் பெறுகிருர்கள்.

உலகப் போக்கை மாற்றுவது எளிய செயலன்று: சட்டம் மாறவேண்டும்; அப்போது தான் நல்லது நடக்குமென்று எண்ணிய வேங்கடேசன் தன் முழு முயற்சியால் மரண தண்டனையினின்றும், சிறைத் தண்டனையினின்றும் நல்லய்யனையும் மென்மொழியையும் காப்பாற்றுகிருன். நல்லய்யனும் மென்மொழியும் மணமக்களாகின்ற நேரத்தில், ஆணவரின் அருந் துணைவனுகிய கனகலிங்கம் திருட முயன்று சிறைத் தண்டனை பெறுகின்ருன். சிறையில் ஆணவர் இறந்த செய்தியைக் கேட்கும் கந்தன் வாய் 'ஒழிந்தான் ஒரு கயவன்' என முணுமுணுக்கிறது. இவ்வாறு முடிக்கிருர் ஆசிரியர்.

## தன்னை விற்கும் கயமைப் பண்பு

பெருங் கயவர் ஆணவர், அவர் நஞ்சு குடித்துச் சிறையில் சாகின்ருர். உடலழகு பெற்று உள்ளத்தழகு இன்றிப் பகட்டாய் உடுத்தும் பாவச் செயலே புரிந்து, கயமைக்குத் துணை நின்ற வசீகரம் கயவர் ஆணவரால் கொல்லப் படுகின்ருள். கொலை புரியாவிடினும் திருட்டளவிற்குத் தீயவனுகிய கனகலிங்கம் சிறை புகுகின்ருன். கனகலிங்கத்தையும் ஆணவரையும் படிகளாக்கி எம். எல். ஏ. பதவி நோக்கி முன்னேறிய தங்கசாமி, எண்ணம் கைகூடாது நிற்கின்ருன். இவ்வாறு கயமையைப் பல படிகளில் வைத்து மிக அழகாக ஆசிரியர் விளக்கிச் சொல்லுகின்ருர்.

ஆணவர், ஓர் அலுவலகத்தில் தலைமைக் கணக்காயர், 'பி. ஏ: படித்தவராக இருந்தும் படிப்புக்குரிய மென்மை இல்லாதவர். இவர் வேண்டுமென்றே தன்னிடத்தே வேலை செய்யும் கணக்கர்களைக் கடிந்து கொள்ளும் மனப்பான்மையுடையவர். கணக்கர்களில் ஒருத்தியாகிய வசீகரத்திடம் தகாத முறையில் காதல் கொள்ளுகின்ருர். ஓரளவு தன்னை ஒத்த கயவனுகிய கனகலிங்கத்தினிடம் தோழமை

பெற்றிருக்கின்றூர். வெள்ளத்தோடு நீந்தி, தான் விரும்பியதைப் பெற விரும்பும் தங்கசாமியின் கையாளாக அமைகின்றூர். இவருடைய வாழ்க்கையின் தத்துவம், தன் மனைவியிடம் கூறும் பின்வரும் சொற்களால் ஓரளவு புலனுகும்:

'முரட்டுத்தனம் இருந்தால்தான் இந்தக் காலத்தில் முன்னுக்கு வரமுடியும். அதைத் தெரிந்துகொள். இல்லாவிட்டால் முயல் குட்டி போல் குழி தோண்டிக்கொண்டு மூலை வீட்டில் முடங்கி வாழ வேண்டும், உன் அப்பாவைப் போல்; தெரியுமா?'

'......நல்லவர்கள் எல்லோரும் கோழைகள், தெரியுமா? அவர்களைத்தான் விரைவில் வழிக்குக் கொண்டுவரமுடியும். நாய்கள் போல் சொன்னபடி கேட்பார்கள். பலரைப் பார்த்திருக்கிறேன்.'

'சொர்ணம்இதோபார்! இந்த ஆணவத்தைப் பற்றிக்கவலையே படாதே! நல்லவர்கள் கோழைகளாக உள்ளவரையில், அறிவாளிகள் வம்புக்கும் வசைக்கும் பயப்படுகிற வரையில், இந்த உலகத்தில் என்னைப் போல் அஞ்சாத சிங்கங்களுக்குக் கவலையே இல்லை. உலகமும் இப்படித்தான் இருக்கப் போகிறது. நாங்களும் நன்ருக வாழத்தான் போகிறேம்.'

இரக்கம் மனிதனுக்கு இருக்கக்கூடாத எண்ணம் என்ற தம் கருத்தை ஆணவர், 'இந்த உலகத்தில் இப்படி இரக்கப்பட்டால் பயன் இல்லை. ஒரு சிலர் துன்பப்பட்டுத்தான் ஆக வேண்டும். ஐயோ, மரம் பாழாய்ப் போகிறதே என்று யானையும் ஆடும் கவலைப்பட முடியுமா? மரத்தை அழித்து இலைகளைத் தின்ருல்தான் அவை வாழ முடியும். நாம் நன்ருக வாழவேண்டுமானுல் இப்படிச் சிலர் துன்பப் பட்டுத்தான் ஆகவேண்டும்' என்று வசீகரத்திடம் பேசும்போது வெளிப்படுத்துகிருர்.

தனக்கு மேல் உள்ள தலைவர்களிடத்தும் பொய்யாக நடித்து அவர்களைத் தன் வயப்படுத்துகிருர்.

தன் வீட்டில் தன் மனைவியிடமும் தன் மக்களிடமும் கூடத் தன் கயமைக் கொள்கையைப் பரப்புகின்றூர். தனக்குப் பேரிடுக்கண் வந்தபோது பெருந் துணையாய் இருந்தவனுகிய கனகலிங்கத்தின் வைப்பாட்டியையும் அவர் விட்டுவிடவில்லை. தேவையை நிரப்பி வந்த வசீகரம் மற்ருெருவன் வயப்பட்டாள் என்றபோது அஞ்சாது அவளைக் கொலை செய்கின்றூர். நெஞ்சில் துடுக்கம் மிக்கதும்,

> எற்றிற்கு குரியர் கயவரொன்
> றுற்றக்கால்
> விற்றற் குரியர் விரைந்து

எனும் குறட் கேட்பத் தன்னைக் கனகலிங்கத்திடம் அடிமையாக்கிவிடுகின்றூர். இறுதியில் தீவினை தம்மை முழுவதும் சூழ்ந்ததை அறிந்ததும் நஞ்சு குடித்து இறந்துபடுகின்றூர்.

இவ்வளவும் ஆணவராகிய கயவரின் தன்மைகள்.

கணக்கர் வேங்கடேசன் பாராட்டப்பட வேண்டிய பண்புகளெல்லாம் பெற்றவன். அவன் வழியாக ஆசிரியர் பல சீரிய கருத்துக்களை உலகியலுக்கேற்ப வெளியிடுகின்றூர். பெண்களை ஐந்து வகைகளாக

வும் அவ்வாறே ஆண்கள் ஐந்து வகைகளாகவும் பிரித்துக் காட்டும் அழகு போற்றுவதற்குரியது, 344-ம் பக்கத்தில் 'கதிரவன் ஒளி படிப்படியாக மறைந்து விட்டது' என்று தொடங்கும் கடற்கரை வருணனை மகிழ்ந்து இன்புறுவதற்குரியது. பாராளு மன்றத்திற்கு உரிய தேர்வினைப் பழைய குடவோலை முறையோடு தொடர்பு படுத்திப் புதியதொரு முறையினை வகுத்துக் காட்டுவதும், கொலைக் குற்றச் சட்டத்தைத் திருத்த மசோதா ஒன்றைப் புகுத்திக் காட்டுவதும் பொலிவுடன் விளங்குகின்றன. பெரும்பாலும் உரையாடல் நெறியினைச் சுவை குன்றாது காண்கின்றோம்.

முழுவதுமாகக் கயமை எனும் குறளதிகார விரிவாய் விளக்கமாய் அமைந்த சீரிய சிறந்த நூல் இது.

[ரேடியோ மலாயாவில் சென்ற 27-3-57-ல் ஒலி பரப்பப்பட்டது.]

●●●

ஒருவன் திருட்டுக் குற்றத்திற்காகக் கைது செய்யப்பட்டு, தண்டனையும் வழங்கப்பட்டது.

"கடைசியாக நீ என்ன சொல்ல நினைக்கிறாய்?" என்றார், நீதிபதி!

"கனம் நீதிபதி அவர்களே! நான் குற்றவாளி அல்ல. நான் கத்தியுடன் அந்த முதலாளியின் அறைக்குள் நுழைந்தபோது, அவர் என்னைப் பார்த்து பயந்து கொண்டு போர்வையால் முகத்தை இறுக்கி மூடிக்கொண்டு படுத்திருக்கிறார். அதற்குப் பிறகு அங்கு நடந்தது அவருக்கு எப்படித் தெரிந்திருக்க முடியும்? தயவு செய்து அவர் சாட்சியத்தை நம்பாதீர்கள்!"

—குற்றவாளி இப்படிக் கூறினான்!

●

ஒரு பெரிய தனவந்தர் தன் வீட்டிற்கு வந்த விருந்தாளிக்கு தோட்டத்தை யெல்லாம் சுற்றிக் காண்பித்தார்.

"இதோ பார்த்தீர்களா; இவை மூன்றும் நான் அதிகச் செலவில் கட்டியிருக்கும் நீச்சல் குளங்கள். இவைகளில் ஒன்றில் குளிர்நீர் இருக்கிறது. இரண்டாவதில் சுடுநீர் உள்ளது. மூன்றாவதை காலியாகவே வைத்திருக்கிறேன்!"

"காலியாகவா? எதற்காக?"—என்று கேட்டார் விருந்தாளி.

"ஓ அதுவா? அதை நீச்சல் தெரியாதவர்கள் பழகிக் கொள்வதற்காகக் கட்டியிருக்கிறேன்"—என்றார், தனவந்தர்!

—'இ. வீக்லி'

எழுதியவர்:
**வி. ஜி. விசுவநாதன்**

சேட் ஹரிராமுக்குச்சொந்தமான ''ராம்பவன்'' ஹோட்டல் அது இருந்த வட்டாரத்திலேயே பிரசித்தமானது. சென்னையில் அவர் இந்தத் தொழிலை ஆரம்பித்த போது சாதாரண ஹரிராமாகத்தான் இருந்தார். நாளடைவில் நல்ல பிராபல்யமடைந்தது அவரது கடை. சீக்கிரத்தில் பணக்காரராகி விட்டார். அநேக ஆட்கள் வைத்து கடையை நடத்தும்படியான நிலைக்கு வர முடிந்தது.

அன்று வழக்கம் போல கடை முகப்பில் பணப் பெட்டி அருகில் உட்கார்ந்திருந்த சேட், யாரோ ஒருவனுடன் உரத்த குரலில் விவாதம் பண்ணிக் கொண்டிருந்தார். வெகுநாளாகியும் வாங்கிய கடனைத் திருப்பித் தராததற்காக அந்த மனிதனைத் தாறுமாறாக ஏசிக் கொண்டிருந்தார்; அவனுடன் பேச்சுக் கொடுத்துக் கொண்டிருந்த போதிலும் கடையில் வருபவர் போகுபவர்மேல் கவனம் வைக்காமலில்லை. வியாபாரத்தையும் 'ஜரூரா'கக் கவனித்துக்கொண்டிருந்தார்.

பட்சணங்களெல்லாம் பளபளப்பான தட்டுக்களில் அழகாக அடுக்கப்பட்டு கண்ணாடிக் 'கேசில்' காட்சியளித்தன. அதற்குப் பக்கத்திலே நாக்கிலே தண்ணீர் ஊற, பட்சணங்களை விழுங்கி விடுவதுபோல பார்த்துக் கொண்டிருந்தான் ஒரு

# அதே குற்றம்!

ஏழைச் சிறுவன். நல்லபடியாக அவன் சாப்பிட்டு அநேக நாட்கள் ஆகிவிட்டன என்பதை அவனுடைய பரிதாபகரமான தோற்றமே கூறியது! அனாதை யாகப் பிறந்து, அனாதையாகவே வாழ்ந்த அந்தச் சிறுவனின்மேல் பரிவோ அல்லது பச்சாதாபமோ கொள்ள இந்தப் பரந்த சமுதாயத்தில் யாரும் இல்லைபோலும்!

சேட் பேச்சு மும்முரத்தில் தன் பக்கம் கவனம் செலுத்தாதபோது, மற்ற ஆட்களும் வந்திருக்கும் கூட்டத்தை சமாளிக்க ஈடுபட்டிருந்ததால், தட்டிலிருந்து ஏதாவது கொஞ்சம் எடுத்துவிடலாம் என்ற நப்பாசை அந்தச் சிறுவனுக்கு இருந்தது. பாவம், பசியின் கொடுமை பயத்தை அடக்கியது; அசட்டுத் துணிச்சலுடன் இம்மாதிரி காரியம் செய்யவும் தூண்டியது. பணத்தைக் காக்கும் பூத வர்க்கத்தைச் சேர்ந்த சேட் அந்தப் பையன் மிரள மிரள விழிப்பதையும் சந்தேகம் தூண்டும் வகையில் நடப்பதையும் கவனித்துக்கொண்டுதான் இருந்தார். பேச்சு சுவாரசியத்தில் சேட் வேறு பக்கம் திடீரெனத் திரும்பியபோது, பையனும் லபக்கென்று ஏதோ பட்சணத்தை எடுத்து இடையில் கட்டியிருந்த துணியில் ஒளித்துக் கொண்டான். ஆனால் சேட் அதை உடனே கவனித்துவிட்டார். அவ்வளவுதான்; தப்பி ஓட நினைத்த பையனை, 'கிங்காங்'குகளைப் போன்ற இரு வேலையாட்களை அனுப்பி உடனே பிடித்து வரச் செய்தார். அதற்குள் அவரைச் சுற்றி ஒரு சிறு கூட்டமே கூடிவிட்டது. சேட் ஆத்திரம் பொங்கும் கண்களோடு பையனை விழித்துப் பார்த்தார்.

''இந்தச் சிறு வயதிலேயே இவ்வளவு கைதேர்ந்த ஆளாகிவிட்டானே, இந்தப் பொடிப் பயல்!'' என அசட்டுப்புன்னகையோடு அபிப்பிராயம் தந்தார் பக்கத்திலிருந்த ஒரு மோட்டா ஆசாமி. சேட் பையனின் இரு கைகளையும் பிடித்துக் கொண்டு தன் கைக் குச்சியால் ஓங்கி அடிக்க ஆரம்பித்தார். பையன் அழுதுகொண்டே கூறிய பரிதாபகரமான கதையைக் கேட்க அவர் தயாராயில்லை. இரும்பு மனம் படைத்த கூட்டம் அந்தக் கதையைக் கேட்டா இளகப் போகிறது? கூட்டத்தில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாகப் பேசத் தலைப்பட்டனர்.

''பாருங்கள் சார், இந்த மாதிரி பசங்களோட முதுகுத் தோலை உரித்து விட வேணும்; இப்படி அநேகம் பேர் பிக்பாக்கெட், சில்லரைத் திருட்டு எல்லாம் பண்ணக் கிளம்பியிருக்காங்க சார்,'' என்றார் ஒரு பரந்த உலக அனுபவசாலி.

''நெஞ்சழுத்தத்தைப் பாருங்க; கடையிலே இவ்வளவு ஆட்களுக்கு நடுவிலே துணிச்சலோடு திருடியிருக்கானே,'' என்றார் இன்னொருவர்.

கூட்டத்தின் நடுவிலே அகப்பட்டுக் கொண்டிருந்த அந்தச் சிறுவன் எதுவும் பேச வழியற்று நின்று கொண்டிருந்தான். அவரவர்கள் விருப்பப்படி அவனைத் துன்புறுத்திய போதிலும் எதிர்த்துப் பேச உரிமையற்றவன் அவன். சேட் தன் கைவரிசையை நிறுத்தியபாடில்லை.

தற்செயலாக கடைக்குள் நுழைந்த ஒருவர் இந்த கலாட்

டாவைப் பார்த்தார். மனிதத் தன்மை படைத்தவர் போலும் அந்தப் புதியவர்! பையன் எடுத்த பட்சணத்திற்குத் தான் பணம் தந்து விடுவதாக ஒப்புக் கொண்டார். கூட்டத்திலிருந் தவர்களில் சிலர் அவரைக்கேலி செய்தனர். ''இந்த மாதிரி ஆட் களால்தான் உலகம் கெட்டுப் போகிறது! பெரிய தயாளன் மாதிரி இந்தத் திருட்டுப் பய லுக்கு உதவி செய்ய வந்துவிட் டார்,'' என்ருர் ஒருவர். ஆனல் புதிய மனிதர் இந்தக் கேலிகளை யும் கண்டனங்களையும் லட்சி யம் செய்யவில்லை. சேட்டுக்கும் உள்ளூர திருப்திதான், தான் ஒன்றுமே நஷ்டம் அடையாத வகையில். நல்லவேளை, குற்று யிராகக் கிடந்த சிறுவன் முழு உயிரும் போவதற்குமுன் காப் பாற்றப்பட்டான். சேட்டிற்கு ஒரு பெரிய காரியத்தை சாதித்து விட்டது போன்ற உணர்ச்சி —அகம்பாவத்துடன் தன் ஆசனத்தில் உட்கார்ந்து வியாபாரத்தைக் கவனிக்க மீண்டும் தலைப்பட்டார்.

அன்று மாலை ஏழுமணி சுமா ருக்கு வழக்கம் போலவே சேட் வீடு திரும்பினர். சுமுகமான வரவேற்பு காத்திருக்கவில்லை.

சேட் வந்ததும் வராததுமாக அவர் மனைவி கோபத்தில் இரைந்து கத்தினள். ''இதோ பாருங்கள், இப்போதே போய் நம் ஆனந்த் படிக்கும் பள்ளிக் கூடத்திற்கு எதிரே சின்ன பழக்கடை வைத்திருக்கிருனே. அவனைப் பிடித்து போலீசில் ஒப்புவித்தாக வேண்டும். மத்தி யானம் ஆனந்த் இடைவேளை யின்போது அந்தக் கடைப் பக் கம் வந்திருக்கிருன். அந்த கடை யில் ஆளைக் காணுமாம். ஒரு வரும் கடையில் இல்லாத தைப் பார்த்தபோது ஏதோ சின்னப் பையனுக்குத் தோன் ருதோ சில ஆசைகள்? ஒரு சின்னப் பழத்தை எடுத்து விட் டானும். இதை கடைப் பக்கம் திரும்பிக் கொண்டிருந்த ஆள் பார்த்து விட்டானும். அவ் வளவுதான்; நம் ஆனந்தை கொலைகாரப் பாவி, முதுகு வீங் கிட அடித்திருக்கிருன். நான் குழந்தையையும் கூட்டிக் கொண்டுபோய் அவனை இப் படி மரியாதை யில்லாமல் பெரிய மனிதர் வீட்டுக் குழந் தையை அடிக்கலாமா என்று கேட்டதற்கு, கேலி பண்ணி, தாறுமாருகப் பேசி, என்னை அனுப்பி விட்டான்! இந்தப் பரதேசிப் பயல்களுக்கெல்லாம் எப்படி இவ்வளவு துணிச்சல் வந்ததோ, தெரியவில்லை! நீங் கள் உடனே போய் போலீசில் அவனைப் பிடித்துக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும்,'' என்று புலம்பலுடனும் ஆங்கா ரத்துடனும் ஒரு பெரிய காண் டம் ஒப்புவித்தாள் சேட்டின் மனைவி.

என்ன பேசுவார் சேட்! பசி யின் கொடுமையால் கடையில் அன்று பகல் திருடிய அந்த அனதைச் சிறுவனுக்கு தான் அளித்த வெகுமதியும், எல்லா சௌகரியங்களும் இருந்தும் வேண்டுமென்றே திருடிய தன் மகனைத் தண்டித்த பழக்கடைக் காரன்மேல் தவறு காணும் மனைவியின் வார்த்தைகளும் ஒன்று சேர்ந்து நினைவுக்குவர, மேலே ஏதும் பேச முடியா மல் வாயடைத்து நின்ருர் சேட்!

○○○



198953

வங்கக்கதை

அரிமோகன் பணக்காரன்; மிகப் பெரிய பணக்காரன். அதனால்தான் அவன் கவனக் குறைவாலோ அல்லது போதுமான சம்ரட்சணைக்குப் பஞ்சத்தாலோ சாகமாட்டான் என்பதிலே எனக்கு ஒரு நம்பிக்கை இருந்தது.

பணத்தைக் கொண்டு எந்தெந்த மருந்துகளை வாங்க முடியுமோ அவைகளெல்லாம் வாங்கப்பட்டன. அரிமோகனைக் கவனிப்பதற்காக இரண்டு புகழ் பெற்ற டாக்டர்கள் தினந்தினமும் வந்து போய்க் கொண்டிருந்தனர். நர்சுகள் கூட இருவரை வரவழைக்கும் நோக்கமிருந்தது. ஆனால் அரிமோகனின் அருமருந்தன்ன மனைவி சரமாவோ தனது கணவனுக்கு வேறொருவர் பணிவிடை செய்வதைத் தன்னால் அனுமதிக்க முடியாது என்று ஒரேயடியாகக் கூறி மறுத்து விட்டாள்.

சரமா அரிமோகனை அவ்வளவாகக் கவனித்துக் கொண்டாள்; வீட்டுக்கு வரும் இரு டாக்டர்களும்கூட ஆச்சரியப்பட்டார்கள், உண்மையில் நோயாளிகளுக்குச் சிகிச்சை செய்வதையே நோக்கமாகக் கொண்ட நர்சுகள்கூட இவ்வளவு அக்கறையுடன் பணி

யாற்ற முடியுமா — என்று! சரமா இருப்பதால் நர்சுகள் தேவையில்லை—என்பதை அவர்கள் மனப்பூர்வமாக ஒப்புக் கொண்டார்கள்!

ஆனால் அரிமோகனுக்கு வந்த வியாதியோ மகாக் கொடூரமானது — டி. பி.! ஒவ்வொரு வினாடியும் அவன் இரத்தம் இரத்தமாகத் துப்பிக் கொண்டிருந்தான்; ஒவ்வொரு நாளும் அவனுக்கு ஜுரம் அதிகரித்துக் கொண்டே இருந்தது.

அவனிடம் பணம் இருந்ததால் அவன் எவ்வளவு வேண்டுமானாலும்செலவுசெய்துகுணப் படுத்திக் கொள்ளலாம் என எல்லோருக்கும் தெரியும். இருந்தாலும் அந்த வியாதி குணமடையுமா — என்பதிலே ஒருவருக்கும் நம்பிக்கையில்லை. அவனது வாழ்க்கை நாடகத்தின் கடைசிக் காட்சி முடிவுற்று; திரை விழப்போகும்நேரம் மிக சமீபத்தில்தான் வந்து கொண்டிருக்கிறது — என்பது அனைவருக்குமே விளங்கலாயிற்று.

அரிமோகன் பால்ய வயது முதலாகவே எனது நண்பன். வகுப்பறையிலே நாங்களிருவரும் பக்கம் பக்கமாகத்தான் உட்காருவோம். ஆனால் என்ன காரணத்தினால் எங்கள் நட்பு இவ்வளவு காலம் நீடித்தது—என்பது விளங்கவில்லை; ஏனெனில் பணக்காரர்—ஏழை சிநேகிதம் அதிக நாள் நீடிப்பது அரிதாயிற்றே! இருந்தாலும் நான் நாள் தவறினாலும் அவனைச் சந்திப்பதற்குத் தவற மாட்டேன்.

மேலும், அரிமோகனுக்கு அவனுடைய மனைவி சரமாவைத் தவிர வேறு எவருமே துணை இல்லை. அவனிடம் பணமிருக்கிறது என்பது உண்மைதான். சர்க்கரையிருக்குமிடத்தில் எறும்புகள் வட்டமிடுவதைப் போலவே இந்தப் பணக்காரனைச் சுற்றியும் பல மனித எறும்புகள்—ஆண்களும் பெண்களுமாக — வட்டமிட்டனர்! ஆனால் அவனைப் பிடித்திருக்கும் வியாதி டி. பி. என்பது பட்டவர்த்தனமானவுடன் அந்த எறும்புகளின் கூட்டம் ஒன்று கூட இல்லாமல் மறைந்து விட்டது. ஒரு சமயம் அவை வேறொரு சர்க்கரை மூட்டையைத்தேடிக் கொண்டு போய் விட்டனவோ, என்னவோ! இப்போது நான்தான் மிஞ்சியவன், அரிமோகனிடம்! அவனிடமும் அவன் மனைவி சரமாவிடமும் உண்மையிலேயே உள்ளன்பு வைத்திருப்பவன், நான் ஒருவனேதான்!

★

அரிமோகன் தலையணையில் சாய்ந்தபடி பலமாக இருமிக் கொண்டிருந்தான். இருமிக் கொண்டிருந்தபோதே அவன் பேசினான்:

"இருமி இருமி என் தொண்டையெல்லாம் வரண்டு விட்டது. இந்த எழவு எப்போதுதான் நிற்குமென்று தெரியவில்லையே!"

"பயப்படாதே! எல்லாம் சரியாகிவிடும்!" — நான் சொன்னேன்.

"நான் ஒன்றும் பயப்படவில்லை. ஆனால் இது எவ்வளவு தொந்தரவாய் இருக்கிறது தெரியுமா?"—மறுபடியும் இருமினான்.

சில வினாடிகள் நாங்கள் இருவரும் மௌனமாகவே இருந்தோம்.

"இது சாதாரண 'இன்புளுயன்சா'வாகத்தான் இருக்க வேண்டும். சளியை சோதனை செய்து அதில் ஏதும் குற்றமில்லை என்று சொல்கிறார்கள்" —அரிமோகன் முணகினான். பாவம்; வியாதி இன்னதென்று அவனுக்குத் தெரியாது!

சரமா அப்போதுதான் ஒரு கிண்ணத்தில் பாலுடன் நுழைந்தாள்.

அரி மீண்டும் பேசலானான்.

"பாலா? மறுபடியும் அந்தச் சனியனா?"

"எப்படியாவது பால் சாப்பிட வேண்டும் என்று டாக்டர்கள் சொல்லியிருக்கிறார்களே!"

"வேண்டாம்; என்னால் சாப்பிட முடியாது! தொந்திரவு செய்யாதே!"

—சரமா இதைக் கேட்பதாக இல்லை.

"டாக்டர்கள் பேச்சைத் தட்டக்கூடாது. இதையெல்லாம் சாப்பிட்டால்தான் குணமாகும். கொஞ்சம்தான் கொண்டு வந்திருக்கிறேன்; சாப்பிடுங்கள்!"

—சரமா பால் கிண்ணத்தை அவன் முன்னே நீட்டினாள்.

அரிமோகன் கொஞ்சமும் செவி சாய்க்கவில்லை.

வெறுப்பையெல்லாம் முகத்தில் வரவழைத்துக் கொண்டு; இருமியபடியே வேண்டாம்—என்று செய்கை காட்டினான். சரமா அனுதாபத்தோடு என்னைப் பார்த்தாள். "நீங்கள் கொஞ்சம் சொல்லுங்கள்!"—ஆர்வத்தோடு கேட்டுக் கொண்டாள்.

அந்தக் காட்சி என்னை மிகவும் உருக்கி விட்டது. அரிமோகனை நான் கெஞ்சிக் கேட்டுக் கொண்டேன்.

''கொடுத்துத் தொலையுங்கள்!''—என்று கூறியபடியே; அரிமோகன் கிண்ணத்தை வாங்கி இரு முறை வாய் வைத்து உறிஞ்சினான்; இருமினான்; பாலைத் திருப்பிக் கொடுத்து விட்டான்.

சோகமே உருவான சரமா பாதிவரை பால் நிறைந்த அந்தக் கிண்ணத்தை வாங்கிக் கொண்டு உள்ளே நுழைந்தாள்.

நான் வந்தும் நேரமாகி விட்டது; அரிமோகனிடத்தில் விடைபெற்றுக் கொண்டு நானும் வீட்டிற்குப் புறப்பட்டேன்.

அவனது அறையிலிருந்து வெளியே வந்து கூடத்துக்குள் நுழைந்தேன். ஆனால் அந்தக் காட்சியைக் கண்டு திடுக்கிட்டுப் போய் விட்டேன்!

ஆமாம்; அரிமோகன் வாய் வைத்து உறிஞ்சிக் குடித்து விட்டு மீதி வைத்திருந்த பாலை சரமா மிகவும் சுவைத்துச் சாப்பிட்டுக் கொண்டிருந்தாள்.

''செய்யலாமா இந்தக் காரியம்?''—படபடப்புடன் கேட்டேன் நான்!

''ஒன்றுமில்லை...... தயவு செய்து இதை வேறு யாரிடமும் சொல்லி விடாதீர்கள்!''—மிகவும் கெஞ்சிக் கேட்டுக் கொண்டாள், அவள்!

''நான் யாரிடமும் சொல்ல மாட்டேன். ஆனால் ஒன்று; டி. பி. வியாதியஸ்தன் வாய் வைத்துச் சாப்பிட்ட பாலை பிறர் சாப்பிடுவது எவ்வளவு அபாயகரமானது என்பது உங்களுக்குத் தெரிந்ததுதான். தெரிந்தும் விஷத்திற்குச் சமமான அந்தப் பாலை ஏன் சாப்பிட்டீர்கள்?''

''கணவன் சாப்பிட்டு மீதி வைத்ததை மனைவிமார்கள் சாப்பிடுவதால் ஆபத்து ஒன்றுமில்லை. அப்படியே விஷமாகத்தான் இருந்தால்தான் என்ன? அவரே போய்விட்டால் நான் இந்த உலகத்தில் வாழ்ந்து என்ன சுகத்தை அனுபவிக்கப் போகிறேன்? குழந்தையொன்று இருந்தாலாவது என் வாழ்க்கைக்குப்

இரு குடிகாரர்கள் குடித்து விட்டு ஓட்டலுக்குள் நுழைந்தார்கள்.

அதிக போதையில் இருப்பவன் கதவைத் திறக்க முயற்சித்தான்.

''என்னப்பா இது; சிகரெட்டால் கதவைத் திறந்தால் அது திறக்குமா?''—நிதானம் இழக்காதவன் கேட்டான்.

அதற்கு நிதானம் இழந்தவன் இப்படிப் பதில் சொன்னான்: ''நான் சிகரெட்டால் கதவைத் திறக்கிறேனா? அப்படியானால் இவ்வளவு நேரம் சாவியை வாயில் வைத்துக் கொண்டா புகையிழுத்துக் கொண்டிருக்கிறேன்?''

பிடிப்பு இருக்கும். இந்த அபாக்யவதிக்கு அதுவும் கொடுத்து வைக்கவில்லை. இனி மேல் அவர் போகிற இடத்துக்கு சீக்கிரம் போய்ச் சேர வேண்டுமென்பதைத் தவிர என் வாழ்க்கையில் வேறு குறிக்கோள்தான் என்ன இருக்கிறது?''

—இந்த வார்த்தைகளைக் கேட்டதும் என் கண்களில் தண்ணீர் வந்துவிட்டது. நான் எவ்வளவோ கூறினேன்; இனியொருமுறை இந்தக் காரியத்தைச் செய்யாதீர்கள் — என்று உபதேசித்தேன்; வீடு திரும்பினேன்!

★

அரிமோகனுடைய வியாதி மோசமான நிலையை அடைந்தது. அவனுக்கு வந்திருக்கும் வியாதி டி. பி. என்பதை அவனிடமிருந்து மறைக்க முடியவில்லை.

நோயின் பெயரைத் தெரிந்து கொண்டதும் அரிமோகன் அதிர்ச்சியடைந்தான்; அமைதி இழந்தான்!

மேலும் இரு டாக்டர்கள் வரவழைக்கப்பட்டார்கள். நால்வரும் கூடி பலமான ஆலோசனை நடத்தினார்கள்; 'எக்ஸ்ரே' எடுத்தார்கள்.

அவனுடைய சுவாசப்பைகளில் ஒன்று மட்டும் தாக்கப்பட்டிருந்ததாம். எனவே விரைவிலேயே அவனை தர்மாபூரில் உள்ள 'சானட்டோரிய'த்துக்கு அழைத்துச் சென்றார்கள்; சரமாவும் உடன் சென்றாள்.

—இதன் பிறகு அரிமோகனைப் பற்றித் தகவல் எதுவும் எனக்கு கிடைக்கவில்லை.

தர்மாபூரிலிருந்து எனக்கு சில கடிதங்கள் வந்தன. பிறகு கடிதத் தொடர்பும் நின்று விட்டது. ஒரு சமயம் கடிதம் எழுத அவனுக்கு ஓய்வில்லையோ; அல்லது வியாதிதான் முற்றி விட்டதோ தெரியவில்லை.

திடீரென்று ஒருநாள் அரிமோகன் வியாதியைக் குணப்படுத்திக் கொள்ள ஸ்விட்சர்லாந்து போயிருப்பதாகக் கேள்விப்பட்டேன்! பூரா விபரமும் எனக்குத் தெரியவில்லை.

குமாஸ்தா என்கிற முறையில் என் வாழ்க்கை ஓடிக் கொண்டிருந்ததைத் தவிர வேறு சுவையேதுமில்லை.

★

பத்து ஆண்டுகள் கழிந்தன. அரிமோகன் எனது நினைவிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக மறைந்து வந்தான்.

திடீரென்று ஒருநாள் எனக்கு ஒரு கடிதம் வந்தது. அதில் வேறு ஏதும் விபரமாக எழுதப்படவில்லை:

''அன்புள்ள நரேஷ்! நான் கல்கத்தாவிற்கு அடுத்த செவ்வாயன்று வருகிறேன். முடிந்தால் தயவு செய்து நீ அங்கு வந்து என்னைச் சந்திக்கவும்.

—அன்புள்ள, அரிமோகன்.''

—சுருக்கமான கடிதம்! கல்கத்தாவிற்குப் பக்கத்திலுள்ள அவனது கிராமத்திலிருந்து எழுதப்பட்டிருக்கிறது.

அரிமோகன் எப்போது சுவிட்சர்லாந்திலிருந்து திரும்பி வந்தான்? எத்தனை நாட்களாக கிராமத்தில் தங்கியிருக்கிறான்? —இவையெல்லாம் எனக்கு விளங்காத புதிராகவே இருந்தது.

நான் செவ்வாயன்று மாலை அலுவலகம் முடிந்ததும் அரி மோகன் வீட்டிற்குச் சென்றேன்.

நான் வீட்டிற்குச் சென்றவுடனேயே என்னை எதிர்பார்த்திருந்த அரிமோகன் இரு கை யேந்தி வரவேற்றான்.

ஆனால் ஆச்சரியம்! நோயால் மெலிந்து மரணத்தோடு போராடிக் கொண்டிருந்த அந்த அரிமோகனைக் காண வில்லை. உப்பி — ஊதி — உரு மாறியிருந்த அரிமோகனைத் தான் நான் பார்த்தேன்!

உடலிலுள்ள எலும்புகளை யெல்லாம் காட்டிக் கொண்டிருந்த அரிமோகன் இப்போது சதைக் குன்றாக எனக்கெதிரே நின்று கொண்டிருந்தான்.

ஒரு காலத்தில் இவனுக்கு டி. பி. இருந்தது என்று யாரும் சொல்ல முடியாத அளவுக்கு அவன் மாறியிருந்தான்.

''என்ன மோகன்; உடம் பெல்லாம் எப்படியிருக்கிறது?''

''பூரணமாகக் குணமாகி விட்டது!''

—உடனே அரி தனக்கு நடந்த வைத்தியச் சிகிச்சைகளைப் பற்றியும்; தன்னைப் பார்த்த டாக்டர்களைப் பற்றியும் கூற ஆரம்பித்தான்!

''ஸ்விட்சர்லாந்து எப்படி இருக்கிறது நண்பா?''—கேட்டேன் நான்!

''அதையேன் கேட்கிறாய்? நாம் புத்தகங்களில் படித்ததை விட பத்தாயிரம் மடங்கு அதிக அழகாயிருக்கிறது, அந்த நாடு! சரி, வா; உயரே போய் பேசுவோம்!''—என்றவாறே என்னை மாடிக்கு அழைத்துச் சென்றான்.

மாடிக்குச் சென்றோம்; அழகான சோபாவிலே அமர்ந்தோம்.

''சரமா! சரமா! இங்கு யார் வந்திருப்பது பார்த்தாயா? நரேஷ் வந்திருக்கிறான். அவனுக்கு சூடாக தேநீர் கொண்டு வா!''

—உட்கார்ந்தவாறே குரல் கொடுத்தான், அரிமோகன்!

---

ஓட்டலில் சாப்பிட்ட பிறகு; பறிமாறுபவர்களுக்கு சிலர் 'பக்சிஸ்' கொடுப்பார்கள்.

அதைப் பற்றி இரு வேலைக்காரர்களிடையே வாதம் தோன்றியது.

''பணக்காரர்கள் கொஞ்சம்தான் இனாம் கொடுக்கிறார்கள். ஆனால் ஏழைகளோ அதிக இனாம் தருகிறார்கள். இது ஏன்?''-புதிதாக வேலைக்கு வந்திருப்பவன் கேட்டான்.

அதற்கு அனுபவசாலி இப்படிப் பதில் கூறினான்: ''பணக்காரன் தனது பணத்தையெல்லாம் ரகசியமாக வைத்துக் கொள்ள நினைக்கிறான். ஏழை தன்னிடம் ஒன்றுமில்லை என்பது பிறர் கண்களுக்குத் தெரியக்கூடாது என்று நினைக்கிறான். இதுதான் காரணம்.''

மீண்டும் அரிமோகன் பேசலானுன்: "என்ன நரேஷ்! நீ கூட மாறிவிட்டாயே! உன் தலையெல்லாம் நரைத்துவிட்டதே! என்ன காரணம்? உனக்குத் தெரியுமா—மேல் நாட்டிலெல்லாம் ஐம்பது வயதில்தான் வாலிபம் ஆரம்பமே ஆகிறது!"

"மேல் நாட்டையும் நம் நாட்டையும் ஒப்புமைப்படுத்தாதே, நண்பா! இருபது ஆண்டுகளாக நான் 'இறகு பேனு ஓட்டி'யாக வேலை பார்த்து வருகிறேன். நன்ருக மூச்சுவிட்டு மூச்சு வாங்குவதற்குக்கூட நேரமில்லை.

—இந்தச் சில வார்த்தைகள் மூலம் எனது வாழ்க்கையையே அவனுக்கு விளக்க முயன்றேன் நான்!

அப்போதுதான் சரமா கையில் சிற்றுண்டித் தட்டுகளுடன் நுழைந்தாள். அவளைப் பார்த்ததும் என் கண்களையே என்னுல் நம்பமுடியவில்லை.

ஆமாம்; பத்தே ஆண்டுகளில் அவள் மாறியிருந்தாள்; அடையாளம் கண்டுபிடிக்க முடியாத அளவுக்கு மாறியிருந்தாள்!

சிற்றுண்டித் தட்டுகளை மேஜைமீது வைத்தாள். "சாப்பிடுங்கள்; கீழே சென்று தேநீர் கொண்டு வருகிறேன்!" என்று கூறிப் போய் விட்டாள்.

நான் அரிமோகனிடம் கூறினேன்: "பத்து ஆண்டுகளில் உன் மனைவி இவ்வளவு மாறிவிட்டாளே!"

அரிமோகன் சிறிது நேரம் என்னை உற்றுப் பார்த்தான்.

"ஆமாம், நரேஷ்! சரமா மாறிவிட்டாள். ஆனுல் முன்பு இதே வீட்டில்; இதே இடத்தில் நீ பார்த்த சரமா அல்ல இப்போது சிற்றுண்டி கொண்டுவந்த அந்தச் சரமா! அந்தச் சரமா எப்போதோ செத்துவிட்டாள்! அவளுக்கு டி. பி.—ஆனுல் இரு சுவாசப் பைகளும் கடுமையாகத் தாக்கப்பட்டிருந்தன! எவ்வளவோ செலவு செய்து பார்த்தேன்; அவள் பிழைக்கவில்லை!"

நாங்கள் இருவருமே சிறிது நேரம் மௌனமாக இருந்தோம். மறுபடியும் அரிமோகன் பேசலானுன்.

"பிறகு என்னுல் இன்னெரு கல்யாணம் செய்து கொள்ளாமல் இருக்க முடியவில்லை. பெண் தேடினேன்; கிடைத்தது. இதில் என்ன வேடிக்கை தெரியுமா? புதிதாக வந்திருக்கும் இவள் பெயரும் சரமா தான்!"

—அரிமோகன் கதையை முடித்தான்.

என் கண்கள் செத்துப்போன அந்தத் தியாகி சரமாவிற்காக இரு துளி கண்ணீரைச் சிந்திற்று.

அதற்குள் புதுச் சரமா தேநீர் கோப்பைகளுடன் நுழைந்தாள். அவள் பார்த்து விடாதபடி நான் அவசர அவசரமாகக் கண்களைத் துடைத்துக் கொண்டேன்!

வங்க மூலம் : 'போனேபுல்'

தமிழில் : மாறன்

"ஏய், நிறுத்து! நிறுத்து! இத்தனை பேருக்கு மத்தியிலே இத்தனை பேரை 'லோடு' ஏத்திக்கிட்டுப் போறியே, என்ன திமிர் உனக்கு!..."



# மாகியின் பரிசு

கிருஸ்தவர்கள் புனிதமாகக் கொண்டாடும் 'கிருஸ்துமஸ்' திருநாளுக்கு முன் தினம் காலை மணி பத்து இருக்கும்.

மாகியின் வீட்டில் பரபரப்பு காணப்பட்டது. நாளை வரும் திருநாளை சிறப்புடன் கொண்டாட அவள் ஓடியாடி வீட்டை அலங்கரிப்பதில் முனைந்திருந்தாள்! உண்டி முடித்த அவள் கணவன், பணிமனைக்குச்செல்ல ஆயத்தமாகிக் கொண்டிருந்தான்.

"கண்ணே-மாகி..."

"வந்து விட்டேன் அன்பே!" என்று குரல் கொடுத்தவாறு அடுத்த அறையிலிருந்து வெளி வந்தாள் மாகி.

"இப்படி அருகில் வா-மாகி"

ஆணைக்குப் பணிந்து அருகில் வந்த அவள் கரங்களைப்பற்றி இழுத்தான். வழக்கமான 'விடை பெறும் முத்தம்' அவன் கேட்காமலே கொடுத்தாள். அவளைத் தன் மடிமேல் அமரச் செய்தவாறே இப்படிக் கேட்டான்.

"கண்ணே! நாளை நான் உனக்கு என்ன பரிசளிக்கட்டும்?"

"எனக்கிருக்கட்டும் — உங்களுக்கு நான் என்ன பரிசளிப்பது?" என்றாள் அவள்.

அவன் அவள் செவ்வதரங்களைக் காட்டி "அதில் ஊறும் தேனை எனக்குக் கொடுத்தால் போதும்," என்றான்.

"அதுதான் உங்கள் சொத்தாயிற்றே— என்னுடையதென்று எது வேண்டும்?"

அவள் கேள்வியை அவன் கவனிக்கவேயில்லை. அவன் 'சொத்தை' அனுபவிக்க ஆரம்பித்துவிட்டான். நெகிழ்ந்து கொடுத்த அவளை அணைத்தபடி, முடித்துவிட்டிருந்த அவள் கூந்தலை அவிழ்த்து விட்டான். அவளுக்கு ஒரே வெட்கம்! கடிந்து கொள்ளும் பாவனையில், அவள் சொன்னாள்:

"என்ன இது, சிறு குழந்தை மாதிரி; பணி மனைக்கு நேரமாகவில்லை?"

அவன் சொன்னான்: "அன்பே! நானும் நமக்கு மணமான பின் இந்த ஈராண்டுகளாக பார்க்கிறேன்; நீ உன் கூந்தலை அவிழ்த்து விட்டு நான் பார்த்ததில்லை. அதனால்தான் நான் இன்று குழந்தையாக மாறிவிட்டேன்!"

காலைச் சூரியனின் ஒளிக் கற்றைகளினால் நீண்டு, அடர்த்தியான, அவள் பொன்னிறக் கூந்தல் தங்கக் கம்பிகள்போல அவன் மடிமீது தவழ்ந்தது. அதை இருகரங்களாலும் தழுவி முத்தமிட்டான். வெறுக்க

வில்லை மாகி—ஆனாலும் வெட்கப்பட்டாள். மிகுந்த சிரமத்துடன் அவனை வாசல்வரை அனுப்பிவிட்டு உள்ளே வந்து, கூந்தலை முடிந்து கொண்டாள். பரிசளிக்கும் பொருள் இதனால் முடிவு பெறாமலே நின்று விட்டது.

●

மாகிக்கு மணமாகி இரண்டு ஆண்டுகளே ஆகியிருந்தது. அவள் அந்தச் சிற்றூருக்கு எழிலரசிபோல இருந்தாள். அவள் கணவன் மாகியைக் காதலித்து, பின் கடிமணம் செய்து கொண்டவன். அவனுக்கு மாகி கிடைத்ததால் அவ்வூரிலே பலருக்கு அவன்மேல் பொறாமை கூட இருந்தது. அவன் ஒரு வர்த்தகப் பணிமனையிலே கணக்காயனாக பணிபுரிந்து வந்தான். வந்த ஊதியமென்னவோ குறைவுதான். ஆனால் மாகி மிகவும் செட்டாகக் குடித்தனம் நடத்தி குறையொன்றுமில்லாமல், வாழ்க்கை ஓடம் ஆடாமல் அசையாமல் செல்ல உதவி புரிந்தாள்.

●

கணவன் பணி மனைக்குச் சென்றவுடன் கடை வீதிக்குப் புறப்பட்டாள் மாகி. அலங்கரிக்கப்பட்ட அங்காடிகள் அவள் வரவை எதிர் நோக்குவன போல இருந்தன. பொன்னாபரணங்கள் விற்கும் அங்காடி ஒன்றினுள் நுழைந்தாள். நீண்ட நேரம் தேடியபின்னரே அவள் நாடிவந்த பொருள் கண்ணிலே பட்டது. அது ஒரு 'பாக்கெட் கடிகாரச் சங்கிலி!' விலையைப் பார்த்தாள். இருபது டாலர்கள்! அவள் இருதயம் படபடத்தது.

நேராக வீடு திரும்பினாள். அவள் அவ்வாண்டு பூராவும் சேமித்து வைத்திருந்த சிறு

மூலம் : ஓ. ஹென்றி
தமிழில் :
இல. மழலைச்செல்வன்

நாணயங்களையெல்லாம் திரும்பத் திரும்ப எண்ணிப் பார்த்தாள். ஒன்பது டாலர்களும் சொச்சமும்தான் இருந்தது. ஏமாற்றம் அவளை உணர்வற்றவளாக ஆக்கிவிட்டது.

அவள் கணவன், அவனுடைய தாத்தாவின் கடிகாரத்தை வைத்திருந்தான் அதனுடன் இணைக்கப்பட்டிருந்ததோ ஒரு சாதாரண பட்டுக் கயிற்றாலான சங்கிலி. அதனைக் கண்டு பிறர் எள்ளி நகைக்காவண்ணம், கடிகாரத்தைஅவன் சட்டைப் பைக்குள்ளேயே வைத்திருந்தான்.''அதற்கு மாத்திரம் ஒரு தங்கச்சங்கிலி வாங்கி பரிசளித்து விட்டால், தன் கணவன் பிறர்கண்டு பொறாமைப்படுகின்ற வண்ணம் சட்டைக்கு மேலேயே அணிந்து கொள்ளுவாள் அதை—என்று

எண்ணமிட்டது அவள் பேதை யுள்ளம். ''இந்த சிறு பரிசைக் கூட என் கணவருக்கு நான் அளிக்காவிட்டால், அவர் அன்பைப் பெற்ற நான் எதற்குத் தான் பயன்?'' என்று பிடிவாத உணர்ச்சி ஒன்று அவளை மேலும் செயல்படத் தூண்டியது.

●

ஒரு மணி அவகாசம் இப்படியே கழித்துவிட்டாள். சன்னலருகில் நின்றவாறு கடை வீதியையே பார்த்துக் கொண்டிருந்த அவளுக்கு ஒரு முடிவான யோசனை உதயமாயிற்று! வீட்டைப் பூட்டிக்கொண்டு வேகமாகக் கடை வீதிக்குச் சென்றாள். ''பொய்க் கூந்தல்'' விற்கும் கடை ஒன்றினுள் சென்றாள். கடைச் சொந்தக்காரனிடம் மெதுவாகப் பேசினாள்.

''நீங்கள் கூந்தலை விலைக்கு வாங்குவீர்களா?''

''ஆமாம்; அதற்கென்ன?''

''என் கூந்தலை வாங்க நீங்கள் சம்மதிப்பீர்களா ?''

''பார்த்துத்தான் சொல்ல முடியும்!''

அவளை ஒரு ஆசனத்தில் அமர வைத்து, முடித்துவிட்டிருந்த அவள் கூந்தலைப்பிரித்து விட்டவன் திகைத்து விட்டான். நீண்ட, பளபளப்பான, பொன்னிறமான மாகியின் கூந்தலைப்போல, முன்பு எவரிடமும் கண்டதில்லை அவன். திகைப்பை சமாளித்துக் கொண்டு அவன் பேசினான்:

''வாங்கிக் கொள்கிறேன். ஆனால் பத்து டாலர்களுக்கு மேல் ஒரு சல்லியும் கிடைக்காது!''

திகைப்பு இப்பொழுது மாகிக்கு! உயிரினும் இனிய தாய் வளர்த்து வந்த அவள் கூந்தலுக்கு பத்தே டாலர்கள்! அன்று காலை அவள் கணவன் கண்டு, பெருமிதப்பட்டு, முத்தமிட்ட அவள் கூந்தலுக்கு பத்தே டாலர்கள்! அவளுக்கு இந்த நினைவெல்லாம் மனம் புண்படச் செய்தது. மனதைக் கல்லாக்கிக் கொண்டு அவள் சொன்னாள்:

''ஐயா, என் மனதை நான் மாற்றிக் கொள்ளு முன்பு, சிக்கிரமாக கூந்தலை வெட்டி விடுங்கள் !''

அவள் சொல்லி வாய்மூடு முன் கடைக்காரன் அவள் கூந்தலை வெட்ட ஆரம்பித்து விட்டான் — அவனுக்கு ஒரே பேராசை!

அவள் கையில் அவன் எண்ணிப் போட்ட நாணயங்கள் அவளைப் பார்த்து ஏளனச் சிரிப்பு எழுப்புவதுபோல சப்தமிட்டன.

வீட்டுக்கு வந்த அவள் வேதனையுடன் கண்ணுடியைப் பார்த்தாள். அவள் உருவம் அவளைப் பார்த்து கேலி செய்வதுபோல இருந்தது. பூப்போட்ட துண்டு ஒன்றினை முக்கோண வடிவாக்கி, முக்காடிட்டதுபோல கட்டிக் கொண்டாள். இனி வருந்திப் பயனில்லை என்ற முடிவுக்கு வந்தாள். அவள் சேமிப்புடன் பத்து டாலரும் சேர்ந்து இருபது டாலரை எட்டிப்பிடித்தது. உடனே அந்தப் பொன்னுபரணக் கடைக்குப் போய், கடைக்காரனிடம், அவளிடமிருந்த நாணயங்களைக் காட்டி, ''ஐயா! என்னிடம் இருக்கும் பணம் இவ்வளவுதான். நான் என் கணவருக்கு திருநாள் பரி

சாக இந்தச் சங்கிலியைக் கொடுக்க பிரியப்படுகிறேன். எப்படியாவது இதை எனக்குக் கொடுங்கள்!'' என்று கெஞ்சும் பாவனையில் அவள் பார்த்து வைத்திருந்த சங்கிலியைக் காட்டினுள். கடைக்காரன் சிறிது இரக்க சிந்தனையுள்ளவன். பத்தொன்பது டாலர்களுக்கே அதைக் கொடுத்து விட்டான். பணமும் பண்டமும் கை மாறின. மாகி சிட்டுபோல் பறந்தாள் இல்லம் நோக்கி. மாலையும் வந்தது. கணவன் வரவை ஆவலுடன் எதிர்பார்த்திருந்தாள்.

●

பணி மனையிலே அவனுக்கு வேலையே ஓடவில்லை. கடிகாரத்தை அடிக்கடி பார்த்தபடியே இருந்தான். மணி ஐந்து ஏன் இன்னமும் வரவில்லை என்று மனம் நொந்தபடி இருந்தான். திருநாளுக்கு என்ன பணம் (போனஸ்) பரிசாகத் தருவது என்று வேறு இன்னமும் தீர்மானமாகவில்லை பணி மலையில். இது வேறு எரிகிற நெருப்பிலே எண்ணெய் வார்த்ததுபோல இருந்தது.

அவன் எதிர்பார்த்த நேரம் வந்தது. ஆனுல் ஒரே ஏமாற்றம்! அவ்வாண்டு கணிசமான வியாபாரமில்லாமையால், வழக்கமாகத்தரும் ''கிருஸ்துமஸ் பரிசுப் பணம்'' கழுதை தேய்ந்து கட்டெறும்பானதுபோல், கால் பங்காகி விட்டது. அவன் மனக்கோட்டை மழையில் சரிந்த மணல்கோட்டையாயிற்று. அவனுக்குக் கிடைக்கக்கூடிய ''பரிசுப் பணம்'' துணி மணிகள், விருந்துச் செலவுக்கே போதாது. அவன் மாகிக்கு பரிசளிக்க நினைத்த 'ஃபர் கோட்'



''ஏனப்பா உங்கள் வழுக்கைத் தலையில் முடி வளர்வதில்லை?''

''தார் ரோடில் ஏன் புல் முளைப்பதில்லை? அதைப் போலத்தான்!''

''ரோடிற்குக் கீழே கல்லும், மண்ணும், காங்ரீட்டும் இருக்கின்றன. அப்படியானுல் உங்கள் தலைக்குக் கீழும் அப்படியா இருக்கிறது?''

---

என்னும் மேலங்கி அவனுல் சுட்டாயம் வாங்க முடியாது.

மிகுந்த மனச்சுமையுடன் பணிமனையை விட்டுப் புறப்பட்டான். வீடு சேர மணி ஆருகி விட்டது.

●

வீட்டிற்குள் நுழைந்த அவனுக்கு மறு அதிர்ச்சி—மாகியைக் காண ஏனே அவன் கண்கள் கூசின.

''கண்ணே! மாகி! இது என்ன கோலம்? ஏனிப்படிச் செய்தாய்?'' என்று கேட்டவாறு அவளைத் தழுவினுன். பித்தம் பிடித்தவன்போல அவள் முகத்தை இரு கரங்களாலும் நிமிர்த்திப் பிடித்தபடிப் பார்த்தான்.

''அன்பே! என்னை மன்னித்து விடுங்கள். உங்களுக்கு நல்ல பரிசு வாங்கவே, நான் என் கூந்தலை விற்று விட்டேன். கூந்தலை நான் அடுத்தத் திருநாளுக்குள்

வளர்த்து விடுவேன். என்னைக் கோபிக்கவில்லை என்று ஒரு வார்த்தை சொல்லுங்கள்,'' என்று அவனை அணைத்து முத்த மிட்டாள் மாகி. அவள் அளித்த முத்தம் ஏனோ அவனுக்கு ஆறு தல் தரவில்லை-

அப்பொழுதுதான், அவன் கையிலே வைத்திருந்த அழ கான பெட்டியைப் பார்த்தாள். அதைப் பிடுங்கிக் கொண்டு வேகமாக ஓடி, பிரித்துப் பார்த் தாள், மாகி. திகைத்து விட் டாள். அவள் கண்களில் நீர் சுரந்து விட்டது. ஏனென்றால் அவள் கணவன் அவளுக்குப் பொன்னாலான கூந்தல் ஊசிகள் வாங்கி வந்திருந்தான். அவ ளுக்கு துக்கத்துக்கு மேலாக சிரிப்புதான் வந்தது! பொன்னா லான கூந்தல் ஊசிகள் என்ன பயன் அவளுக்கு? அவன்பொன் னிறமான கூந்தல்தான் போய் விட்டதே.

●

நாற்காலியில் சோகமாக உட் கார்ந்திருந்த கணவன் மடிமீதி னில் அமர்ந்தாள் மாகி. நில மையை சமாளித்துக்கொண்டு அவள் சொன்னாள்:

''அன்பே! அடுத்த ஆண்டு கிருஸ்துமஸ் பரிசாக இதை வைத்துக் கொள்கிறேன்- அதற்குள் என் கூந்தல் நீங்கள் மகிழும் வண்ணம் வளர்ந்து விடும். கவலையை விட்டு, நான் உங்களுக்கு வாங்கிவந்த பரி சைப் பாருங்கள்'' என்று கொஞ்சு மொழி பேசி அவன் கரங்களில் அவள் வாங்கி வந்த பரிசடங்கிய பெட்டியைத் திணித்தாள்.

இயந்திரம்போல, உணர்ச்சி யற்று, அப்பெட்டியை திறந்த அவன், மயங்கி நாற்காலியில் சாய்ந்து விட்டான். மாகிக்குத் திகிலடிகிவிட்டது.

''அன்பே! என்ன செய்கிறது உங்களுக்கு? உடம்பு சரியில் லையா? அல்லது தங்கச் சங்கிலி திகைப்பளித்து விட்டதா?'' என்றாள்.

''திகைப்பில்லை கண்ணே! எனக்கு அழ வேண்டும்போ லிருக்கிறது!'' என்றான்.

''ஏனாம்?'' என்றாள் மாகி.

''எனக்குத் திருநாள்போனஸ் முப்பது டாலர்கள் தான் கொடுத்தார்கள். நாளை விழாச் செலவுக்கு, விருந்து இவை களுக்கே பணம் போதாதே என்று என் பழைய கடிகா ரத்தை விற்றுவிட்டுத்தான் உனக்கு அந்த கூந்தல் ஊசிகள் வாங்கி வந்தேன்!''—அவனால் மேலும் பேச முடியவில்லை.

மாகி திகைத்தாள். ஆனால் கலகலவென சிரித்தாள். அவள் கணவன் கடிகாரத்தை விலை கூறிவிட்டான். அவளோ அதற் குத் தங்கச் சங்கிலி பரிசளிக் கிறாள்!

மாகி கணவனை இறுகத் தழுவி முத்தமிட்டாள். மரக் கட்டைபோல இருந்தான் அவன்.

மாகி அவன் காதிலே சொன் னாள்:

''நம் காதலுக்கும், அன்புக் கும் இதைவிட வேறு என்ன அத்தாட்சி வேண்டும்! ஒரு வர்க்கொருவர் உயிரையும் தியாகம் செய்வோமென்பதில் அட்டி என்ன அன்பே!''

மாகியின் கணவனுக்கும் இந்த வார்த்தைகள் இன்பத்தை ஊட்டின. அவளைத் தழுவி அவன் முத்தமிட்டான். இருவ ருமே இப்பொழுது சிரித்தனர்!

OOO

# நூல் மதிப்புரை

அச்சியந்திரம் ஏற்பட்ட பின்னர் ஆண்டு தோறும் ஆயிரக் கணக்கான நூல்கள் எல்லா மொழிகளிலும் வெளி வந்த வண்ணமாக இருக்கின்றன. அறிவு வளர்ச்சியில் ஆர்வமுள்ளவர்கள் புதிய வெளியீடுகளைப் பற்றி அறியவும், அவற்றுள் சிறப்பானவற்றைப் படிக்கவும் விரும்புவது இயல்பு. இந்த விருப்பங்களை நிறைவேற்றுவதற்கு உதவும் வாய்ப்புகள் மேலை நாடுகளில் மிகுதியாக உள்ளன. சிறந்த நூல்களை மலிவான விலைக்கு, தன் உறுப்பினருக்குத் தருவதற்காக "புக்-கிளப்ஸ்" என்ற கழகங்கள் அமெரிக்காவில் இருக்கின்றன. இவை திங்கள்தோறும் வெளியிடும் நான்கு நூல்களில்ஏதாவதொன்றை வாங்கிக் கொள்ள இசைபவர்கள் மட்டுமே இக் கழகங்களில் உறுப்பினராகச் சேரலாம். மேலும் அமெரிக்காவில் "பாக்கெட் — புத்தகங்களும்" இங்கிலாந்தில் "பெங்குவின்", "பெலிகன்" என்ற வெளியீடுகளும் உள்ளன. இவற்றோடு ஒப்பிடக் கூடிய வெளியீடுகள் தமிழ் மொழியில் வருவதில்லை யென்பது யாவரும் அறிந்த ஒன்று. தமிழில் வெளிவரும் புதிய நூல்கள் எல்லாவற்றையும் உடனுக்குடன் சேகரிக்கும் பெரு நூல் நிலையங்களும் தமிழகத்தில் இல்லை. சிறந்த நூல்களின் சுருக்கத்தை, திங்கள் இதழ்

'சோமலெ'

களில் வெளியிடும் சிறப்பும் தமிழ் நூல்களுக்கு இன்னும் ஏற்படவில்லை. படித்த நூல்களை வாங்கிக் கொண்டு, பண்ட மாற்ருகப் புதிய நூல்களைத் தரும் "புக்-எக்ஸ்சேஞ்ஜஸ்" போன்ற நிலையங்களும் தமிழ் நாட்டில் இல்லை. புதிய நூல்களை வாங்குபவர்களுக்காகவே ஏற்பட்ட "சாட்டர்டே ரிவ்யூ ஆப் லிட்டரேசர்" அல்லது மதிப்புரைகளின் தொகுப்பு இதழாக விளங்கும் "புக் ரிவியூ டைஜஸ்ட்" போன்றவையும் தமிழில் இல்லை. கலிபோர்னியா பல்கலைக் கழக அச்சகம் அல்லது ஹாமிஷ் ஹாமில்டன் போன்று சிறந்த நூல்களை மட்டும் வெளியிடும் பதிப்பகங்களும் தமிழ் நாட்டில் இல்லை. எனவே, "தாங்கள் வெளியிடும் ஒவ்வொரு நூலிலும் எனக்கு ஒன்று அனுப்புக" என்று முன்னரே எந்தப் பதிப்பகத்திற்கும் எழுதுவதற்கில்லை. மதிப்புரைகளின் வாயிலாகவே புதிய நூல்களின் தகுதி, தகுதியின்மை பற்றித் தமிழ் மக்கள் அறிய வேண்டிய நிலையில் இருந்து வருகின்றனர்.

## பிறநாடுகளில் மதிப்புரை எழுதுதல்

ரஷ்யாவில் "ஈவினிங் மாஸ்கோ", "லிடரெரி கெஜட்" என்ற இரு இதழ்கள் உள்ளன. இவ்விரண்டும் ஒரே நிர்வாகத்தில் இருப்பவை. அப்டன் சிங்ளெயிர் என்ற அமெரிக்கப் பேரறிஞர் எழுதிய நாவல் ஒன்றைப் பற்றி இரு இதழ்களும், ஒன்றுக்கொன்று சில வாரங்கள் முன்பின்ஞக மதிப்புரை எழுதின. முதல் மதிப்புரை பாராட்டாக அமைந்தது. பின்னர் வெளி வந்தது கண்டனமாக இருந்தது. இதற்குக் காரணம் இரண்டு மதிப்புரைகளும் வெளியான காலத்திற்கிடையே ரஷ்யாவுக்கு எதிராகக் கையெழுத்திடப் பட்ட அட்லாண்டிக் உடன்பாட்டை இந்நூலாசிரியர் ஆதரித்ததே யாகும்.

ஆஸ்திரேலிய இதழ்கள் தங்கள் நாட்டில் வெளியிடப்படும் நூல்களைப் பற்றிப் போதிய அளவு அக்கரை காட்டுவதில்லை யென்றும், வெளி நாடுகளில் வெளியிடப்படும் நூல்களையே மிகுதியாகப் பாராட்டுகின்றன ரென்றும், அந்த நாட்டில் குறை கூறுகின்றனர். மிகச் சிறந்த ஆஸ்திரேலிய எழுத்தாளரைக்கூடப் பாராட்ட அந்த நாட்டு இதழ்கள் முன் வராததால்தான் ஆஸ்திரேலியர் ஒருவருக்குக்கூட இன்னும் நோபல் பரிசு கிடைக்கவில்லை யென்றும் கேள்விப்பட்டேன். விஞ்ஞானி சர் சி. வி. இராமன், எண்ணியல் வல்லுநர் காலஞ்சென்ற இராமானுசம்— ஆகியோரின் ஆராய்ச்சிக் கட்டுரைகள் ஆங்கில நாட்டு இதழ்களிலேயே முதல் இடம் பெற்றதையும் இங்கே நாம் மனத்திற் கொள்ளலாம்.

பிரிட்டிஷ் இதழ்கள் தங்கள் நாட்டின் இளம் எழுத்தாளரை ஆதரிப்பதில் - ஊக்குவிப்பதில்- விளம்பரப்படுத்துவதில் — கண்ணும் கருத்துமாக இருக்கின்றன. தமிழ் எழுத்தாளருள் முறைப்படி கல்வி பயின்று கல்லூரிகள் வாயிலாகப் பட்டம் பெற்றவர் மிக அருமை யெனலாம்; ஆகையால் கல்லூரி இதழில் எழுதிப் பழகும் அடிப்படை வாய்ப்பு நம்மில் பலருக்கு இல்லை. இக்காரணங்

களால் தகுதியுள்ள எழுத்தாளரை ஆதரிக்கும் கடமையைத் தமிழ் இதழ்கள் செவ்வையாகச் செய்தல் வேண்டும்.

அமெரிக்க நாள் இதழ்களுள் ஒன்ருன "நியூயார்க் டைம்ஸ்" என்னும் இதழில் வெளிவரும் மதிப்புரைகள் எம் மனதை விட்டு அகலா. இவ்விதழில் ஞாயிறு மலருடன் "மதிப்புரை மலர்" ஒன்றும் வழங்கப்படுகிறது. இது நூல் வடிவில் அமைந்தது. 40 பக்கங்கள் கொண்டது. நூல் மதிப்புரைகளும், நூல் வெளியீட்டுத் துறைக்குத் தொடர்பாகவுள்ள பல செய்திகளும், புதிய நூல்களைப் பற்றிய விளம்பரங்களும் இம்மலரில் மலிந்து கிடக்கின்றன. நூலாசிரியர் சிலரின் படங்களும், மதிப்புரை கூறப்பெற்றுள்ள நூல்கள் சிலவற்றில் காணப்படும் படங்களும், மேற்கோள்களும் இம்மலரில் உள்ளன. முடிவடைந்த வாரத்தில் வெளியான நூல்களின் பட்டியல்களும், விற்பனையான நூல்களைப் பற்றிய விவரங்களும், இவை போன்ற பிற அறிவிப்புகளும் உண்டு. மதிப்புரை எழுதுபவரின் கருத்து மட்டுமின்றி, "நியூயார்க் டைம்ஸ்" இதழைப் படிக்கும் நேயர்கள் தாம் படிக்கும் நூல்களைப் பற்றி எழுதும் கடிதங்களும் இம்மலரில் அச்சிடப்படுகின்றன. பல நூல்களைப் பற்றி அன்பர்கள் கேட்கும் வினக்களுக்கு விடை தரும் பகுதியும் உண்டு. சான்ருக, "கடல் கடந்த இந்தியர்களைப் பற்றிய நூல்கள் சிலவற்றை யான் படிக்க விரும்புகிறேன். நல்ல நூல்கள் எவை?" என்று ஒருவர் கேட்டால், அதற்கு விடை கூறும் வகையில், பொதுவான நூல்கள் சிலவற்றின் பெயர்களும், குறிப்பிட்ட நாடுகளில் உள்ள இந்தியர்களைப் பற்றி வெளி வந்த நூல்களின் பெயர்களும் கொடுக்கப்படும்.

## மதிப்புரை எழுதுபவர்

ஒரு நூலில் கண்ட பொருளைப்பற்றி ஆராய்ந்தறிந்த அறிஞரே எந்த நூலுக்கும் மதிப்புரை எழுதுவது என்ற கட்டுப்பாடு "நியூயார்க் டைம்ஸ்", "நியூ ஸ்டேஸ்மென் அண்ட் நேஷன்", "டைம்ஸ் லிட்டரரி சப்ளிமெண்ட்" ஆகிய இதழ்களில் உண்டு. மதிப்புரை எழுதுபவர் யார் என்ற குறிப்பு ஒவ்வொரு மதிப்புரையிலும் கொடுக்கப்படவேண்டும். உரிய நூலுக்கு மதிப்புரை எழுதுவதற்கு அவருக்கு என்ன தகுதி என்பதையும் சில வரிகளில் தெரிவிக்கலாம். ஒருவரே எவ்வகையான நூலுக்கும் மதிப்புரை எழுதும் வழக்கம் சில இடங்களில் இருந்து வருவது

"ஆனந்தத்தைப் போல் நான் விரும்பும் பொருள் உலகத்தில் வேறில்லை. அதனுல்தான் ஆனந்தமாகப் பாடிக் கொண்டே வேலை செய்பவர்களைக் கண்டால் எனக்கு ரொம்பவும் பிடிக்கிறது."

"அப்படியானுல் கொசுக்களை உங்களுக்கு ரொம்பவும் பிடிக்கவேண்டுமே!"

வன்மையாகக் கண்டிக்கத் தக்கது.

நூலாசிரியரின் தோழர்கள் தம் நண்பரின் நூலுக்கு மதிப்புரை எழுதாமல் இருப்பது நலம். ஓர் இதழில் அந்த இதழின் ஆசிரியரே இயற்றிய நூல்களுக்கு மதிப்புரை எழுதுவதும் சிறந்த முறையன்று. இயன்ற அளவு மதிப்புரை எழுதுபவர் எழுத்தாளராகவே இருக்க வேண்டும். வைரத்தை வைரத்தால்தானே அறுக்க வேண்டும்! நாடக நூல் ஒன்றைப்பற்றி மதிப்புரை எழுதுபவர் நாடக நூலாசிரியராக இல்லாவிட்டாலும் நாடக நூல் பலவற்றைப் படித்தவராகவேனும் இருக்கவேண்டும்.

தமிழ் இதழ்கள் தவிர, ''இந்து'', ''மாடர்ன் ரெவியூ'', ''மைசிண்டியா'' போன்ற ஆங்கில இதழ்களிலும் தமிழ் நூல்களுக்கு மதிப்புரை எழுதப்பட்டு வருகிறது.

## வானொலியில் மதிப்புரை

நான்கு நூல்களைக் கால்மணி நேரத்தில் மதிப்பிடும் முறை வானொலி நிலையங்களில் இருந்து வருகிறது. நூல்களின் தகுதிக்கேற்ப நான்கு நூல்களையோ அல்லது பத்து நூல்களையோ இதே கால அளவில் மதிப்பிடலாம். மதிப்புரைகள் வானொலி இதழில் அச்சிடப்பட்டால் நலமாக இருக்கும்.

## ஆசிரியர்கள்

அமெரிக்காவில் வழங்கும் முறையொன்றை இப்போது குறிப்பிடுவோம். இதைஏற்றுக் கொண்டால் மதிப்புரை கூறுபவர்களின் சொல்லம்புகளிலிருந்து தப்புவது எளிதாகும். ஒரு நூலை எழுதி முடித்ததும் அதைச் சில படிகள் எடுத்துக் கருத்துரைகளும் திருத்தங்களும் கூறுமாறு அமெரிக்க நூலாசிரியர்கள் தங்கள் எழுத்தாள நண்பர்களுக்கு அனுப்பி வருகின்றனர். அவர்களிடமிருந்து அவை திரும்பி வந்த பிறகு ஓரளவு திருத்தங்கள் செய்துதான் கையெழுத்துப் படியை அவர்கள் அச்சுக்கு அனுப்புகின்றனர். ஜான் கந்தர், லூயி பிஷர், ஹார்ட்லி கிராட்டன், வால்டர் லிப்மென் ஆகியோர் இவ்வாறே செய்கின்றனர். தமிழ் எழுத்தாளரும் இந்த முறையைப் பின்பற்ற வேண்டுமானல், ''நான் எழுதுவதை வேறு ஒருவர் திருத்துவதா'' என்ற செருக்கு மனப்பான்மையை அடியோடு விட்டு விடவேண்டும்.

## மதிப்புரையாளரின் கடமை

மதிப்புரைஎழுதுபவர் நடுநிலையிலிருந்து எழுத வேண்டும். ஒருதலைச் சார்பாக எழுதக் கூடாது. தாம் மதிப்புரை எழுதும் நூலைத் தாமே படிக்க வேண்டும்; நூல் முழுவதையும் படிக்க வேண்டும்; ஊன்றிப் படிக்க வேண்டும்; படிக்கும் போதே குறிப்புகள் எடுத்துக் கொள்ள வேண்டும்.

முன்னுரையை மட்டும் படித்துவிட்டு மதிப்புரை எழுதுவோர் பலர். இதிலுள்ள சுவை என்னவெனில் முன்னுரை எழுதுபவர் அமைச்சராகவோ, அரசியல் அறிஞராகவோ இருப்பதும், தமக்குள்ள பல அலுவல்களால் அவரும் நூலைப் படிக்காமலேயே முன்னுரை எழுதிக் கொடுத்து வருவதாகும். குறிப்பிட்ட அமைச்சர் அல்லது அரசியல் அறிஞருக்கு ஒரு நூலுக்கு முன்னுரை

எழுத என்ன தகுதி இருக்கிறது என்பதை இங்கு ஆராய்வதை விட ஆராயாமல் இருப்பதே நலம்.

இதை எழுதும்போது சில ஆண்டுகளுக்கு முன் நிகழ்ந்த சுவையான நிகழ்ச்சி ஒன்று நம் நினைவிற்கு வருகிறது. நாதசுரப் புலவர் டி. என். இராசரத்தினம் நாதசுரம் வாசிக்கப் போவதாக வானொலி நிகழ்ச்சி நிரலில் குறிக்கப் பெற்றிருந்தது. உரிய நாளில் அவர் வர இயலாமையால் நிகழ்ச்சி நடைபெறவில்லை. எனினும் அந்த வாரத்து நிகழ்ச்சிகளைப் பற்றி ஓர் இதழில் வெளி வந்த கட்டுரையில் திரு. இராசரத்தினத்தின் அன்றைய இசை நிகழ்ச்சியைப் பற்றிப் பல கருத்துக்கள் தெரிவிக்கப்பெற்றிருந்தன. கட்டுரையை எழுதிய மைலாப்பூர் "கலாரசிகர்" ஒருவர் நிகழ்ச்சிக்குச் சில நாட்களுக்கு முன்னரே தம் கட்டுரையை அனுப்பி விட்டாராம்.

## காலம் தாழ்த்தி மதிப்புரை எழுதுதல்

ஒரு நூல் வெளி வருவதற்குச் சில வாரங்கள் முன்னரே நூலைப் பல இதழ்களுக்கு அனுப்பிவிடும் வழக்கம் பிற நாடுகளில் இருந்து வருகிறது. இதனால் பொதுமக்களுக்கு ஒரு நூல் விற்பனைக்குக் கிடைக்கும் போதே மதிப்புரைகளும் வெளி வந்து விடுகின்றன.

பொதுமக்களுக்கு நூல்களை விற்கத் தொடங்கிய பின்னரே அவற்றை இதழ்களுக்கு மதிப்புரைக்கு அனுப்பும் வழக்கம் தமிழ் நாட்டில் இருந்து வருகிறது. "ஆறின கஞ்சி பழங்கஞ்சி"—ஒரு நூலை அனுப்பி

## சிக்கனச் சிற்பி!

ஒரு ஏழைக் குடியானவன் எப்படியோ பணக்காரனுகி விட்டான்.

ஒரு நாள் இரவு அவன் எவ்வாறு பணக்காரன் ஆனுன் என்பதைத் தெரிந்து கொள்வதற்காக பத்திரிகை நிருபர் ஒருவர் அவன் வீட்டிற்குச் சென்ருர்.

அந்த மாஜி ஏழைக் குடியானவன் பேச ஆரம்பித்தான் :

நான் பணக்காரனுனது பெரிய கதை. அதை விரிவாகச் சொல்ல வேண்டுமானுல் இரண்டு மணி நேரம் பிடிக்கும். அது வரைக்கும் ஏன் இந்த விளக்கு எரிய வேண்டும்; அணைத்து விடட்டுமா?-என்று சொல்லியவாறே விளக்கை அணைத்தான் அவன்!

உடனே நிருபர் எழுந்தார். "போதும் போதும்; நீங்கள் எப்படிப் பணக்காரர் ஆனீர்கள் என்பது இப்போது நன்ருகத் தெரிகிறது! நான் வருகிறேன்!" என்று கூறிப் போய் விட்டார்!

ஆறு மாதங்கள் முடிந்த பின்னரும் சில இதழ்கள் மதிப்புரை எழுதுவதிலிருந்து, அந்த அலுவலகங்களிலுள்ளவர்கள் நூல்களை எவ்வளவு பேணி வைத்திருக்கின்றனர் என்பது புலனுகும்.

## தவறான மதிப்புரைகள்

ஒரு தடவை ஓர் இதழில் சிறந்த நூல் ஒன்றைக் குறை கூறியோ, சுவையற்ற நூல் ஒன்றைப் பாராட்டியோ வெளியானல், பின்னர் வெளியாகும் மதிப்புரைகள் நடுநிலையில் இருப்பினும், பொதுமக்கள் அவற்றைப் பொருட்படுத்துவதில்லை. மதிப்புரைகளைப் படித்துப் பல நூல்களை வாங்கிப் பணத்தை இழந்து ஏமாற்றமடைந்த பல்லாயிரவர் தமிழ் நாடெங்கும் உள்ளனர்.

மதிப்புரையைப் படிக்கும் போது பொதுமக்கள் கீழ்க் கண்ட கேள்விகளைக் கேட்டுக் கொள்ளுகின்றனர். இது பொருள் கொடுத்து வாங்க வேண்டும் நூலா? இதே பொருளைப் பற்றி வெளியாகியுள்ள ஏனைய நூல்களைவிட இது சிறந்ததா? ஆதாரமான செய்திகள் உள்ள நூலா? நூல் நிலையத்தில் போய் இதைப் படித்து விட்டால் போதியதாகாதா? இந்த வினக்களுக்கு மதிப்புரைகளில் விடை இருக்க வேண்டும். நூலிலுள்ள படங்கள், நூலின் கட்டுக்கோப்பு, அளவு, பயன் படுத்தப்பட்ட தாளின் தரம்—ஆகியவை பற்றிய விவரங்களும் கொடுக்கலாம்.

மதிப்புரையில் நூலாசிரியரைப் பற்றியும், குறிப்பிட்ட நூலை எழுதுவதற்கு அவருக்குள்ள உரிமை, புலமை, அனுபலம் பற்றியும் சொல்ல வேண்டும். நூல் என்ன பொருளைப் பற்றியது, ஆசிரியர் எந்த முறையில் ஆராய்ந்துள்ளார், எந்த நோக்கத்தோடு எழுதியுள்ளார், நூல் அச்சேறிய காலம் வரையுள்ள நிகழ்ச்சிகள் கொடுக்கப் பட்டிருக்கின்றனவா—என்ற விவரங்களும் ஆசிரியரின் நடையைப் பற்றிய குறிப்பும் மதிப்புரையில் இருக்க வேண்டும்.

மதிப்புரை என்பது பாராட்டுரை என்ற தவருன கருத்து சிலரிடம் நிலவி வருகிறது. ஒரு நூலிலுள்ள குறைபாடுகளை, மதிப்புரையில் தங்கு தடையின்றி சுட்டிக் காட்ட வேண்டும். மதிப்புரைக்கு மறுப்புக் கூறும்வாய்ப்பு நூலாசிரியருக்கு இல்லை என்பதை உணர்ந்து மதிப்புரை எழுதுபவர்கள் பொறுப்பாகவும் ஆதரமாகவும் எழுத வேண்டும். ஆத்திரமாக எழுதக்கூடாது. பிறர் மனம் புண்படும் வகையில் சொற்கள் அமையலாகாது. அடுத்த பதிப்பில் இன்ன இன்ன திருத்தங்கள் இருந்தால் நூல் மேலும் சிறப்பாக இருக்கும் என்பது போன்ற பயன்படும் செய்திகளைத் தெரிவிக்க வேண்டும். குற்றம் கண்டு பிடிப்பதே குறிக்கோளாகக் கொண்டு, அவற்றை ஒரு மூலையில் தேடிப் பிடிக்கூடாது. குற்றங்களை மிகைப் படுத்தவும் கூடாது. அச்சுப் பிழைகளையும் தவருன செய்திகளையும் குறிப்பிடலாம். புதிய எழுத்தாளர்களின் உற்சாகத்திற்கு முற்றுப்புள்ளி வைத்து விடக்கூடாது. பிறரைக் குறை கூறுமுன் தங்களால் அதைவிடச்சிறப்பாக எழுத இயலுமா என்பதைநினைத்துப்பார்ப்பதும் நன்று. இத்தனைச் சிறப்பும்,

விவரங்களும் உள்ள ஒரு மதிப்புரை 250 சொற்களில் அடங்குமானால் அதுவே சிறந்த மதிப்புரையாகும்.

மதிப்புரை கூறுவதை, இதழ் ஆசிரியர்களுக்கும் அவர்களுடன் தொடர்பு கொண்டவர்களுக்கும் உரிமையாக ஆக்கி விடக் கூடாது. ஒரு நூலை எடுத்துக்கொண்டு தமிழன்பர்கள் தாங்கள் உறுப்பினராக இருக்கும் கழகத்தில் காய்தல் உவத்தலின்றி, குறை நிறைகளை விவாதிக்கலாம். கல்கத்தா தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவர் அரு. சொக்கலிங்கம் அவர்கள் குறிப்பிடுவதுபோல "இப்படிச் செய்வதால் நமக்கும் ஒரு பயிற்சி, மொழிக்கு ஒரு பயன், புத்தக ஆசிரியர் தகுதிக்கேற்ப வரவேற்பு, வாசகர்களுக்கு ஒரு நல்ல அறிவிப்பு" ஏற்படும்.

மணிக்கொடி கு. சீனிவாசன் அவர்கள் விமர்சனத்தைப்பற்றி ஒரு சொற்பொழிவில் குறிப்பிட்ட சில கருத்துக்களோடு இக்கட்டுரையை முடிப்போம்:

தற்காலத்தில் வளரும் தமிழிலக்கியத்தில் இந்த விமர்சனம் மிக மிக அவசியமானதொரு அம்சம். வயலில் பயிரிடும் காலத்தில் களை பிடுங்குகிறோமல்லவா? அப்படியே இலக்கியப் பயிரிலே களை பிடுங்குவதே விமர்சனம். களையை நீக்குவதால் பயிருக்கு வளர்ச்சி கூடுவதேபோல், நேரான விமர்சனம் செய்வதின் மூலம் இலக்கியப் பயிரை வளர்க்க முடியும்.

ooo

## விடுதலை!

பிரபல சோதிடர் ஒருவர் வருங்காலத்தைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தார்.

"நீங்கள் தனியாளாக மாறப் போகிறீர்கள்; உங்களுக்குக்கொஞ்சமும் பிடிக்காத மனைவி சீக்கிரமே சாகப் போகிறாள்!"—அவர் சொல்லிக் கொண்டே போனார்.

ஒரே யொரு கேள்வியைத்தான் கணவன் கேட்டார்:

"அப்படியானால் எனக்கு விடுதலை கிடைத்து விடுமா?"

## யாருக்குப் பாதுகாப்பு?

யுத்தம் நடந்து கொண்டிருந்தது. சிப்பாய் ஒருவன் கர்னலை எப்போதும் நிழல் போலத் தொடர்ந்து கொண்டே இருந்தான்!

போர் முடிந்ததும் கர்னல் சிப்பாயை அழைத்தார்:

"நீ மிகவும் துணிவு மிக்கவன், நீ எதற்காக உன் உயிரையும் மதிக்காமல் எனக்குப் பாதுகாப்பளித்தாய்?"

சிப்பாய் சிரித்துக்கொண்டே பதில் கூறினான்:

"வேறொன்றுமில்லை, கர்னல் அவர்களே! என் மனைவி சொல்லி அனுப்பினாள், எப்போதும் உன் கர்னலைச் சுற்றிக்கொண்டே இரு. அவர்களுக்குக் காயங்களே படுவதில்லை—என்று! அதனால்தான்!"

# கடமை முடிந்தது

மகல்வன்

நீதிபதி மாதவன் குற்றவாளிக் கூண்டிலே நிற்கும் சந்திரனை ஒரு முறை ஏறிட்டுப் பார்த்தார். பார்த்தவர் பார்த்துக் கொண்டே இருந்தார். "யாரிவன்? இவனை எங்கோ பார்த்த மாதிரி இருக்கிறதே? எங்கே பார்த்தோம்?" என்று மனதைக் குழப்பிக் கொண்டிருந்தார். இந்த வழக்கு என்று நீதிமன்றம் ஏறியதோ அன்றிலிருந்து அவரும் குழம்பிக் கொண்டிருக்கிறார். தெளிவு பிறக்கவே இல்லை.

அவன்மீது சாட்டப்பட்டிருந்த குற்றமோ பயங்கரமானது. போதிய சாட்சியங்கள் இருந்தன. அவனே தன் வாக்கு மூலத்தில் குற்றத்தை ஒப்புக் கொண்டிருக்கிறானே! இதற்காக சட்டத்தை அலச வேண்டியதில்லை; வழக்கறிஞர் வாதம் புரியத் தேவையில்லை; சற்றும் யோசியாது தீர்ப்பைக் கூறி விடலாம் "தூக்குத் தண்டனை" என்று!

தனது காதலி புவனாவிடம் தகாத முறையில் நடந்து கொண்டதால் மூர்த்தி என்பவனைக் கொலை செய்து விட்டான் சந்திரன். சந்திரன், புவனா, மூர்த்தி ஆக மூவரும் மேடை நடிகர்கள். நாடகங்களில் சந்திரன் கதாநாயகன்; புவனா கதாநாயகி; மூர்த்தி வில்லன். வாழ்க்கையிலும் இவ்வாறே நடிக்க மூர்த்தி விரும்பவில்லை. அவனுக்குப் புவனாவின் காதலனாக மாற விருப்பம்! அதன் முடிவு? கொலை! சந்திரன் கைது!

வீட்டிலே உட்கார்ந்து கொண்டு நீதிபதி மாதவன் மீண்டும் ஒரு முறை சந்திரனை நினைத்தார். தான் விரும்பும் பெண்ணை மற்றொருவன் நாடுகிறான் என்பதற்காக சந்திரன் மூர்த்தியிடம் கைகலந்தான் என்பதை எண்ணும்போது, மாதவனின் உள்ளம் வேதனைப் பட்டது. அவரது மனசாட்சி அவரை சித்ரவதை செய்தது. கடந்துபோன காலத்தின் நிகழ்வுகள் திரைப் படமாக அவர் முன் விரிந்தன.

* * *

சட்டக் கல்லூரி மாணவர் சங்கத்தின் தலைவனாக, பி.எல். படித்துக் கொண்டிருந்த மாதவன் தேர்ந்தெடுக்கப்பட்டான். ஏழை மாணவர்களின் கல்வி நிதிக்காக, இலவச ஆட்டம் நடத்தித் தரும்படிக் கேட்பதற்கு 'கிராண்ட் சர்க்கஸ் கம்பெனி'க்கு மாதவன் சென்றான். அங்குதான் அவளைக் கண்டான்—அவள் தான் செங்கமலம்!

மாதவனின் வசீகரப் பேச்சிலே அவள் தன்னை மறந்தாள். அவளது பேரழகில் அவனும் தன்னை மறந்தான். 'இதற்குத் தான் காதல் என்று பெயர்' என்று விளக்கினான் மாதவன். அவளும் ஆமோதித்தாள்.

திரைப் படங்களிலே, காதலிக்காக உயிர்த் தியாகம் செய்யும் காதலர்களைப் பார்த்த செங்கமலமும், தன்னுடைய மாதவன் தனக்காக எதையும் செய்வான் என்று திடமாக நம்பினுள். பரந்து கிடக்கும் சென்னை மாநகரில் இந்தக் காதல் ஜோடியை யாரும் அக்கரையுடன் கவனிக்கவில்லை. எனவே தங்கு தடையின்றி அவர்கள் காதல் முன்னேறியது. கவின் மலையாளத்தை இவனும் கன்னித் தமிழை அவளும் ஆவலோடு கற்றனர். தேர்வு முடிந்ததும் திருமணம் என இருவரும் முடிவு கட்டியிருந்தனர். தேர்வு முடியும் நாளை ஆவலோடு எதிர்பார்த்தனர். அந்த நாளும் வந்தது!

அன்று தேர்வு எழுதி முடிந்ததும், சர்க்கஸ் கூடாரத்தை நோக்கிப் புறப்பட்டான்—அங்கு அவனுக்கு ஏமாற்றம் காத்திருந்தது. செங்கமலம் அங்கில்லை!

விசாரித்ததில், அன்று மத்தியான ஆட்டத்தின்போது அவள் மயக்கம் போட்டு விழுந்து விட்டதாகவும், பின் டாக்டர் வந்து பார்த்து விட்டு, அவள் கருவுற்று இருப்பதாகக் கூறியதாகவும், அது கேட்ட சர்க்கஸ் கம்பெனி முதலாளி அவளை வெளியே துரத்தி விட்டதாகவும் தெரிய வந்தது. அவளை எங்கே தேடுவது என்று வருந்திக் கொண்டே சோர்ந்த முகத்துடன் வீடு திரும்பிய அவனை அவன் தந்தை மலர்ந்த முகத்துடன் வரவேற்றார். அவனைப் பெரிய 'அதிர்ஷ்டசாலி' என்று புகழ்ந்தார். அவனுடைய தாய், "மாதவா, உனக்கு பெரிய இடத்திலிருந்து பெண் கொடுப்பதாகச் சொல்லுகிறார்கள். கல்யாணச்செலவை அவர்களே ஏற்றுக் கொள்கிறார்களாம். தவிர, இந்தப் பரீட்சையில் நீ பாஸ் செய்ததும் உனக்கு மாஜிஸ்ட்ரேட் வேலை வாங்கிக் கொடுப்பதாகவும் சொல்லுகிறார்கள்!" என்று சொன்னாள். மாதவன் பதிலேதும் பேசவில்லை. குழம்பிய மனதுடன் கடற்கரைக்குச் சென்றான். வழக்கமாக செங்கமலத்தை சந்திக்கும் இடத்திற்குப் போனான். அங்கே, சோகத்தோடு நங்கை செங்கமலம் — இவனுக்காகக் காத்திருந்தாள்.

கயல் விழிகள் களிப்பிற்குப் பதில் கண்ணீரைக் கொட்டின. அவனது மார்பில் தனது முகத்தைப் புதைத்துக் கொண்டு, விம்மல்களுக் கிடையே நடந்தவற்றைக் கூறினாள். பல விதத்திலும் மாதவன் அவளுக்கு ஆறுதல் சொல்லி, மறுநாளே

---

## அநுபவ உண்மை!

"நண்பரே; என்னால் கார் வைத்துக் கொள்ள முடியவில்லை!"

"என்ன; உம்மிடம் கார் இருப்பதை சென்றவாரம் பார்த்தேனே?"

"இது தெரியாதா உங்களுக்கு; கார் வாங்கின பிறகுதான் அந்த உண்மையைக் கண்டு பிடித்தேன்!"

தங்கள் திருமணத்திற்கான ஏற்பாட்டைச் செய்வதாக உறுதி கூறினுன். அவளும், தான் இந்த மாதவனைப் பெற மா தவம் செய்திருக்க வேண்டும் என்றெண்ணி அக மகிழ்ந்தாள். ஒரு ஓட்டலில் ஒரு அறையை வாடகைக்கு எடுத்து அவளை அங்கிருக்கச் செய்து விட்டு வீட்டிற்குப் போனுன். அவனுடைய மனம் புயலில் சிக்கிய கப்பலைப்போல் தத்தளித்தது. மறுநாள் தன் தந்தையிடம் செங்கமலம் பற்றிக் கூறினுல் அவர் எப்படிச் சீறுவார் என்பதைச் சிந்தித்தான்.

நிச்சயமாக அவர் அவர்களது திருமணத்திற்கு இசைய மாட்டார். ''அவள் வேற்று சாதியைச் சேர்ந்தவள். மேலும் அவள் ஒரு சர்க்கஸ்காரி. அதிலும் ஒரு கர்ப்பிணியைக் கல்யாணம் செய்து கொள்ளுகிறேன் என்று சொல்ல உனக்கு வெட்கமாக யில்லை? உனக்கு புத்தி ஏன் இப்படிப் போய் விட்டது? தம்பி, கொஞ்சம் யோசனை செய்து பார். நீ அவளைக் கல்யாணம் செய்து கொண்டால் உன்னை நாலு பேர் மதிப்பார்களா? இப்போ வந்திருக்கிறஇடம் நல்லஇடம். பெண்ணும் கண்ணுக் கழகாக கிளிபோல் இருக்கிருள். நல்ல செல்வாக்குள்ள பெரிய இடம். அவர்கள் மனது வைத்தால் மாஜிஸ்ட்ரேட் என்ன, ஜட்ஜாகவே கொண்டு வந்து விடுவார்கள்!''—இப்படியெல்லாம் நாளைக்கு அப்பா சொன்னுல், தான் அதற்கு என்ன பதில் சொல்லுவது? 'இந்தப் பட்டணத்தில் வக்கீல் தொழிலில் சம்பாதிப்பது என்பது ரொம்பவும் கஷ்டம். செங்கமலத்திற்காக அப்பாவை விரோதித்துக் கொண்டால் நாளைக்குப்பிச்சை எடுக்க வேண்டியதுதான். அவர் சொல்படி நடந்தால், வறுமையின் சாயலைக்கூட தொட வேண்டியதில்லை. உயர்ந்த பதவியில், செல்வச் சீமானுக உப்பரிகையிலே உலவலாம். கூப்பிட்ட குரலுக்கு ஏன்என்று கேட்கஅடியாட்கள் அநேகர். அலுங்காமல், குலுங்காமல் பெரிய கார்களில் உல்லாச பவனி வரலாம்'–இப்படி வரப்போகும் சுக வாழ்வைக் கற்பனையில் கண்டு கொண்டிருந்த அவனுக்கு 'செங்கமலத்தின் கதி என்ன ஆவது?' என்ற நினைவே வரவில்லை. எனவே அவனது சிந்தனையின் முடிவு, அவனுக்கு வரப்போகும் இன்ப வாழ்வை அனுசரித்துத்தானே இருக்கும்! அதனுல்தானே 'அவன்' என்பது போய் 'அவர்' என்ருகி, ஜட்ஜ் மாதவனுக இன்று வீற்றிருக்கிருர்!

அதற்குப் பிறகு அவர் செங்கமலத்தை சந்திக்கவே இல்லை. அவளைப் பற்றிய நினைவும் இன்று வரை அவருக்கு எழவே இல்லை. அவளை மீண்டும் சந்திப்போம் என்று எண்ணவே இல்லை. பழைய நினைவுகளிலிருந்து விடுபட்டு மெதுவாகக் கண்ணைத் திறந்தார். செங்கமலம் அவர் முன் நின்று கொண்டிருந்தாள்!

அன்று கடைசியாக அவளை எந்த முகத்துடன் ஓட்டலில் விட்டு வந்தாரோ, அதே முகத்துடன்தான் காட்சியளித்தாள். முதுமையின் எல்லையிலே, சோகத்தின் பிறப்பிடமாய், வேதனையின் இருப்பிடமாய் அவளைக் கண்டதும் மாதவன் அலறினுர். ''செங்கமலம், நான் ஒரு பெரிய பாவி! மன்னிக்க முடியாத மாபெரும்

பாதகத்தைச்செய்துவிட்டேன். உண்மையிலே இன்றுதான் என் கண் திறந்தது. அதுவும் இப்பொழுது கோர்ட்டில் நடக்கும் ஒரு வழக்கைப் பார்த்த பின்! தான் விரும்பும் ஒரு பெண்ணைக் காக்க ஒருவன் முன் வந்து, அதன் விளைவு கொலையில் முடிந்த அந்த வழக்கைப் பார்த்த பின்புதான், உனக்கு நான் இழைத்த தீங்கின் முழு விளைவும் எனக்குத் தெளிவாயிற்று. எப்பாடு பட்டாவது நான் உன்னை மணந்து கொண்டிருக்க வேண்டும்.''

''மிக்க மகிழ்ச்சி இன்று வந்து உங்கள் செய்கையின் விளைவு பற்றி சிந்தித்தது கண்டு மகிழ்கிறேன். அதிலும் உங்களுடைய சிந்தனையைத் தாண்டி விட்டது, அந்த வழக்கின் குற்றவாளிதான் என்பதை நினைக்கும் பொழுது இரட்டிப்பு மகிழ்ச்சி யடைகிறேன். ஏன் தெரியுமா? அவன், தன் தாய்க்குத் தீங்கிழைத்த தந்தைக்கு



உண்மையை எடுத்துக் காட்டி, தன் கடமையைச் செய்து விட்டான் என்பதினல்! ஏன் திகைக்கிறீர்கள்? அவன் உங்களுடைய மகன்தான்!''-மாதவனுடைய அங்கமெல்லாம் பதறியது. "என்ன? சந்திரன் உன் மகனு? ஐயகோ, நான் என் மகனை இந் நிலையிலா காண வேண்டும்?'' என்று கதறினர். ஆனல் அந்தக் கதறல் காலங் கடந்தது. தன் காதல் வாழ்வில் அவர் கட்டுப்பாட்டை மீறினர் — கரு உருவாயிற்று! கடமையையாவது செய்திருக்க வேண்டும் — ஆனல் தன்னுடைய தனிப்பட்ட கண்யத்தைக் காக்க எண்ணி கடமையைக் காற்றிலே பறக்கவிட்டார். இன்று கதறுகிருர்— பலன்?

செங்கமலம் பொறுமையாக தான் வந்த காரணத்தைச் சொன்னுள்.

"அன்றே உங்கள் கல்யாண சமயத்தில் நான் உங்கள் வீட்டிற்கு வந்திருந்தால் உங்களுடைய வாழ்வு எப்படிப் போயிருக்கும்? ஆனல் நான் அன்று வரவில்லை. காதல் போதையில் மனமயங்கி என்னுடைய கண்யத்தைப் பறி கொடுத்து விட்டேன். எனவே மனைவி என்ற முறையில் என்னுடைய கடமையையாவது செய்வோம் என்ற முடிவில், உங்களுடைய நல்வாழ்வில் நான் இது வரை குறுக்கிட வில்லை. நீங்கள் என்னைத் தனியே விட்டுப் போன பின், அந்த ஓட்டலில் பக்கத்து அறையில் இருந்த ஒரு அம்மா, என்மீது இரக்கங் கொண்டு, என்னைத் தன்னுடன் திருச்சிக்கு அழைத்துப் போனர்கள். அங்கே இருக்க இடம் தந்து, ஒரு தையல் மெஷினையும் வாங்கித் தந்து என்னை இதுவரை பராமரித்தார்கள். அன்று எப்படிக் கடமை என்ற முடிவில் வரவில்லையோ, அதே போல் இன்றும் என் கடமையை நிறைவேற்றவே இங்கு வந்திருக்கிறேன்.''

"எதற்காக? சொல் செங்கமலம். அவனை நிரபராதி என்று தீர்ப்பு எழுதச் சொல்கிருயா?''

"ஏன் ஆயாசப் படுகிறீர்கள்? எனக்குத் தெரியும் — சட்டம், சூழ்நிலை, சாட்சியங்கள் எல்லாமே, ஏன் நீதி கூட அவனுக்கு எதிராக இருக்கிறது என்பது எனக்குத் தெரியும். அவன் தூக்கிலே தொங்கினல் நானும் புவனவும் இவ்வுலகில் இருக்க மாட்டோம் என்று பயமுறுத்த நான் இங்கு வரவில்லை; அன்று நியாயத்தைக் கொன்று என் வாழ்வை அழித்தீர்கள்; அதற்குப் பிராயச் சித்தமாக இன்றும் நீதியைக் கொன்று என் மகனின் வாழ்வைத் திருப்பிக் கொடுங்கள் என்று கேட்க நான் இங்கு வரவில்லை; உங்கள் வாழ்வு பொலிவு பெறுவதற்கு மட்டும் அநியாயம் செய்தீர்களே, ஏன் இன்று என் வாழ்வு-உங்கள் காதலியின் வாழ்வு வளம் பெறுவதற்காக நீதியை மீறக் கூடாதா என்று வாதம் புரியவும் நான் இங்கு வரவில்லை; உங்களுக்காக நான் பெற்ற உங்கள் செல்வத்தை இன்று வரை அரும் பாடுபட்டு வளர்த்து ஆளாக்கி விட்டேன். எனவே இனிமேல் உங்கள் மகனை நீங்களே வளர்த்துக் கொள்ளுங்கள் என்று உங்களிடம் ஒப்படைத்து விட்டுப் போகவே வந்தேன்! என் கடமை முடிந்தது; நான் வருகிறேன்,'' என்று கூறிவிட்டு

வெகு வேகமாக வெளியே போய்விட்டாள். மாதவன் கூப்பிடக் கூப்பிட திரும்பிப் பாராமல் வந்த வழியே போய் விட்டாள்!

பாவம் மாதவன்! அவரைப் பார்க்கவே மிகப் பரிதாபமாக இருந்தது. என்ன செய்வ தென்றே புரியாமல் தடுமாறி னர். தன் முதுமைக் காலத் திலே நிம்மதியாக இருக்க வேண்டிய வேளையில் 'அமைதி! அமைதி! எங்கேயிருக்கிறது அமைதி?' என்று கதறினர்.

மறுநாள் பத்திரிகையிலே "நீதிபதி மாதவன் நேற்றிரவு மரணமடைந்தார். கடந்த சில நாட்களாகவே இரத்தக் கொதிப்பினல் பாதிக்கப் பட்டி ருந்த அவர், திடீரென மார டைப்பினுல் இறந்து விட்டார்" என்ற வாசகங்கள் காணப் பட்டன. இதைக் கேள்விப் பட்ட செங்கமலத்திற்கு பைத் தியமே பிடித்து விடும்போ லிருந்தது. "ஐயோ, அவர் என் னுல்தான் தற்கொலை செய்து கொண்டார். அவரைக் கொன்ற கொலையாளி நான் தான். என் மகனும் ஒரு கொலையாளி! என் கணவர் இறந்துவிட்டார். என் மகனும் சாகப்போகிருன். நான் ஏன் இன்னும் சாகாமல் இருக் கிறேன்?" என்று புலம்பினள். அவளை ஆற்றுவார் யார்? தேற் றுவார் யார்?

●

# வினவும் விடையும்!

பேரறிஞர் பெர்னுட்ஷா நகைச் சுவை ததும்பப் பேசுவதி லும், பேச்சால் 'மூக்கை அறுத்து' பாடம் கற்பிப்பதிலும் வல்லவர்.

ஒரு சமயம் ஒரு நவநாகரீகச் சீமாட்டி ஏராளமாகச் செலவு செய்து தன்னை அலங்காரப்படுத்திக்கொண்டு ஷாவிடம் வந்தாள். ஷாவை நோக்கி "எங்கே உங்கள் சாமர்த்தியத் தைப் பார்க்கலாம்; என் வயது என்ன என்று சொல்லுங்கள் பார்ப்போம்" என்ருள்.

ஷா அந்தப் பெண்மணியை மேலும் கீழும் பார்த்தார். பின் சொன்னர்: "உங்களுடைய பல்லைப் பார்த்தாலோ உங்கள் வயது 18 என்றும், தங்க நிறக் கூந்தலைப் பார்த்தால் 19 வயது என்றும், நீங்கள் நிற்கும் இந்த ஒய்யார நிலையைப் பார்த்தால் 14 வயது என்றும் சொலலத் தோன்றுகிறது."

சீமாட்டிக்குப் பெருமை தாங்கவில்லை. "என்னை நீங்கள் இப்படிப் புகழ்வதற்கு வந்தனம். இருந்தாலும் என் சரியான வயது என்ன என்று சொல்லுங்கள் பார்க்கலாம்!" என்ருள்.

உடனே ஷா "அது தானே? மூன்றையும் கூட்டிப் பாருங்கள். 18, 19, 14 இவைகளைக் கூட்டினல் எவ்வளவு? 51 தானே! அதுதான் உங்கள் வயது!" என்ருர்.

சீமாட்டி சிலையானள்!

★ ★ பள்ளிப் பருவத்தில் அவருக்குக் கணிதம் சுட்டுப் போட்டாலும் வராது. பின்னர் அவர்தான் நான்கு ஆண்டுகள் பிரிட்டனின் நிதி விவகாரத்தை நிர்வகித்திருக்கிறார்!

# அபாயத்தைக் கண்டு அஞ்சி

அது 1899-ம் ஆண்டு. தென்னுப்பிரிக்காவிலே போயர் யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. அப்போது 'மார்னிங் போஸ்ட்' என்கிற பத்திரிகைக்கு; யுத்தத்தை நேரில் பார்த்து விபரம் எழுதும் பத்திரிகை நிருபராகப் பணியாற்ற ஒரு வாலிபன் உயிரைப் பணயம் வைத்து முன் வந்தான்!

அவன் போர்க்களத்திலிருந்து செய்திகளை மட்டும் சேகரித்து அனுப்பவில்லை; அவனே தனது வீரதீரச் செயல்களைச் செய்தியாகவும் மாற்றி அனுப்பினுன்!

எதிரிகளின் முகாமுக்குள்ளே புகுவது; அவர்கள் பாசறைகளைக்கடந்து செல்வது; இவையெல்லாம் படிப்போர் பிரமிக்கும் செய்திகளாகி விட்டன!

ஒரு சமயம் அந்த வீர வாலிபன் கவசமணிந்த புகைவண்டியிலே ஏறிக்கொண்டு எதிரிகளின் இடத்திற்கே சென்று விட்டான்; ஆனுல் பொல்லாத போயர்களோ அவனைக் கைது செய்தார்கள்; சிறையில் அடைத்தார்கள்; பிறகு ஒரு நாள் திடீரென்று அந்த வாலிபன் தப்பி விட்டான்!

தான் சிறைப்பட்ட கதையையும் விறுவிறுப்பு குறையாத காவியமாக்கி அதை 'மார்னிங் போஸ்ட்' பத்திரிகைக்கு அனுப்பி வைத்தான்!

வாலிபன் தப்பியது போயர்களுக்குப் பெருங் கவலையாகப் போய் விட்டது. ஏனெனில் அவன் ஒரு ஆங்கிலப் பிரபுவின் மகன்!

பிரபுவின் மகன் போர்க்கைதியாக இருப்பது அவர்களுக்குப் பெரிய வெற்றியல்லவா!

உயிருக்கு மதிப்பே வைக்காதஅந்த யுவனை உயிரோடோ அல்லது பிணமாகவோ கண்டு பிடித்துக் கொடுப்பவர்க்கு ஏராளமான பணம் பரிசு கொடுப்பதாக அறிவித்தார்கள், போயர்கள்!

ஆனுல் பல நூறு மைல்கள், எவர்கள் தன்னைப் பிடிப்பதற்காகக் கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறுர்களோ அவர்களது அணி வகுப்பையெல்லாம் தாண்டி; எங்கெந்தப் பாலங்களிலும், சாலைகளிலும் தங்கள் சிப்பாய்களைக் காவல் போட்டிருந்தார்களோ அவைகளை யெல்லாம் கடந்து; கால் நடையாகவும்; ஓட்டமாகவும்; காட்டு வழியாகவும்; ஆற்றை நீந்தியும்; மலைகளைத் தாண்டியும் அந்த வீர இளைஞன் தன்னுடைய பிராந்தியத்திற்கு வந்து சேர்ந்தான்!

—அவன் தப்பிவந்த கதையை இங்கிலாந்து தேசமே சாப்பாட்டை மறந்து படித்து மகிழ்ந்தது.

உடனே அவன் தாயகம் திரும்பியதும் நடை பெற்ற பாராளு மன்றத் தேர்தலிலே

# ஓடாதே!

போட்டி யிட்டான். அவன் முன்னே எந்தவித எதிர்ப்பும் நிற்க முடியவில்லை! மிகச் சாதாரணமாக அந்த வாலிபன்-இருபத்தி ஆறே வயது நிரம்பப் பெற்ற அரும்பு மீசைப் பருவத்தினன்-பாராளு மன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப் பட்டான்!

நம் நாட்டிலே பிரபுவின் மகனாகப் பிறக்க ஆசைப்படுகிறார்கள், பலர் — சோம்பேறியாக வாழ்க்கை நடத்த!

அங்கே பிரபுவின் மகன் உழைத்துச் சாப்பிட வேண்டும்; சொந்தக் கால்களினாலேயே நிற்க வேண்டும்—என்கிற நினைப்பில் ஒரு பத்திரிகை நிருபராக வேலை பார்த்திருக்கிறான்.

அந்தப் பணியிலேயே அவன் தென்னாப்பிரிக்காவில் இறந்திருப்பானேயானால் இங்கிலாந்திற்கு ஒரு மேதை கிடைத்திருக்க மாட்டான்!

யாரென்று நினைக்கிறீர்கள்; அந்த வீர உணர்ச்சி மிகுந்த வாலிபனை?

வின்ஸ்டன் சர்ச்சில்தான், அது!

இருபத்தி ஆறு வயதிலேயே பாராளு மன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்; அந்த வயதில் அவருடைய வீரச்செயலைப் பாராட்டி ஒரு பாடல்கூட இயற்றப் பட்டது!

“அபாயத்தைக் கண்டு அஞ்சி ஓடாதே!”—இதுதான் சர்ச்சிலுடைய வாழ்க்கைக் குறிக்கோள்!

*1921*-ம் ஆண்டில் அவர் சொற்பொழிவாற்றுவதற்காக அமெரிக்காவிற்குச் சென்றிருந்தார். அப்போது பிரிட்டனிலுள்ள ஸ்காட்லந்து யார்டுஎன்னும் துப்பறியும் ஸ்தாபனம் சர்ச்சிலைக் கொல்வதற்கு சில பயங்கர வாதிகள் முயற்சி செய்து கொண்டிருப்பதாக எச்சரிக்கை செய்தது. ஆனால் சர்ச்சில் அதைப் பற்றிக்கவலைப் படவில்லை.

ஒரு நகரத்திற்கு சொற்பொழிவாற்றச் சென்றிருந்தார். அங்கே பயங்கர வாதிகள் சர்ச்சிலுடைய உயிரைப் பலி வாங்கப் போகிறார்கள் என்ற செய்தி போலீசுக்குக் கிடைத்தபடியால், அதிகாரிகள் அந்தக் கூட்டத்தைக் கலைத்து விடும்படி சர்ச்சிலுடைய நிர்வாகியைக் கேட்டுக் கொண்டார்கள்.

ஆனால் அந்த நிர்வாகியோ மறுத்துவிட்டார்.

இதைக் கேள்விப்பட்ட சர்ச்சில் உடன் தனது நிர்வாகியை அழைத்து, "நீர் செய்ததுதான் சரி; அபாயத்தைக் கண்டு அஞ்சி புறமுதுகிட்டு ஓடக் கூடாது! அப்படிச் செய்தால் அது அபாயத்தை இரு மடங்கு பெருக்குவதற்குச் சமானமாகும். ஆனால் அதே அபாயத்தை நீர் நேர் நின்று சமாளிப்பீரேயானால் அது அபாயத்தைப் பாதியாகக் குறைப்பதற்குச் சமானமாகும். எதைக் கண்டும், எப்போதும் பயந்து ஓடாதே!"- இவ்வாறு கூறினார்!

ஆமாம்; அபாயத்தைக்கண்டு ஓடியதில்லை சர்ச்சில். அபாயத்தை நோக்கித்தான் இவர் ஓடியிருககிறார்!

வெறி நாய் கௌவியபொருள்களை விடுவதில்லை. அதைப் போலவே சர்ச்சிலும் எடுத்த காரியத்தை செய்து முடிக்காமல் விடுவதில்லை.

பள்ளிப் பருவமுதலே அவருக்கென தனிக் கொள்கை இருந்தது. பிறமொழிகளில் கற்றுத் தேர்வதற்கு முன் ஒருவன் தாய் மொழியில் விற்பன்னராக இருக்க வேண்டும் என்பதிலே அவருக்கு நம்பிக்கை உண்டு. அதனால்தான் அவர் ஆங்கில மொழியில் செலுத்திய கவனத்தை லத்தீன் மொழியிலும்; கிரேக்க மொழியிலும்; பிரெஞ்சு மொழியிலும்; ஏன்- கணிதத்திலும் கூடச் செலுத்தவில்லை.

குறிப்பாக பள்ளிப் பருவத்தில் அவருக்குக் கணிதம் வேம்பைவிடக் கசப்பாக இருந்தது; ஆனால் ஒரு விந்தை; கூட்டுப் போட்டாலும் கணக்கு வராமலிருந்த சர்ச்சில்தான் பிறகு நான்கு ஆண்டுகள் எல்லோரும் மெச்சுகின்ற வகையிலே பிரிட்டனின் நிதி விவகாரங்களை நிர்வகித்திருக்கிறார்!

இராணுவக் கல்லூரியில் சேர்வதற்கு அவர் தேர்வு எழுதினார். ஒரு முறையல்ல; இரு முறையல்ல; மூன்று முறை எழுதினார்; தோற்றார். இறுதியில் தோல்வியால் துவண்டுவிடாமல் நான்காவது முறை எழுதினார்; வெற்றி பெற்றார்!

சர்ச்சில் தன்னைத்தானே வளர்த்துக் கொண்டவர்.

ஹாரோ; சான் டிரஸ்ட்-போன்ற புகழ்பெற்ற பள்ளிகளில் படித்து வெளிவந்தபிறகு எல்லாக் கல்லூரிப் பட்டதாரிகளும் கண்டுபிடித்த உண்மையையே கண்டுபிடித்தார். அதாவது நடைமுறையைப் பற்றி தங்களுக்குக் கல்லூரி கற்றுக் கொடுத்தது 'பூஜ்யம்' என்பதைத்தான் அவரும் தெரிந்து கொண்டார்!

இந்தியாவிலுள்ள பிரிட்டிஷ் இராணுவத்தில் பணியாற்றிக் கொண்டிருந்தபோது அவர் அம்மாவுக்கு எழுதி அங்கிருந்து புத்தகங்கள் அனுப்பச்சொல்லி அவைகளைக் கரைத்துக் குடித்தார். மற்றவர்கள் தூங்கிக் கொண்டும், பேசிக் கொண்டும் இருந்தபோது இவர் படித்தார்; பாடுபட்டார்!

இலக்கியங்களைப் படித்து அழகு ஆங்கிலம் எழுதுவதற்குப் பழகிக் கொண்டார். அவர் பேச்சாளராவதற்கு முதலில் அவரது குரல் ஒத்துழைக்க

வில்லை. பிறகு தொடர்ந்து நீடித்த பயிற்சியின் மூலம் தன்னை ஒரு பேச்சாளராகத் தயாராக்கிக் கொண்டார். அதன் விளைவாக அவரது தலை முறையிலே அவரே சிறந்த ஆங்கில எழுத்தாளராகவும், சொற்பொழிவாளராகவும் மாறினார்!

பொதுவாகக் காலை பத்தரை மணிவரை அவர் படுக்கையை விட்டு எழுந்திருப்பதில்லை. ஆனால் எட்டரை மணி முதலே படுத்தவாறே பல்லிடுக்கில் ஒரு சுருட்டைக் கௌவிக்கொண்டு முக்கியமானவர்களுக்கு 'போன்' பேசிக் கொண்டும்; பத்திரிகை படித்துக் கொண்டும்; வந்திருக்கும் 'ரிப்போர்ட்'டுகள், தந்திகள் இவைகளைப் படித்துக் கொண்டுமிருப்பார். முக்கிய கடிதங்களை இவர் சொல்லுவார்; இவரது உதவியாளர்கள் எழுதிக் கொள்வார்கள்!

பிறகு எழுந்து பழைய காலத்துப் பாணியில் அமைந்த சவரக் கத்தியினால் முகச்சவரம் செய்து கொள்ளுவார்.

பின்னர் ஒரு மணிக்கு மதியம் உணவு; பிறகு ஒரு மணி நேரம் தூக்கம்; பிறகு தொடர்ந்து பணி!

மறுபடியும் மாலை ஐந்து மணிக்கு படுக்கைக்கு வருவார்; அரை மணி நேரம் கண்ணை மூடித் திறப்பார்; பிறகு நள்ளிரவு வரை பணியாற்றுவார்.

—இதுதான் அபாயத்தைக் கண்டு அஞ்சி நடுங்காதஆசாமியின் அன்றாடச் சம்பவங்கள்!

○○○

அன்று பள்ளிக்கூடத்திற்கு இன்ஸ்பெக்டர் வந்திருந்தார். மாணவர்களின் ஆங்கில அறிவைச் சோதனை செய்ய விரும்பி சில வாக்கியங்களைக் கரும்பலகையில் எழுதினார்.

''பிள்ளைகளே! இதில் ஏதாவது முரண்பாடு தெரிகிறதா?''—என்று கேட்டார்.

ஒரு பையன் எழுந்தான். ''ஆமாம், சார்! உங்கள் கையெழுத்து ஒரே 'காக்கா குளறல்' ''—என்று சொல்லிவிட்டு உட்கார்ந்து கொண்டான்.

—'சிட்டிசன்'; கானடா.

மனைவி ஒரே செலவுக்காரி. கணவன் பார்த்தார்; ஒரு கணக்குப் புத்தகத்தை வாங்கிக் கொடுத்து, ''இந்தா 400 டாலர். இப்படி நான் கொடுப்பதையெல்லாம் புத்தகத்தின் இடது பக்கத்தில் எழுது. அந்தப் பணத்தை நீ என்ன செய்கிறாய் என்பதை மட்டும் வலது பக்கம் எழுது!''என்று கூறினார்.

மாதம் முடிந்தது. கணவன் மனைவியின் கணக்குப் புத்தகத்தைப் பார்த்தார். அதில் இடது பக்கத்தில் இப்படி இருந்தது: 'மொத்தம் வரவு 400 டாலர்.'

வலது பக்கத்தில் இந்த வார்த்தைகள் காணப்பட்டன: 'தொகை முழுவதும் செலவு செய்யப்பட்டது.'

—'அமெரிக்கன் வீக்லி'

காதல் - வாலிபர்களின் பருவத் திருவிழா! ஆனால் அந்தத் திருவிழா ஒரு புயலாக, போராட்டமாக இருந்தது இந்த இளைஞருக்கு!

# டிக்கன்சின் காதலிகள்...

பெண்ணினத்தில் பல ரகங்கள் உண்டு. தங்க மேனியால் கண்டு காதல் கொள்வோரின் உள்ளத்தைப் பொங்கும் கடலாக்கி, விழியால் இதயத்தை வதைத்து, வாட்டி, அக் காதலர்கள் வேதனையால் புழுப் போல் துடிப்பதைக் கண்டு இன்பம் கொள்ளும் இன்ப வல்லிகள்—அந்த ரகங்களிலே ஒன்று. பொதுவாக இத்தகைய தையல்கள், தங்களது சமூக அந்தஸ்தும் கௌரவமும் நிலைபெற உதவுபவர்களுக்கே தங்களது திருமேனியைத் தத்தம் செய்வார்கள். அழகிற்கு அடிமைப்பட்ட அந்த ஆண்களின் எதிர்காலத்தைப் பற்றி அவர்கள் கவலை கொள்வதே இல்லை. இத்தகைய பெண்கள் உலகில் பல பாகங்களில் வசித்து, பேரும் புகழும் பெற்ற கதே, அலெக்சாண்டர் போப், சர் வால்ட்டர் ஸ்காட், லார்ட் பைரன், ஜான் கீட்ஸ், சார்லஸ் டிக்கன்ஸ் போன்றவர்களின் பொன்னான வாழ்க்கையில் விளையாடி, அவர்களின் வாழ்க்கையையே பாழ்படுத்தியிருக்கிறார்கள். புகழ் வாய்ந்த இப் பெரியார்களின் வாழ்க்கையை களங்கப்படுத்தியது மல்லாமல், தங்களது இனத்திற்கே இழுக்கையும் தேடிக் கொண்டிருக்கிறார்கள். போப்பும், பைரனும் தங்களது எழுத்தோவியங்களில் அவர்களைப் பழி வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். கீட்ஸ் மௌன விரதம் பூண்டு, தனது வேதனையை அனுபவித்தான். ஸ்காட், டிக்கன்ஸ், கதே—ஆகியோர் தையல்களின் திரு உருவங்களைத் தொழுது காலத்தைக் கழித்தார்கள்.

## கர்வம் பிடித்த மேரியா பெட்நெல்:

மேரியா பெட்நெல் ஒரு பிரபல பாங்கி முதலாளி பெற்றப் பைங்கிளி! அந்த கோலமுகத் தழகியிடம் தன் இதயத்தைப் பறி கொடுத்தான் உலகப் புகழ் பெற்ற பெருங்கதை வேந்தன் சார்லஸ் டிக்கன்ஸ். ஆனால் அவளோ, அவனைக் காதலிக்கவில்லை. வேதனையால் சார்லசின் உள்ளம் வாடும். அதை மேன்மேலும் வாட்டி வதைத்தாள் மேரியா. ஒரு சமயம் குளிர்ந்த பார்வையை வீசுவாள்; மறு சமயமே அவளது கயற் கண்கள் கனலைக் கக்கும். சார்லசின் மனம் புண்பட வேண்டும் என்பதற்காகவே

வேறு ஒருவனிடம் வலியச் சென்று, வாய் வலிக்க வலிக்க அன்பு வார்த்தைகளை பேசு வாள். பிறிதோர் சமயம், மற்ற வர்களின் மனம் நோகும்படிச் செய்வதற்காக, சார்லசிடம் மனம் விட்டு சொல்லாரம் பூட்டுவாள். பார்ப்பவர்களின் மனதில் கூர் அம்பு பாய்ந்து வேதனை அனுபவிப்பதைக் காண, சார்லசிடம் கொஞ்சிக் கொஞ்சி பேசும், அந்த வஞ்சிக் கொடி! 'திருமணம்' என்று வேண்டி நின்றான் சார்லஸ். ஆனால் அவளோ அவனைத் திரும்பியும் பார்க்க மறுத்து விட்டாள். அதற்குக் காரணம், சார்லசின் வறுமையே! சார்ல சின் கவிதைகள் இனிமையாக வும், அவன் உதிர்த்த வார்த்தைகள் புகழ் மொழியில் வடித்தெடுத்ததாக இருந்த போதிலும், அவன் சட்டசபைச் செய்திகளை பத்திரிகைகளுக்கு அனுப்பும் ஒரு சாதாரண 'செய்தி சேகரிப்பு' ஊழியனாக இருந்ததே காரணம், மேரியா அவனை மணந்து கொள்ளாத தற்கு. சார்லசைக் காதலிப்ப தாக நீண்ட நாள் நடித்து அவனை நம்பச் செய்து பின் மோசம் செய்தாள்.

சார்லஸ், மேரியாவைவிட வயதிலே மட்டுமல்ல; உலக அனுபவங்களிலும் இளையவனா கவே இருந்தான். இந்த "எலி—பூனை" விளையாட்டு நான்கு ஆண்டுகள் நடைபெற்றது. இந்தநான்கு ஆண்டுகளில் சார் லஸ் ஓயாது உழைத்தான். தன் நிலை உயரவும், மேரியாவிற்கு அழகான வீடு அளித்து, ஒரு நிரந்தர வருவாயைக் காட்ட வும் இரவு பகலென்று பாரா மல் உழைத்தான்.

மேரியாமீது அவன் தன் உயி ரையே வைத்திருந்தான். பாவம், மேரியா நிம்மதியாக நித்திரா தேவியை அணைத்து மகிழும் வேளையில், அவள் வீட்டைக் காண்பதற்காகவே பல இரவு களில் நீண்ட தொலைவிலுள்ள மக்கள் சபைக் கட்டடத்திலி ருந்து மேரியா வசித்த வீதிக்குச் சென்றிருக்கிறான் சார்லஸ். அவளைப் பற்றி பலவிதமான எண்ணங்கள் சார்லசின் மன தில் குடியேறியிருந்தனவாம்.

> "அவள் என்னைவிட மூத்த வள். என்சிந்தை அணு ஒவ்வொன்றையும் நான்கு ஆண்டுகள் ஆட்டிப் படைத்தாள். கற்பனையில் நான் பேசிய உரையாடல் கள், புத்தகம் புத்தகமாக இருக்கிறது. ஹோரேஸ் வால்போல் தீட்டிய கடி தங்களைவிட அதிகமாக அவளுக்கு எழுதி யிருக்கி றேன்."



உலகப் புகழ்பெற்ற பெருங் கதைப் பூமான் காதல் விளை யாட்டு விளையாடிய பருவத் தில் இப்படித்தான் இருந் தார்!

—இப்படிப் பல ஆண்டுகளுக் குப் பின்னல் அவள்மேல் கொண்ட காதலைப்பற்றி குறிப் பிட்டிருக்கிருன், சார்லஸ் டிக் கன்ஸ்.

ஒரு முறை மேரியா, நீல கையுறை வாங்கி வரும்படிக் கூறினுளாம். அந்த நினைவுநிழலை இருபத்தைந்து ஆண்டுகளுக் குப் பின்னல் குறிப்பிட்டிருக் கிருர்.

ஒருமுறை, அவளை தையற் காரனிடம் அழைத்துப் போகும்படி கூறினுளாம். சார் லசும் சம்மதித்து, அவளது வீட்டிற்குப் போனுன். அவன் வீட்டை அடைவதற்கு முன்னு லேயே மேரியா, அவளது அன்னையுடனும், வேறு ஆண் நண்பர்களுடனும், வெளியே வந்துகொண்டிருந்தாள். டிக் கன்ஸ் அவர்களுடன் வருவதை விரும்பாத மேரியாவின் அன்னை ''வணக்கம், சார்லஸ்! சென்று வீருகிறீர்களா?'' என்று அழுத் தந் திருத்தமாகக் கூறினுளாம்.

இது தன் மானத்தைத்தாக்கு வதாகவும், அவமானமாக இருந்தபோதிலும், பரிதாபத் துக்குரிய சார்லசால் என்ன செய்ய முடியும்? மேரியா செய்த மற்ற அட்டகாசங்களால், கணவன் செல்வத்தை இழந்து, ''பாப்பர்'' ஆனுன். டிக்கன்ஸ் படிப்படியாக முன்னேறி ஒரு நல்ல நிலையை அடைந்தான்.

சார்லசின் மென்மையான இதயத்தை மேரியா மிக புண் படுத்தினபோதிலும், அவள் சார்லசின் வாழ்நாளெல்லாம் அவன் வணங்கும் தேவதை யாகவே இருந்து வந்தாள். காவியங்களில் எல்லாம் அவ ளது உருவத்தைக் காட்டினுன். அவன் வரைந்த ''பிக்—விக்—பேப்பர்ஸ்'' என்ற நவீனத்தி லும், வாரக் குறிப்புகள்—கதை கள்—எல்லாவற்றிலும் மேரியா வின் விளையாட்டுகளை-அவளது அழகை வர்ணித்திருக்கிருன்.

## பல ஆண்டுகளுக்குப் பின்னர்...

பல ஆண்டுகள் உருண்டோ டின. 1855-ம் ஆண்டு, பிப்ர வரி மாதம், 15-ம் நாள், மேரியாவிடமிருந்து சார்ல சிற்கு ஒரு கடிதம் வந்தது. அப்போது சார்லஸ் செல்வமும் செல்வாக்கும் பெற்று புகழின் உச்சியை அடைந்திருந்தான். இத்தகைய பேரும்புகழும், செல் வாக்கும் செல்வமும் பெற்ற வனை—தலையசைப்பால் தாள் பணியக் காத்திருந்தவனை— இழந்து விட்டோமே என்று அவள் வருந்தி இருக்க வேண் டும். பல ஆண்டுகளுக்குப் பின் னும், அவளது நினைவு சார்ல சின் இதயத்தை வாட்டியது. ஒரே முறை மீண்டும் அவளை சந்தித்தான்; பின் சந்திக்கவே இல்லை. அவன் அவளை சந்திக் கும்போது மேரியா பல்லிழந்து, பெருத்து, அருவருக்கத் தக்க உடலமைப்போடு காட்சி தந் தாள்.

''என்னைப் போல உண்மை யாகவும், நம்பிக்கையாகவும் உன்னைப் பூஜிப்பவர்கள் அன் றும் இன்றும் இறுதி வரையும் வேறு யாரும் இல்லை என்று நான் எப்பொழுதும் நம்பிக் கொண்டிருக்கிறேன். உன்னை என் நெஞ்சிலே நிறுத்தி, அந்த நினைவுடனேதான் வறுமை யுடன்போராடிப்போராடி, என் வாழ்க்கைக்கு வழி அமைத்துக் கொண்டேன். அந்த நினைவு தான் என்னை இன்னும் மண்

சார்லசை முறைப்படி மணந்த காதரைன் இவள்தான்; இருபதாண்டுகள் அந்த எழுத்துலக வேந்தனுடன் வாழ்ந்த பத்தினித் தெய்வம்!

னுலகில் உலாவச்செய்கிறது!'' என்று சார்லஸ் மேரியாவை இறுதியாக சந்தித்தபோது கூறினனும்!

வாழ்க்கையின் ஆரம்பத்தில் தான் பெற்ற வெற்றிக்கும், தனது குணங்களில் திடீரென்று ஏற்பட்ட மாறுதல்களுக்கும் அப்பொற்கொடி மேரியாதான் மூல காரணம் என்று அவன் நம்பினுன். அவளது ஒரே மைந்தன் மாண்டபோது சார்லஸ் தீட்டிய கடிதம் இதை ஊர்ஜிதப்படுத்துகிறது:

''நான் உன்னை முழுமனதுடன் காதலித்த அந்த நாட்கள் என் குணங்களையே மாற்றி விட்டது. இப்போதெல்லாம் மழலை மொழிச் செல்வங்கள் மேல் நான் அன்பு சொரிகிறேன். இது எனது பிறவிக் குணமல்ல; நான் உன்னைச் சந்திக்காமலிருப்பதே மேல்! அதற்கு ஈடாக உன்னைப்பற்றி நினைத்துக் கொள்ளுகிறேன்!''

## இரு சகோதரிகள்:

மேரியா, விண்டரை மணம புரிந்து கொண்ட பின், மணம் உடைந்துபோயிருந்த சார்லஸ் ஹோக்கர்த் என்றவரின் இல்லத்தில் ஆறுதல் பெற்ருன். அவர் சார்லஸ் முன்னேறுவதற்குப் பலவழிகளிலும் உதவி புரிந்தவர். அவருக்கு மூன்று புதல்விகள். அவர்களில் மூத்தவள் காதரையனுடன் தனது 'விதி'யை முடித்துக் கொள்ள முற்பட்டார் சார்லஸ்.

ஆரம்பத்திலேயே அவர்கள் இரு துருவங்களாக இருந்தார்கள். உழைப்பதிலும், காலத்தை வீணுக்காமலிருப்பதிலும் கண்ணும் கருத்துமாக இருப்பார் சார்லஸ். ஆனுல் காதரைன் தன் உடலை அலட்டிக் கொள்ளாமல், எதைப் பற்றியும் கவலை கொள்ளாமல் காலத்தைக் கழிப்பாள். அவள் சார்லசை மனப்பூர்வமாகக் காதலித்தபோதிலும், அவனுக்குத் தேவையான விஷயங்களில் அவனுடன் பூர்ணமாக ஒத்துழைக்கவில்லை.

அவர்கள் திருமணம் செய்து கொண்ட இருபதாண்டுகளுக்குப் பின்னுல், அவர்கள் பிரிந்ததற்கு வேறு பல காரணங்களும் இருந்தன. டிக்கன்ஸ் தனது முதல் காதலி மேரியாவை மறக்கவே இல்லை. அவளைப் பற்றி அவன் மனைவியிடம் அடிக்கடி பேசிக் கொண்டிருப்பான். காதரைனுக்கு இதைக் கேட்க வேதனையாக இருக்கும். அது மாத்திரமல்ல; அவளது சகோ

தரிகள் வேறு அவளது வாழ்க்கையில் குறுக்கிட்டார்கள்.

1836-ம் ஆண்டு காதரையனின் இளைய சகோதரி பதினாறு வயது நிரம்பிய மேரி அவர்களுடன் வசிக்கப் போனாள். மேரி மிக அழகானவள்—கவர்ச்சியானவள்—புத்தி கூர்மையுள்ளவள்! ஆண்களைக் கவரும் இத்தனை குணங்களையும் பெற்றிருந்தாள் மேரி. அப்போது சார்லஸ் குறையா செல்வத்தையும், நிறைய நண்பர்களையும், புகழையும் அடைந்திருந்தான்.

அப்போது அவனுக்கு வயது இருபத்தி நான்கு — இளமை முறுக்குடன் நிரம்பிய அழகிய வாலிபன். கையிலிருக்கும் பொருளை விட்டு எட்டாப் பொருளுக்கு ஏங்கும் அவன் தன் மனைவிமீது அன்பு செலுத்துவதைவிட அதிகமாக மேரி மீது அன்பு செலுத்தினான்.

இளகிய மனதும், அறிவும் படைத்த மேரி மிக விசித்திரமான சார்லசின் எழுத்தோவியங்கள் உலகத்தில் மிக உயர்ந்தவை என்று எண்ணுவாள். இம்மாதிரி தன்னைப் பூஜிக்கும் மேரிமீது சார்லசின் எண்ணம் முழுவதும் பதிந்தது. அவனது மனைவி குடும்பப் பொறுப்புகளை கவனிக்க வேண்டியிருந்ததால் சார்லஸ் மேரியை விருந்துவைபவங்களுக்கும், சுற்றுப் பயணங்களுக்கும், நண்பர்கள் இல்லங்களுக்கும், பட சாலைகளுக்கும், நாடக அரங்கிற்கும் அழைத்துச் சென்றான்.

அந்த நாட்கள்தான் அவன் வாழ்க்கையிலேயே மிக இன்பமான நாட்கள். உலகத்தின் கைதட்டலில் உயர்ந்தான்; மேரியின் ரசிப்புத் தன்மையால் வளர்ந்தான்.

## துன்பநிகழ்ச்சி!

இந்த இன்பம் நீண்ட நாள் நிலைக்கவில்லை. அதே ஆண்டு, மே மாதம், ஆறும் தேதி, செண்ட் ஜேம்ஸ் அரங்கில் நடைபெற்ற நாடகத்திற்கு காதரையினும், மேரியும் சார்லசுடன் சென்றார்கள். மிக இன்பமாகக் கழித்த பின் ஒரு மணிக்கு மேரி படுக்கச் சென்றாள், வழக்கமான நல்ல உற்சாகத்துடன். ஆனால் அவள் தனது தடைகளைக் களைவதற்கு முன்னால், உடல்நலம் குன்றி, டாக்டர் வருவதற்குள் சாவின் கோரப் பசிக்கு பலியானாள்.

"ஆண்டவனுக்கு நான்நன்றி செலுத்த வேண்டும். ஏனென்றால் என் அரவணைப்பில்தான் அவள் உயிர் பிரிந்தது. ஐயோ, அவள் உதிர்த்த இறுதி வார்த்தைகள் என்னைப் பற்றிதான்!" என்று அவர் எழுதியிருக்கிறார்.

அவரது உறவினருக்கு அவளைப் பற்றி எழுதிய கடிதத்தில், "அவள் எங்கள் இன்ப வாழ்வின் விளக்கு; எங்கள் வீட்டின் அழகு; எங்கள் வீட்டு ஆபரணம்; எங்கள் வீட்டின் உயிர்," என்றெல்லாம் மேரியைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

மேரி இறந்த சில நாட்கள் வரை பத்திரிகையில் தொடர்ந்து வந்து கொண்டிருந்த 'பிக்விக் பேப்பர்ஸ்' 'ஆலிவர் டுவிஸ்ட்'—ஆகியவைகளையும் அவர் எழுதவில்லை. "நீண்ட காலமாக அவருடைய உழைப்புக்கு ஆறுதலாக இருந்தவரும், அவரது அன்பைப் பூரணமாகப் பெற்றவரும், அவரது நெருங்கிய உறவினருமான ஒருவரது பிரிவின் துன்பத்தில் சார்லஸ்

மூழ்கியிருக்கிறார்,'' என்று அப்பத்திரிகைகள் வாசகர்களுக்கு சமாதானம் கூறின.

அதுவரை அவரது படைப்புகளில் மேரியா இடம் பெற்று வந்தாள். இந்த நிகழ்ச்சிக்குப் பின் மேரி இடம் பெறலானாள். 'திஓல்ட்கூரியாசிட்ஷாப்' என்ற எழுத்தோவியத்தில் மேரியை நெல் என்ற பாத்திரத்தில் சித்தரித்திருக்கிறார்; ''இப்பெண் போன்றவள் புவியில் இதுவரை பிறந்ததே இல்லை. குற்றம் எதுவும் காண முடியாத பொற்கொடி!'' என்று குறிப்பிட்டிருக்கிறார்.

''ஆலிவர் டுவிஸ்டி''ல் ரோஸ் மேலி என்ற பாத்திரத்தில் மேரியை அவர் எப்படி வர்ணிக்க வேண்டும் என்று விரும்பினாரோ, அப்படி எழுதியிருக்கிறார்: ''அவள்பதினேழுஆண்டுகளைத் தாண்டவில்லை; அச்சடித்த அழகுப் பதுமை; சாந்தமும் பெருந்தன்மையும் கொண்டவள்; மிக அழகானவள்; அவள் பிறந்திருக்க வேண்டிய இடம் இந்த மண்ணல்ல; இதில் வாழும் கொடூர ஜீவன்களும் அவள் நண்பர்களல்ல என்று தோன்றுகிறது!''

மடிந்து அவளுடன் சேர வேண்டும் என்ற அவரது எண்ணத்தை அதே புத்தகத்தில் விவரித்திருக்கிறார்:

''மீளாத் நித்திரையில் அவள் மெள்ளமெள்ள வீழ்ந்துகொண்டிருந்தாள். அது ஒன்றுதானே துன்பத்திலிருந்து பிரிக்கும் சக்தி!''

---

சார்லசின் இலக்கியங்கள் அவனுக்குத் தந்த காதலி; காதரைனின் சகோதரி; சாகுமளவும் அவனை நேசித்து ஒரே பெண்மணி—மேரி!

## ஜார் ஜீனாவும்-மலனும்:

அதன் பின், வேறு ஒருபெண் சார்லசின் வாழ்க்கையில் குறிக்கிட்டாள். சார்லசும், அவன் மனைவியும் பிரிந்ததற்குக் காரணம் இக்காரிகைதான் என்று சிலர் கருதுகிறார்கள். ஜார்ஜீனா காதரைனின் இளைய சகோதரி. மேரி இறந்த பின் அவர்களுடன் வசிக்க வந்தாள். குடும்பப் பொறுப்பு முழுதையும்ஏற்றுக்கொண்டாள். நிர்வாகத்தில் மிகத் திறமை வாய்ந்தவள் என்பதைநிரூபித்தாள்.

சார்லஸ்அவளை விரும்பினான். ஆனால் காதரைன் தன் உரிமைக்காகப் போராடி, சார்லசை இழந்தாள். அன்றையிலிருந்து சார்லஸ் சாவை அணைக்கும் வரை அவன் வீட்டையும், குழந்தைகளையும் கண்காணிக்கும் பொறுப்பை ஜார்ஜீனா ஏற்றிருந்தாள். சார்லசை மிகவும் நேசித்தாள்.

இந்த அன்பு அவன் இதயத்தில் வேர்விட்டு துளிர்ப்பதற்கு முன்னுல், வேறு ஒரு பெண் குறுக்கிட்டாள். அவள் ஒரு நடிகை; 1857-ம் ஆண்டு மான்செஸ்டரில் சந்தித்தார். திருமதி டெர்னனேயும், அவளது இரண்டுகுமாரிகளான மேரியா, எலனையும், "தி ப்ரோசன் டீப்" என்ற நாடகத்தில் நடிக்க ஏற்பாடு செய்தார். முதலில் மேரியா அவரைக் கவர்ந்தாள். பின் எலன் பக்கம் அவர் கவனம் திரும்பியது. எலனுடன் அவர் நெருங்கிப் பழகினுர். அது பல வதந்திகளுக்கு ஆதாரமாகியது.

எலனை அவர் காதலிக்கும் போது அவருக்கு வயது நாற்பத்தைந்து. அவளுக்கு பதினெட்டுதான். இநதக் காதல் விவகாரம் சீக்கிரத்தில் முடிவுற்றதென்ருலும், அவரது நெருங்கிய நண்பர்களான பார்ஸ்டர், தாக்கரே போன்ருேர் 'கிளப்'களில் சர்வ சாதாரணமாகப் பேசுவதற்கு வாய்ப்பை அளித்துவிட்டது. இந்தக்காதல் விவகாரம் முடிவுற்றதற்குக் காரணம் மிக வேடிக்கையானதாகும். எலனுக்காக, சார்லஸ் சில நகைகளை செய்ய ஏற்பாடு செய்திருந்தார். ஆனுல் அந்த நகைகள் தவறுதலாக சார்லசினுடைய மனைவியிடம் கொடுக்கப்பட்டு விட்டது. இதையறிந்த அவள் பெற்ருேர்களும், உறவினர்களும் காதரைனை சார்லசிடமிருந்து பிரித்து அழைத்துச் சென்ருர்கள்.

டிக்கன்ஸ், எலன் மீது ஆழ்ந்த காதல் கொண்டிருந்தாரென்றுதெரிகிறது. பிற்காலத்தில் அவரது கதாநாயகிகள் எலனை பிரதிபலிப்பதிலிருந்து இதை அறியலாம்.

மேக்கப் அறையில் எலன் அழுது கொண்டிருப்பதை சார்லஸ் ஒருநாள் பார்க்க நேரிட்டது. உடலை வெளிப்படுத்தும் ஆடைகளை அணிந்துகொண்டு அரங்கில் தோன்ற வேண்டும்; இல்லாவிட்டால் வேலையை இழக்க நேரிடும் என்ற கவலையே அவள் அழுகைக்குக் காரணம். அவரது அழகும், பெருந்தன்மையும் சார்லசின் இதயத்தில் நிரந்தரமான ஒரு 'வடு'வை ஏற்படுத்தியது.

'இரு நகரத்துக் கதையில்' வரும் லூசிமானட் என்ற பாத்திரத்தை பதினெட்டு வயதிருந்த எலனைப் போன்றே வர்ணித்திருக்கிருர்.

"அழகிய ஓவியம்—தங்க நிறமான கூந்தல்—ஊடுருவிப் பாயும் ஒரு ஜோதி நீலக் கண்கள்—ஆச்சரியமோ, குழப்பமோ அல்லது ஒரே பாவமோ இல்லாமல்—ஆனுல் இந்த நான்கு பாவங்களும் நிரம்பிய நெற்றி!" —என்றெல்லாம் வர்ணித்திருக்கிருர்.

அவர் எழுதிய 'கிரேட் எக்ஸ்பெக்டேஷன்'சில் வரும் எஸ்டெல்லாவும் எலனின் உருவம்தான். கடித மூலமாக இக்கதையில் அவர் தீட்டியுள்ளவைகளிலிருந்து எலன் அவரைக் காதலிக்கவில்லை என்று தெரிகிறது. எஸ்டெல்லா கர்வமும் தன்னம்பிக்கையும் உள்ளவள் காதலனைக் கவர்ந்து, அவனைத் துன்புறச் செய்வது அவளுக்கு மகிழ்ச்சியை அளித்திருக்கிறது. அவளுடன் ஒரு மணி நேரம்கூட இன்பமாக இருக்கவில்லை. ஆனுல் இருபத்தி நான்கு மணி

'போர்டு'ம் பயனும் !

நேரமும்சாகும்வரை அவளுடன் கழிப்பதைப் பற்றியே சிந்தித்துக்கொண்டிருக்கிறது என் மனம். கதை முடியும்போது எலன் வெகு தூரத்திலிருந்தாள். 'கிரேட் எக்ஸ்பெக்டேஷன்ஸ்' ஏன் துன்பத்தில் முடிந்தது என்றால், எலனின் பிரிவை அவரால் ஏற்றுக் கொள்ள முடியாததுதான்.

## ராணி விக்டோரியா:

சாதாரண பெண்கள் மட்டும் குறுக்கிடவில்லை; ராணி விக்டோரியாவும் குறுக்கிட்டாள், இந்த எழுத்தாளரின் வாழ்க்கையில்! டிக்கன்சும், அவரது புதல்விகளும், 'கேஸரி ஆப் இல்லஸ்ட்டிரேஷன்' என்ற அரங்கில் ஒரு நாடக நிகழ்ச்சி நடத்திய பின், ராணி விக்டோரியா தனது நன்றியை நேரில் தெரிவிக்க சார்லசை வரும்படி அழைப்பு விட்டாள். நாடக உடையுடன் ராணியை சந்திக்க முடியாது என்று சார்லஸ் கூறிவிட்டார்.

மற்றொரு முறை சார்லஸ் படிப்பதை நேரில் கேட்க சார்லசிற்கு அழைப்பு விடுத்தாள் அரசி; அதற்கு சார்லஸ் தான் படிக்கும்போது மக்கள் இருக்க வேண்டுமென்றும், ஆகவே அரசியார் பொது மன்றங்களில், தான் படிக்கும்போது வந்து கேட்கும்படியும் மிகவும் பணிவன்புடன் பதில் அனுப்பி விட்டார்.

இந்தப் பொய்யுரை கேட்டு நம்பும் பெண்ணல்லவே விக்டோரியா! பத்தாண்டுகளுக்குப் பின், பிரௌனிஸ், கார்லி, டிக்கன்ஸ் ஆகியோரை வரும்படி அழைப்பு விடுத்தாள். எல்லோரும் சென்றார்கள். ஆனால் டிக்கன்ஸ் அப்பக்கம் திரும்பவே இல்லை. என்றாலும் அவர் ஒரு முறை ராணி விக்டோரியாவை சந்திக்கும்படி நேரிட்டது. அரசாங்க மரியாதையைக் கடைப்பிடிக்கும் நோக்கத்துடன் சார்லஸ் ராணியின் முன்னால் அமர முடியாமல் போய்விட்டது. அவருடைய புதல்விகள் அரசவையைப் பார்க்க விரும்பாமல் இருந்திருந்தால், அவர் இந்த அவமரியாதையை அடைந்திருக்கமாட்டார்.

*1840*-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் ராணி விக்டோரியா ஆல்பர்டை மணந்தாள். நாடே விழாக்கோலம் பூண்டிருந்தது. ராணியைக் காதலித்ததாக அப்போது சார்லஸ் அவரது நண்பர்களிடத்தில் கூறிக்கொண்டிருந்தாராம்.

''என் இதயம் இங்கில்லை; என் இதயம் வின்சரில் இருக்கிறது!'' என்று அவர் ஜான் பாஸ்டருக்குக் கடிதம் எழுதியிருந்தாராம்.

சார்லஸ் ஜான் அப்ஹோம் டிக்கன்ஸ்—அதுதான் அவரது முழுப் பெயர்–*1870*-ம் ஆண்டு, ஜூன் மாதம், *9*-ம் நாள் இயற்கை அடைந்தார். அவர் வாழ்வில் விளையாடிய பெண்களில், ஜார்ஜினா மட்டும் அவரது இறுதிச் சடங்கிற்கு வந்திருந்தாள். *58* ஆண்டுகள் அவர் வாழ்ந்தார். இன்னும் அதிக நாட்கள் அவர் உயிரோடிருந்திருந்தால், கதேவைப்போல வேறு ''விளையாட்டுகளை''யும் கற்றிருப்பார். ஆனால் பெண்களைப்பற்றி புதியதாக ஏதாவது அறிந்துகொண்டிருப்பாரா என்பதைச் சொல்ல முடியாது!

●●●

முகம், நரைத்த மீசை— கொஞ்சமாக.......ஆந்தையின் கண்களைப் போல் ஊடுருவிப் பார்க்கும் தன்மையுடைய

# திரைக்கதை

மேதைகள் இந்தக் காலத்தில் பட்டினி கிடக்கவேண்டிய அவசியமே இல்லை! எனது எழுத்தாள நண்பரான புரூசைப் பற்றி ஒரு சுவாரஸ்யமான கதையை உங்களுக்கு சொல்லப் போகிறேன். அதற்குப் பிறகு நான் மேலே கூறியதை நீங்களும் ஆமோதிப்பீர்கள்.

புரூசுக்கு சுமார் அறுபது வயது இருக்கும். பதினைந்து புத்தகங்களுக்கு மேல் எழுதியிருக்கிறார். அறிவு நிரம்பியவர்.

அடெல்பியில், யார்க் தெருவில், ஒரு மாடியின்மீது அவருடைய இருப்பிடம் இரண்டே அறைகளைக் கொண்டது. மாடிக்குப் போக மரப்படியில் கால் வைத்தால் கீழே விழுந்து விடுவோமா என்ற பயம் நமக்குத் தானாக வந்துவிடும். காரணம், மரப் படிகளின் அபாரிமிதமான ஆட்டந்தான்! இரண்டு அறைகளில், முதலில் இருப்பதின் கதவு எப்போதும் திறந்தே இருக்கும், எல்லோரையும் 'வா' வென்று அழைப்பதைப் போல!

எனக்குத் தெரிந்த வரையில் இவரைப் போல், பொதுஜன அபிப்பிராயத்தைப் பொருட்படுத்தாத எழுத்தாளர் வேறு எவருமே இல்லை. ஒல்லியான உடம்பு, தளர்ந்த

மூலம் : ஜான் கிளாஸ்வொர்த்தி

**தமிழில் : அதிகமான்**



கண்கள்—அதில் எப்போதும் சோகத்தின் தேக்கம்-இந்த உருவம்தான் என் நண்பர் புருசினுடையது. அவர் திரு மணம் செய்து கொள்ளா மலேயே காலந் தள்ளி விட்டார். இவர் பெண்களை வெறுத்து ஒதுக்கி விட்டாரா... இல்லை; பெண்கள் இவரைப் பற்றி 'ஒரு முடிவுக்கு' வந்து விட்டார்களா என்று தெரிய வில்லை.

இதை எழுதும் வருடத்தில்; நான் ஒரு தடவை என் நண்பரின் அறைக்குப் போயிருந்தேன். அவருக்கு எழுத வேண்டும் என்ற ஆர்வம் இருக்கிறது; ஆனால் ஏற்ற வயதில்லை. பிறகு வெளிவரும் புத்தகம் எப்படி இருக்கும்? கடைசியாக அவர் எழுதிய புத்தகத்திற்கு நல்ல வரவேற்பு இல்லை! உடலில் ஏற்பட்ட கோளாறினால், ஒரு ஆபரேஷனுக்கு வளைந்து கொடுக்க வேண்டியிருந்தது. அதனால் பல செலவு—உடல் நலிவு—பலத்தை இழந்து விட்டது போன்ற உணர்ச்சி!

எனது விஜயம் அக்டோபர் மாதத்தில் நடந்தது. நான் போனபோது அவர் சாய்வு நாற்காலியில் சாய்ந்தவாறு பிரேசில் நாட்டு சிகரெட்டை புகைத்துக் கொண்டிருந்தார். அவருக்குப் பிடித்தது, எனக்குப் பிடிக்கவில்லை. மடியில் சில காகிதங்களும், கீழே சில காகிதங்களும் கிடந்தன. காகிதங்கள் லேசாக அடித்த காற்றினால் அலங்கோலமாக சிதறி இருந்தன. அறையின் தோற்றம் எடுப்பாக இல்லை. நான் அவரைப் பார்த்து ஒரு வருடத்திற்கு மேலிருக்கும் — ஏதோ நேற்றுதான் அவரைப் பார்த்தது போல, என்னைப் பார்த்து விட்டு "ஹலோ!" என்றார். பிறகு தொடர்ந்து, "சினிமா என்று எல்லோரும் சொல்லுகிறார்களே, அதைப் பார்க்க நான் நேற்று போயிருந்தேன். அதற்கு நீ எப்போதாவது போயிருக்கிறாயா? உம்...என்னது?" என்று கேட்டார். வெறுப்பு அவர் குரலில் தெரிந்தது எனக்கு! "நன்றாகக் கேட்டீர்கள்; போயிருக்கிறாயாவது! சினிமா எப்போது வந்தது தெரியுமா? 1900-ம் வருடத்திலிருந்து...!" என்றேன்.

நான் பார்த்திருப்பேன் என்று அவருக்கு எப்படித் தெரியும்?

"போகட்டும்; சினிமாவைப் பற்றி நான் கேலிச் சித்திரம் ஒன்று எழுதியிருக்கிறேன்!" என்றார்.

"கேலிச் சித்திரமா? சினிமாவைப் பற்றியா?"

"ஆமாம்! நான் உருவாக்கி இருக்கும் கதா பாத்திரங்கள் அப்படித்தான் இருக்கப் போகின்றன. இதைப் போல் ஒரு கதையை எப்போதும் படித்திருக்கமாட்டாய்!" என்று கூறிவிட்டு, ஒரு காகிதத்தை எடுத்து கையில் வைத்துக் கொண்டு, சப்பு கொட்டிவிட்டு மீண்டும் பேச ஆரம்பித்து விட்டார் எழுத்தாளர்.

"என்னுடைய கதாநாயகி இருக்கிறாளே, அவள் ஒரு வெள்ளையன்—நீக்ரோவின் கூட்டு உற்பத்தி. அவள் கண்கள் சுழலும்; மார்பகம் விம்மி விம்மித் தணியும்! எல்லோரும் அவளை விரும்புகிறார்கள்-அவள் மிகவும் பரிசுத்தமானவள். ஒழுங்கானவள். அவள் யாருக்கும் இணங்காமல் இருக்கும் நிலையை விவரிக்கும் பல கட்டங்

களைப் படித்தால் மயிர் கூச்செறியும்; ரத்தம் உறையும்! பேய் மனம் படைத்த ஒரு சகோதரன் அவளுக்கு. அவனுடன்தான் அவள் வசிக்கிறாள். அதனால் அவளுடைய பரம இரகசியம் ஒன்று அவனுக்குத் தெரிகிறது. அதைப் பயன் படுத்திக் கொண்டு அவளை ஒரு கோடீஸ்வரனுக்கு மணமுடிக்க சகோதரன் விரும்புகிறான். அந்தக் கோடீஸ்வரனிடமும் ஒரு இரகசியம் அடைந்து கிடக்கிறது...... இதைப்போல் எனது கதையில் நான்கைந்து இரகசியங்கள் பின்னப்படுகின்றன. ஒரே சிக்கல் முடிச்சு!'' என்றார்.

''ஏன் இப்படி உங்கள் பொழுதை வீணாக்குகிறீர்கள்?'' என்றேன்.

''வீணாக்குவதா? எனக்கு நேரம் இருந்து என்ன பயன்? புத்தகங்களை எழுதினால் யார் வாங்குகிறார்கள்?''

''இப்போது யார் உங்களை பார்த்துக் கொள்கிறார்கள்?'' என்று கேட்டேன்.

''டாக்டர்கள்தான்! என் பணத்தை எடுத்துக் கொண்டு போவது அவர்களுடைய வேலை—எனக்கோ பணமில்லை என்ற கவலை.....சரி......என்னைப் பற்றி பேசுவதை கொஞ்சம் நிறுத்து!'' என்று கூறிவிட்டு நண்பர் மீண்டும் சினிமாக் கதையை கையில் எடுத்துக் கொண்டார்.

''நேற்றிரவு...என் கதை பிரகாரம் ஒரு ரயிலுக்கும்...மோட்டார் காருக்கும் பந்தயம். இது தான் எனக்குப் பிடித்தது!''

''அந்தக் கதையை நீங்கள் எழுதி முடித்தவுடன் என்னிடம் கொஞ்சம் தர முடியுமா?''

''எழுதி முடித்துவிட்டேன். பேனாவை முடிக்கும்வரை எடுக்கவில்லையே! நிறுத்தி, யோசித்து, பிறகு எழுதும் வழக்கம் என்னிடம் இல்லை என்பதை நீ அறிய மாட்டாயா?'' என்று கூறிக் கொண்டே கையிலிருந்த கதையை ஒருமுறை பார்த்தார். பிறகு பேசினார்:

''கதாநாயகியின் இரகசியம் என்ன தெரியுமா? அவள் கலப்பு

பஸ்ஸில் கூட்டம் அதிகமாயிருந்தது. இரு பெண்கள் அதிக நேரம் நின்றுகொண்டே யிருந்தார்கள். எந்த ஆண் பிள்ளையும் எழுந்து அவர்களுக்குத் தனது இடத்தைக் கொடுக்க முன்வரவில்லை.

சிறிது நேரத்திற்குப் பிறகு அதில் புத்திசாலியான ஒருவள் மற்றொருத்தியிடம் இவ்வாறு கூறினாள்:

''இங்கு உட்கார்ந்திருப்பவர்களிலேயே மிகவும் அழகாக இருக்கிறாரே, அந்த நபர் எழுந்து தனது இடத்தை நமக்குக் கொடுப்பார் என்று நினைக்கிறேன்!''

—அவள் கூறி முடித்தது தான் தாமதம்; உடனே ஐந்துபேர் எழுந்துவிட்டனர்!

மணத்தின் மூலம் பிறந்தவள் அல்ல என்பதுதான் இரகசியம். வில்லனுன சகோதரன் இருக்கிருனே, அவன் அவளுடைய சகோதரனே அல்ல... இதுவும் ஒரு இரகசியந்தானே! கோடீஸ்வரன் உண்மையில் கோடீஸ்வரனே அல்ல! அவளுடைய ஏழைக் காதலன்தான் உண்மையான பணக்காரன்......எப்படி? கதையில் சுவையான அம்சங்கள் நிறைய இருக்கிறதல்லவா?'' என்ருர்.

அவர் கொடுத்ததை வாங்கிக் கொண்டு அவருக்கு நன்றி தெரிவித்துவிட்டு நான் அங்கிருந்து கிளம்பினேன். வழியில் எனது நண்பரின் உடல் நிலையைப் பற்றியும், அவரை ஓயாமல் வருத்தும் வறுமையைப் பற்றியும் யோசித்துக் கொண்டே நடந்தேன். இதற்கு ஒரு முடிவு காண்பது எப்போது?

2

அன்று மாலை நேரத்தில், உணவை முடித்துக் கொண்டு, நண்பரிடமிருந்து வாங்கி வந்த கேலிச் சித்திரத்தை—சினிமாக் கதையை — சாவகாசமாக படிக்க ஆரம்பித்தேன். இரண்டு மூன்று பக்கங்களைப் படித்தவுடனே எனக்குத் தெரிந்து விட்டது, அதில் நிறைய விஷயம் இருக்கிறதென்று! எனது அந்த நம்பிக்கை வீண் போகவில்லை. நன்ருக எழுதப்பட்ட ஒரு திரைக் கதை எப்படி இருக்குமோ, அதைவிட நன்ருக இருந்தது என் நண்பர் எழுதியிருந்த சினிமாக் கதை! அவர் சொன்னது போல அது ஒரு கேலிச் சித்திரமே அல்ல...சில தொழில் நுட்பங்களை ஆங்காங்கே சேர்த்து விட்டால் அது ஒரு பெரிய...வெற்றியைத் தேடித் தரும் சினுரியோ...படம் எடுப்பதற்கு தயாராக இருக்கும் சினிமாக் கதை! எந்தப் படத் தயாரிப்பாளனிடம் கொடுத்தாலும் கண்ணை மூடிக்கொண்டு பணத்தை அள்ளித் தருவான். படம் தயாரித்து வெளியிட்டால் தங்கச் சுரங்கமல்லவா கிடைக்கும்! எனக்கு கதையின் மதிப்பு நன்ருகத் தெரிந்து விட்டது! ஆனுல் இதை எப்படி உபயோகிப்பது? புருஸ், நேற்றுதான் சினிமாவையே பார்த்திருக்கிருர். அதைப் பற்றி அவருடன் பேசினுல் அவர் எண்ணம் எப்படி இருக்குமோ...

''உங்கள் கேலிச் சித்திரம்... ஒரு நல்ல சினிமாக் கதை!'' என்ருல்,

''அட கடவுளே...கொடு அதை இப்படி!'' என்று கேட்டு வாங்கி கதையை நெருப்பில் போட்டு விட்டாலும் ஆச்சரியப் படுவதற்கில்லை.

அவர் பெயரை வெளியில் சொல்லாமல் கதையை விற்கவும் முடியாது...

அவருக்கு எப்படியாவது இதன் மூலம் பணம் சம்பாதித்துக் கொடுக்க வேண்டும் என்ற எண்ணம் என் மனதில் விழுந்து விட்டது. இதில் கிடைக்கும் பணத்தின் மூலம் அவர் ஒரு சுதந்திரப் பிரஜையாக வாழலாமே!

''உம்...என்னது?'' என்று வெறுப்போடு சினிமாவைப் பற்றி பேசியவரிடம் சம்மதம் எப்படி வாங்குவது? பணம் தேவை என்பதற்காக அவர் இம்மாதிரி காரியத்தில் இறங்

குவார் என்று நான் யூகித்துக் கொள்ள முடியுமா? எதற்கும் அவருடைய எண்ணம் என்ன வென்பதை அறிந்து கொள்ள நான் அவர் இருப்பிடத்திற்கு மறுநாள் போக வேண்டு மென்று முடிவு செய்து கொண்டேன்!

* * *

நான் போனபோது அவர் படித்துக்கொண்டிருந்தார்.

''ஹலலோ...... நீயா?... வா... எகிப்தியர்கள் சாகாராவின் சமுதாயத்திலிருந்து வந்தார்கள் என்ற ஆராய்ச்சியைப் பற்றி உனது அபிப்பிராயம் என்ன?'' என்றார்.

''நான் அதையெல்லாம் நினைக்கவில்லை!''

''அது சுத்த முட்டாள் தனம்...வந்து...''—நான் இடை மறித்தேன்.

''நீங்கள் நேற்று என்னிடம் கொடுத்த கேலிச் சித்திரம் உங் களுக்கு மீண்டும் வேண்டுமா?''

''என்னது?''

''அதுதான் சினிமாவைப் பற்றி......''

''ஒரு அதுவா...நெருப்பில் போடு...வந்து...''

''சரி, போட்டு விடுகிறேன்... இப்போது நீங்கள் மிகவும் சுறு சுறுப்பாய் இருக்கிறீர்கள் போ லிருக்கிறது!'' என்றேன்.

''இல்லை...நீ நினைப்பது தவறு...அப்படியொன்றும் இல்லை, வேலை செய்யாமல் இருக்கிறேன்—அதனால் வரும் படியும் இல்லை. வெளிவரும் புத்தகங்களுக்கும் நல்ல மார்க் கெட் இல்லை; வரட்சி...வறுமை தாண்டவமாடுகிறது இங்கே!''

''ஜனங்களின் அபிப்பிரா யத்தை நீங்கள் கவனிப்பதே இல்லை!'' என்றேன்.

''அவர்களுக்கு ஏது பிடிக் கிறது என்றே எனக்குத்தெரிய வில்லையே...நான் எப்படி அவர் கள் அபிப்பிராயத்தை அறிய முடியும்?

''நீங்கள் முயற்சி எடுத்துக் கொண்டால் எல்லாம் நடக்

---

இரு சிறுவர்கள் பேசிக் கொண்டிருந்தார்கள்.

''பைபிள் கதைகளெல் லாம் வேடிக்கையாகத்தான் இருக்கின்றன. ஜோன்மூன்று நாட்கள் ஒரு திமிங்கலத்தின் மேல் இருந்திருக்கிறார் தெரி யுமா?''—என்றான் ஒருவன்.

அதற்கு இன்னொருவன் இவ்விதம் பதில் கூறினான்: ''ஓ! இவ்வளவுதானா? என் சிற்றப்பா இன்னும் அதிக நாட்கள் ஒரு முதலையின் வயிற் றில் இருந்திருக்கிறாரே!''

''எவ்வளவு நாட்கள்?''

''அவர் முதலையின் வயிற்றுக்குள் சென்று இரண்டு வருஷமாகிறது; இன்னும் அங்கேயே இருக்கிறார்!''

—ஹாவர்ட் காலேஜ் கிரிம்சன், யு. எஸ். ஏ.

கும். ஜனங்களுக்குப் பிடித்தது எது என்று நான் இப்போது சொல்ல ஆரம்பித்தால், நீங்கள் என்னை உதைத்து வெளியில் அனுப்பி விடுவீர்கள்!''

சினிமாக் கதை விஷயம் நாக்கு வரை வந்து விட்டது. நல்ல வேளை; நான் அவரிடம் அதை அப்போது சொல்லாமல் வந்து விட்டேன்!

* * *

அவருடைய கதைக்கு சினிமாவுக் கேற்ற மெருகேற்றி, ஒரு அருமையான திரைக்கதையைத் தயார் செய்தேன். அவர் பெயரை கதை எழுதியதாகப் போடலாமா என்று யோசித்தேன். பின்னால் அதனால் வரும் தொந்தரவுக்கு ஈடு கொடுக்க முடியாதாகையால், ஒரு 'மேதை' எழுதியது என்று போட்டு வைத்தேன்.

மேலும் அவருடைய உண்மைப் பெயரை இலக்கிய வாசனை இருப்பவர்கள்தானே அறிய முடியும்? சினிமா பார்ப்பவன் அறிவது கடினந்தான். ''மேதை'' என்று குறிப்பிட இதுவும் ஒரு காரணம்.

மறுநாள் ஒரு படக் கம்பெனிக்குப் போய், கதையைக் கொடுத்துவிட்டு எழுதிய மேதையைப் பற்றி விவரமாகப் பேசினேன். சில காரணங்களுக்காக அவர் தன் பெயரை வெளியிட விரும்பவில்லை என்பதையும் நாசூக்காகச் சொல்லி வைத்தேன்.

கதையைப் படிக்க அவர்களுக்கு போதிய அவகாசம் கொடுத்து விட்டு, விலையை நிர்ணயிக்க ஒரு நாள் போனேன். அவர்கள் அவ்வளவு சுலபமாக வழிக்கு முதலில் வரவில்லை. நானும் ஓயாமல் பேரம் பேசினேன். கடைசியில் 3000 பவுன்களுக்கு கதையை விலை பேசி 'செக்' பெற்றுக் கொண்டேன். இந்த விவகாரம் முடிந்தது. இனி இந்தப் பணத்தை 'சினிமா'வைப் பிடிக்காத நண்பரிடம் எப்படிச் சேர்ப்பது? அதுதான் எனது அடுத்த கவலையாக வந்து சேர்ந்தது.

புத்தக விற்பனைக் கமிஷன் என்றோ, எதிர்பாராத விதமாக வந்து சேர்ந்த ஒரு அபிமானியின் காணிக்கை யென்றோ, யாரோ சொந்தக்காரர் விட்டுப் போன சொத்தென்றோ, இந்த மூவாயிரம் பவுன்களை அவரிடம் சேர்க்க முடியாது என்று எனக்குத் தெரியும். ஏனெனில் என்றாவது ஒரு நாள் உண்மை வெளிவராமல் போகாது. இவைகளில் எதுவுமே இல்லையென்றால் இதற்கு வேறு என்னதான் வழி? பேசாமல் கொண்டு போய் அவர் மேஜையின்மீது வைத்து விட்டு வந்து விடலாமா?

எனக்கு ஒன்றும் பிடிபடவில்லை. அதற்குள் படத் தயாரிப்பையும் ஆரம்பித்து விட்டார்கள்.

''இந்தாருங்கள், சினிமாவுக்கு அதை எழுதியதற்காக கிடைத்த பணம்!'' என்று அவரிடம் நான் நீட்டினால். ''என்ன? நானா சினிமாவுக்கு அதை எழுதினேன்? நீ என்ன நினைத்துக் கொண்டாய்?'' என்ற குரல் என் காதில் நிச்சயம் விழும்! நான் யோசித்து யோசித்து நாட்களைக் கழித்து வரும்போது புரூஸ் வறுமையின் கோரப் பிடியில் சிக்கி நாளுக்கு நாள் இளைத்து-உரு மாறிக் கொண்டே வந்தார்.

பணம் இல்லாமல் என்ன நடக்கும்? கொள்கை, பணம்—இன்று இரண்டும் இரு துருவங்கள். இரண்டும் ஒன்று சேர்வது மிகவும் கஷ்டம்!

நான் அவரைக் கேட்காமல் செய்த காரியத்திற்காக அவர் என்மீது கோபித்துக் கொண்டாலும்சரி—நண்பருக்காக நான் செய்ய வேண்டிய கடமையை கவனிக்க வேண்டுமல்லவா?

ஏதோ ஒருவித தைரியத்தை வரவழைத்துக் கொண்டு, பணத்தோடு அவருடைய வீடுதிக்குப் போனேன். நாற்காலியில் சாய்ந்து புகை பிடித்துக் கொண்டிருந்தார், நண்பர். பூனை ஒன்று அவரது மடியில் விளையாடிக்கொண்டிருந்தது- வழக்கமாக பேசவேண்டியதையெல்லாம் பேசிவிட்டு,

''உங்களிடம், நான் ஒரு விஷயத்தைப்பற்றி மறைக்காமல் சொல்ல விரும்புகிறேன்,'' என்றேன்.

''என்ன விஷயம்? எதை என்னிடம் மறைத்தாய்? சொல்!''

''ஒரு கேலிச் சித்திரத்தை நீங்கள் என்னிடம் கொடுத்தீர்களே, ஞாபகம் இருக்கிறதா? ......நீக்ரோ பெண்ணிற்கும், வெள்ளையனுக்கும்பிறந்த ஒருத்தியை கதா நாயகியாக வைத்து எழுதினீர்களே...சினிமா கதை மாதிரி!''

''ஆமாம்...அதற்கென்ன இப்போது?''—நான் தாராளமாக மூச்சு விட்டுக் கொண்டேன்.

''நான் அதை விற்று விட்டேன். அந்தப் பணம் உங்களைச் சேர வேண்டியது!''

''என்னது? அதைப் போல ஒரு கதையை எவன் பிரசுரித்தான்?''

## ஏழைகளாம்!

ஒரு ஹாலிவுட் பட முதலாளியின் சிறுமி இப்படி ஒரு திரைக் கதையை எழுத ஆரம்பித்தான் :

அது ஒரு ஏழ்மையான குடும்பம். அப்பாவும் ஏழை; அம்மாவும் ஏழை; அவர்களது மூன்று குழந்தைகளும் ஏழை; அவர்கள் சமையற்காரனும் ஏழை; அவர்கள் கார் டிரைவரும் ஏழை; அவர்கள் வீட்டுத் தோட்டக்காரனும் ஏழை; அவர்கள் உண்மையிலேயே ஏழை!''

—'ஜோர்ஸ் டி பிரான்ஸ்'

''பிரசுரிக்கவில்லை. படமாக்க விற்று விட்டேன். அது ஒரு வெற்றிப் படமாக...சினிமாவாக வரப் போகிறது!''

அவர் பூனையைத் தடவிக், கொண்டிருந்தார். நான் அவசரமாக மேலே தொடர்ந்தேன்... ''உங்களிடம் நான் இதைப் பற்றி முன்பே சொல்லி இருக்க வேண்டும். ஆனால் உங்கள் மனம் இதற்கு அனுமதி அளிக்காது என்று எனக்குத் தெரியும்...உங்கள் எண்ணங்கள் மிகப் பெரியவை; கருத்து நிறைந்தவை! அப்படி இருக்கும் ஒருவரிடம் நான் எப்படி, இந்த மாதிரியான விஷயத்தைப் பற்றிப் பேச முடியும்?

நீங்கள் எழுதிய கதை இருக்கிறதே...அது மிகவும் சிறந்தது. இதோ, அதை 3000 பவுன்களுக்கு விற்ற ஒப்பந்தப் பத்திரம்-இதோ பணம்-உங்கள் ஏஜண்டாக நான் இதைச்

செய்தேன், என்று நீங்கள் நினைத்தால், எனக்கு பணத்தில் கமிஷனாக 300 பவுன்கள் வர வேண்டும். ஆனால் அதை எதிர் பார்க்கவில்லை. நண்பரே, பணம் வேண்டுமென்றால் கொள்கையைக் கொஞ்சம் விட்டுக் கொடுத்து கீழே இறங்கி வரத் தான் வேண்டும்...உயர்ந்த எண்ணங்கள் பணம் சேர உதவி புரியாது!'' என்றேன்.

''அடே கடவுளே!'' என்றார் அவர்.

''நான் சொல்வதெல்லாம் வாஸ்வந்தான் புருஸ். சினிமாவைப்போல் இப்போது அறிவொளி பரப்ப ஒரு நல்ல சாதனம் வேறெதுவும் இல்லை. உங்கள் கருத்துக்களை நீங்கள் அதன் மூலம் ஜனங்களுக்குச் சொன்னால் அவர்கள் வேண்டாமென்றா சொல்லப் போகிறார்கள்? கருத்துக் குவியல்களில் சில விஷயங்கள் ஆபாசமானவையாக இருக்கலாம்...மலிவுச் சரக்காக இருக்கலாம்! ஆனால் அதை வெளியில் சொல்லிக் கொள்ள நாம் ஏன் வெட்கப்பட வேண்டும்? வாலிப வயது சிலவற்றை விரும்புகிறது, வயோதிகம் சிலவற்றை நாடுகிறது. எதை யாருக்குத் தரவேண்டும் என்பதுதான் நமது குறிக்கோள்...வாழ்க்கை எப்போதும் இன்பமாக இருக்கும்! காலத்திற்கேற்றபடி மாறுவதுதான் உசிதம்! உடலுக்கேற்ற சட்டை போட்டுக் கொள்வதைப் போல!''—புருஸ் ஆச்சரியத்தோடு என்னைப் பார்த்தார்—நான் நிறுத்தவில்லை.

''ஜனங்களுக்கு என்னவேண்டும் என்பதை அறிந்து கொள்ளாமல் நீங்கள் காலந்தள்ளுகிறீர்கள். உங்கள் உலகம் வேறொரு திசையில் போகிறதென்றால் அதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமே இல்லை. ஜனங்களுக்கு இப்போது வீரம்-சாதம்-சோகம் ஆகியவைகளின் கூட்டுச் சரக்குதான் தேவையாக இருக்கிறது. உங்களுக்கு விருப்பம் இருந்தாலும் இல்லாவிட்டாலும் நீங்கள் அதை அவர்களுக்குக் கொடுக்கவே வேண்டும்...பணம் தானாகத் தேடிவரும், உங்களுக்குத் தெரியாதது ஏதுமில்லையே! உயர்ந்த லட்சியங்களினால் மட்டும் மனிதன் பிழைத்துவிட முடியாது. வயிற்றையும் கவனிக்கவேண்டுமல்லவா!''—நான் நிறுத்தினேன். புருஸ் எரிமலை போல வெடிப்பார் என்று எதிர்பார்த்தேன்...பூனை மடியிலிருந்து இறங்கி வெளியேறத் தயாராக இருந்தது.

''உங்களுக்குச் சினிமா என்றாலே வெறுப்பு என்று எனக்குத்தெரியும்...''-நான் சொல்லி முடிக்கவில்லை; அதற்குள் அவர்,

''உஷ்...பேசாதே! என்ன பேசுகிறாய் நீ? சினிமா...நான்தான் தினமும் இரவில் அதைப் பார்க்கப் போகிறேனே!'' என்றார் அவர். இப்போது என்னுடைய முறை:

''அட கடவுளே!'' என்று தலையில் கை வைத்தேன் நான்.

பணத்தையும், ஒப்பந்தத்தையும் அவர் கையில் திணித்துவிட்டு, முன்னால் போன பூனையைத் தொடர்ந்து நானும் வெளியேறினேன்.

○○○

# ★ முதல் மேடைப் பேச்சு ★

தலைவர்: இப்பொழுது காம்ரேட் சேத் பகவான்தாஸ் அவர்களைப் பேசும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்.

சேத்: தோழர்களே! தலைவர் அவர்கள் கட்டளைக் கிணங்க இப்பொழுது நான் பேசுவதற்காக உங்கள் முன் வந்து நிற்கிறேன். இதுதான் நான் முதன் முதலாகப் பேசும் மேடைப் பேச்சாகும். பூரியும் பரோட்டாவுமாக சாப்பிட்டு, அழகான கார்களில் சவாரி செய்து, பால்கனியில் இருந்து சினிமா பார்த்து, உல்லாச வாழ்க்கை நடத்தும் பணக்காரர்களையும், ஒரு கவளம் சோற்றுக்குக்கூட வழியில்லாமல் வாடும் ஏழைகளையும் பார்க்கும் போது என் ரத்தம் கொதிக்கிறது! (ஆரவாரம்)

சினிமாப் படங்கள் தானுகட்டும்—எப்படியிருக்கின்றன? ஆபாசமான பாட்டுகளை அந்தப் படங்களில் கேட்கிறோம். "முஜே கிசிசே ப்யார் ஹோ கயா?" (எனக்கு எதற்காகப் பிரியம் வரவேண்டும்?) என்பதெல்லாம் ஒரு பாட்டாகுமா? ஆனால் அது படத் தயாரிப்பாளர்கள் தவறல்ல. பாட்டுக்கள் கட்டும் கவிஞர்கள் தவறு. நான் எப்போதும் கவிஞர்களை வெறுப்பவன். அவர்கள் பட்டினியால் வாடுகிருர்கள்; ஆனாலும்பாடல்கள் எழுதுகிருர்கள்; அவர்கள் குழந்தைகள் பசியால் வாடுகிருர்கள்; ஆனால் கவிஞர்கள் அதைப் பற்றிக் கவலைப்படுவதேயில்லை; வீட்டிலோ மாமியார் மருமகள் சண்டை; இந்த நிலையில் கவிஞன் தற்கொலை செய்து கொள்ளவே விரும்புகிருன். மாமி, மருமகள் சண்டை ஒன்றும் புதிதல்ல; அது எப்பொழுதுமே நடைபெற்று வருகிறது. (சிரிப்பு)

பூனை பாலைக் குடித்து விடுகிறது. மாமியார் மருமகள் குடித்து விட்டதாகச் சொல்லுகிருள்; மருமகள் மாமியார் குடித்து விட்டதாகச் சொல்லுகிருள். ஆனால் பூனை நாளுக்கு நாள் கொழுத்ததுதான் கண்ட பலன். இந்தப் பூனைகளால் எவ்வளவு தொந்தரவு! கறியைத் திருடுகின்றன! பாலைக் குடித்து விடுகின்றன! ஆனால் அவைகளால் ஒரு நன்மையும் இருக்கிறது. பூனைகள் எலியைப் பிடித்துக் கொல்லுவதால், எலிகளின் எண்ணிக்கை குறைகிறது. இப்படி எலிகளின் நடமாட்டம் குறைவது நல்லதே. ஏனென்ருல், எலிகளால்தான் ப்ளேக் பரவுகிறது. ப்ளேக் என்ருல் எனக்கு ரொம்ப பயம். அது ரொம்ப மோசமானது. வியாதி

கண்டவன் உடம்பு சுகமில்லை என்று படுக்கின்றான்; உடனே செத்து விடுகிறான். இந்த மாதிரி தொத்து நோய் பரவும் சமயங்களில் டாக்டர்கள் நிறைய பணம் சம்பாதிக்கின்றனர். இம்மாதிரி சந்தர்ப்பத்தில், அவர்கள் மருந்தின் விலையை உயர்த்தி விடுகின்றனர்; மருந்து வாங்க முடியாமல் ஏழைகள் மடிகின்றனர். இப்படிப்பட்ட டாக்டர்களை சுட்டுக் கொல்ல வேண்டும். (பலத்த ஆரவாரம்)

ஆனால், காம்ரேடுகளே! அது டாக்டர்கள் தவறல்ல. அவர்கள் அதிக விலை கொடுத்து மருந்துகளை வாங்குகின்றனர். ஆகவே, அதிக விலைக்கு விற்கின்றனர். எல்லாம் கிராக்கியாக விற்பது உங்களுக்குத் தெரியாததா? கோதுமை கிராக்கி, துவரம்பருப்பு கிராக்கி, உளுத்தம் பருப்பு கிராக்கி, எல்லாம் கிராக்கி! ஆனால், காம்ரேடுகளே! என்னை நம்புங்கள். என் கடையில், எல்லாப் பொருள்களும் மலிவான விலையில் கிடைக்கும். நான் மிகக் குறைந்த லாபம் வைத்துதான் விற்கிறேன். என் கடையில் ரெண்டு சேர் கோதுமை ஒரு ரூபாய்தான்; ஒரு சேர் துவரம் பருப்பு பனிரண்டணா; ஒரு சேர் உளுத்தம் பருப்பு பதினோரணா .........

தலைவர்: (கடிகாரத்தைப் பார்த்து விட்டு) நேரமாகிவிட்டது; பேச்சை சுருக்கிக் கொள்ளுங்கள்; நீண்ட நேரம் பேசிவிட்டீர்கள்.

சேத்: (கனைத்துக் குரலை சரி செய்து கொண்டு) நேரமாகி விட்டது. ஆகவே, நான் பேச்சை சுருக்கிக் கொள்ள விரும்புகிறேன். என் கடையில் ஒவ்வொரு சாமானும் மலிவாக கிடைக்கும் என்பதை மறந்து விடாதீர்கள். என் கடையின் பெயர் ''ராம்ராஜ்ய சர்வோதய கம்பெனி''! நான் நிறைய பேசலாமென்றிருந்தேன். ஆனால் தலைவர் கட்டளைப்படி பேச்சை சீக்கிரம் முடித்துக் கொள்ளும்படி ஆகிவிட்டது. ஆனால், ஒரு வார்த்தை; நேர்மைதான் என் பிரதான கொள்கை. ஒவ்வொரு பொருளும் சுத்தமாகவும், மலிவாகவும் இருக்க வேண்டும். ஏனென்றால், அப்படியில்லாவிட்டால் நாம் புதிய சமூக ஒழுங்கை உருவாக்க முடியாது. இன்குலாப்!

(''சிந்தாபாத்'' கோஷங்கள் எழுகின்றன.)

—த. கலியபெருமாள்

(''மைமகசின்'' மார்ச்'57-லிருந்து எடுக்கப்பட்டது.)

●●●

கணவன் ஒருமாதிரியான பேர்வழி. ஒருநாள் இரவு முழுவதும் வெளியில் தங்கிவிட்டு காலையில் தள்ளாடிய படியே வீட்டுக்கு வந்தான்.

மனைவி: (ஆத்திரமாக) இப்போது எங்கே வந்தீர்கள்?

கணவன்: (சிறிதும் பரபரப்பின்றி) 'டிபன்' சாப்பிட!

—'மென் ஒன்லி'


கடவுள் எங்கே?
"கதிரவன்"

'சந்திர மண்டல யாத்திரை' என்ற நூலைப் படித்துக் கொண்டிருந்தேன். தெருக் கோடியில் உள்ள குமரன் கோயிலில் 'லட்சார்ச்சனை' வெகு விமரிசையாக நடந்து கொண்டிருந்தது.

நண்பன் முத்துவேல், கையில் ஒரு கத்தைத் தாளுடன் என் அறைக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே வந்தான்—வரவேற்றேன்.

''அது என்ன முத்துவேல்?'' என்று, அவன் கையில் வைத்திருந்த தாளைச் சுட்டிக் காட்டிக் கேட்டேன்.

''இந்தா! படித்துத்தான் பாரேன்!'' என்று கூறி அதை என்னிடம் தந்தான்.

பிரித்துப் பார்த்தேன். ''கடவுள் எங்கே?'' என்ற தலைப்போடு கூடிய சிறுகதை, அது! முத்துவேல் எழுதியிருந்தான்.

''சத்தான கருத்துக்கள்! சல சலத்தோடும் நீரோரைபோன்ற எழுத்தோட்டம்!! நாத்திகத்திற்கு ஆப்பும், ஆத்திகத்திற்கு அன்பழைப்பும் விடுக்கும் அரிய சிறுகதை! படிப்போர் இதயத்தைக் காந்தம்போல் கவர்ந்து அவர்தம் தெளிவில்லா நெஞ்சத்தில் வேதாந்தக் கருத்துக்களைப் பக்குவமாய்ப் பதிய வைக்கும் பவ்வியமான சிறுகதை, நண்பா இது!''—அவன் எழுதிய கதையின் நேர்த்தியைப்பற்றி அவனே சொல்லிக் கொண்டிருந்தான்.

அமைதியாகக் கேட்டுக் கொண்டிருர்த நான், ''சரி, முத்து! கதையின் கருப் பொருள் என்ன?'' என்று கேட்டேன்.

''அதுவா? நாத்திகப் பயல் ஒருவன், 'கடவுளாவது, கத்தரிக்காயாவது,' என்று தலைக்கொழுப்புடன் கூறிக்கொண்டு, தம்பிரான்கள் ஏற்பாடு செய்த 'தயாபரர் மகா சபை'க்கூட்டத்திலேகூடத் தாறுமாருகக் கேள்வி கேட்டுவிட்டு, பதிலாக அவர்களிடம் உதையும் பெற்றுக்கொண்டு திரிகிருன். அவனையே முழுதும் நம்பி வாழும் அவனுடைய ஆசைக் காதலியும் எவ்வளவோகூறிப்பார்த்துவிட்டாள். கேட்கவில்லை. இறுதியில் அவன்...''

''கொடிய வியாதியில் சிக்கிக் கடவுள் பெருமையை உணருகிருன். அவ்வளவுதானே?''—என்றேன், அலட்சியமாக!

''ஆமாம்!...அப்படித்தான்!... கதை எப்படி?''—என்று ஆவலோடு கேட்டான்!

''மிக மிக மட்டம்!'' என்றேன், நான்...

அப்படியே அசந்து உட்கார்ந்துவிட்டான். பின் படபடப்போடு என்னைப் பார்த்துப் பேசினுன்...

''என்ன தவறை இதில் கண்டு பிடித்துவிட்டாய்?''

''அமைதியாகக் கேள் முத்து! இதுபோன்ற கதைகள் எழுதுவது சமுதாயத்தில் நிலவும் போலிப் பக்திக்கு நீர் ஊற்றுகின்ற திருப்பணியே தவிர, உண்மையான கலைப்பணியல்ல!''—என்றேன்.

முத்துவேலின், இள மீசை துடி துடித்தது. கோபக் கனல் பறக்க என்னைப் பார்த்தான்.

''அப்படியானுல், நீயும் ஒரு நாத்திகனென்றே நான் என்னுகிறேன்!''—வார்த்தைகள் அவ

னுடைய வெதும்பிய உள்ளத்திலிருந்து வெடித்துச் சிதறின.

"முத்து, மீண்டும் சொல்கிறேன்! ஆத்திரப்படாதே! செம்பாலும், கல்லாலும் செய்த சிலைகளுக்குச் சக்தி உண்டு! அச் சிலைகளுக்கு ஊறுதேட நினைப்பவர்களை ஊனமாக்கிவிடுவார், உலகநாதன். இதுதானே, உன் எண்ணம்?"

"ஆம்!"

"அச்சிலைகளுக்கு சக்தியில்லை என்பதை உன் கண் முன்னாலேயே நிரூபித்துக் காட்டிவிட்டால்......?" என்றேன், உறுதியோடு!...

வியப்போடும், வேதனையோடும், சற்று கோபத்தோடும் என்னைப் பார்த்தான். என்ன பேசுவதென்றே தெரியாமல் 'சிலை'யாகச் சமைந்திருந்தான் சற்று நேரம்!

பிறகு, "நீ என்னதான் சொல்கிறாய்?" என்றேன்.

"மதவெறியும், பக்தி மனப்பான்மையும், சமுதாயத்தை ஆழ்ந்து நோக்கும் தன்மையும் இலலாத காரணத்தினால்தான், நீ, இதுபோன்ற கதைகளை எழுதிக்கொண்டிருக்கிறாய். முத்து, இதோ ... நான்காண்டுகளுக்கு முன் நம் ஊரிலே நடந்த நிகழ்ச்சி ஒன்றைக் குறிப்பெடுத்து வைத்துள்ளேன். அதைப்படி; பிறகு கூறு "கடவுள் எங்கே?" என்று! இது, ஏதோ போட்டிக் கதை என்று எண்ணிவிடாதே! உனக்கு விளக்கமளிக்கவே இதைப் படி என்று கூறுகிறேன்," என்று சொல்லி, நான் காண்டுகளுக்கு முன்னால் எழுதிய குறிப்பைத் தந்தேன். நடந்த நிகழ்ச்சியோடு ஒப்பிட்டு அதனைப் படித்தான்:

★

"பைத்தியக்காரன்!"—அதோ, வீதியிலே உலாவிக் கொண்டிருக்கிற அவனை உலகம் இன்று அப்படித்தான் அழைக்கிறது!

ஆனால், அவனுக்குப் பெற்றோர் இட்ட பெயரோ, கன்னையன்! இரத்தினம், என்றோர் தம்பியும் அவனுக்கு!

தங்கம் — அக்குடும்பத்தின் விளக்கு; கன்னையனின் மனைவி! கன்னையன், மதத்திலே, சாஸ்திரத்திலே கூறப்பட்டிருக்கும் ஆச்சார, அனுஷ்டானங்களிலே ஆழ்ந்த நம்பிக்கைக் கொண்டவன்! ஆனால், இளையவனோ, அவனுக்கு நேர் மாறானவன்! அறிவியக்கத்தைச் சேர்ந்தவன்!

எல்லோரிடமும், இனிக்க இனிக்க—புன்னகை தவழப் பேசுவான். புராணங்களிலே உள்ள புளுகு மூட்டைகளைப் பாமரரும் அறிந்து கொள்ளத் தக்க வகையிலே விளக்குவான். அவர்களிடம் பகுத்தறிவை வளர்க்கப் பலவகையிலும் உழைத்தான்!

'நல்ல செய்கைக்கு நாலிடை யூறு வரும்' என்பது முதுமொழியன்றோ? ஆகவே, கைமாறு கருதாது அவனாற்றிய தொண்டு, ஊரிலே பல பகைவர்களை உருவாக்கியது. அவர்களிலே தலை சிறந்தவர்தான், தர்மலிங்கம்பிள்ளை!

தர்மலிங்கம்பிள்ளை, அச்சிற்றூரிலேயே ஒரு பெரும் புள்ளி! பணம் படைத்தோர் எல்லோருமே— செல்வாக்குள்ளவர்கள் அனைவருமே—ஆளும் கட்சிக்காரர்களாகவும், ஆழ்ந்த ஆத்திக வாதியாகவும் மட்டுமே இருக்கவேண்டும் என்ற தவறான முடிவில் இன்னும் இருக்

கின்ற செல்வச் சீமான்களில், அவரும் ஒருவர்!

அச் சிற்றூருக்கு அவர்தான் தலைவர்; அவர் இட்டதுதான் சட்டம். மறுப்போர் அவ் வூரையே விட்டு வெளியே சென்றுவிட வேண்டியது தான்!

கழகப் பொதுக் கூட்டம் ஒன்று, இரத்தினம் தலைமையில் நடக்க ஏற்பாடாகி இருந்தது. கூட்டம் நடக்க இருந்த முதல் நாள் அதற்கான வேலைகளைத் தோழர்களோடு கவனித்துக் கொண்டிருந்தான்.

அப்போது...'' பெரிய எஜமான் உங்களை அழைத்துக் கொண்டு வரச்சொன்னுங்க,'' என்று ஒரு ஆள் வந்து கூப்பிட்டான்!

தர்மலிங்கத்தின் முன்போய் நின்றான், இரத்தினம்!

''இரத்தினம்! ஏதோ கழகக் கூட்டம் போடுகிறயாமே... நாளைக்கு?'' தர்மலிங்கம் பேச்சைத் துவக்கினர்.

''ஆமாங்க!...''

''ஏண்டாப்பா அந்த வேலை உனக்கு! ஆஸ்திகக் கோட்டையின்னு பேர் எடுத்த இந்த ஊரிலே நாஸ்திக வாடையா வீசச் செய்யிறே...என்ன போ; இது எனக்குச் சற்றும் பிடிக்கவில்லை...இதோ பார்! கூட்டத்தை நீ நாளைக்கு நடத்தவே கூடாது...ஆமாம்... போ!...'' ஆறுதலாகப் பேசுவதைப் போல ஆரம்பித்து, ஆத்திரத்தைக் கொட்டினர்!

''கூட்டம் நடத்துவதால் என்னகெடுதலுங்க? பிரளயமா ஏற்பட்டுப் போயிடும்? நாளைக்கு நான் கூட்டம் போடுறேன் ...நீங்களும் வந்து கேளுங்க... அவர்கள் சொல்லுவதிலே ஏதாவது தவறு இருந்தா அதை அங்கேயே எல்லோர் முன்னிலேயே எடுத்துக் காட்டுங்க... ஒத்துக்கொள்கிறேம். அல்லது நாளையோடு உலகமா முடிஞ்சு விடும்? நாளை மறுநாளே, உங்கள் கட்சிக்காரர் ஒருவரை அழைத்துக் கூட்டம் போடுங்க ...நான் வேண்டாமென்று சொல்லவில்லையே!''—பேச்சை முடிக்கவில்லை இரத்தினம்.

''இரத்தினம்! உன்னை உபதேசம் செய்யச் சொல்ல வரவில்லை! உன் உபதேசமும் எனக்குத் தேவை இல்லை...நாளைக்கு நீ கட்டாயம் கூட்டம் போடவேக் கூடாது...இது என் உத்திரவு...மீறினல்... அதற்குமேல் நான் சொல்ல வேண்டியது இல்லை...நடப்பதை நீயே பார்த்துக்கொள்ளலாம்...போ! போ!!''--இறைந்து கத்தினர் தர்மலிங்கம்.

வீடு திரும்பினன்.

''தம்பி!''—தங்கம் அழைத்தாள்!

''ஏன், அண்ணி?''

''நம்ப மொதலாளி...நீ நாளைக்குப் போடுற கூட்டத்தை நடத்தக் கூடாதுன்னு உங்க அண்ணன்கிட்டே சொல்லி அனுப்பிச்சிருக்காரு. ஏன் தம்பி; கூட்டம் போட்டா இவருக்கென்னவாம்?...''—வியப்போடு கேட்டாள், தங்கம்.

''நாலு காசு கையிலே உள்ளவங்களெல்லாம் தன்னை ஒரு பணக்காரன்னு சொல்லிகிட்டு, ஊருக்கு தானே அதிகாரிங்கிற எண்ணத்திலே எது வேண்டுமானுலும் செய்யலாமுன்னு நினைச்சுகிட்டிருக்காங்க, அண்ணி!''

"தம்பி! இந்த தர்மலிங்கம் பிள்ளை எப்படிப்பட்டவர்னு நம்ம ஊர்ப் பெண்களைக் கேட்டுப் பாரு, தெரியும்!..."

'ஆமாம், அண்ணி! அப்படிப் பட்டவர்கள்தான் தன்னை நல்லவர்களாக விளம்பரப்படுத்திக் கொள்வதற்குப் பணத்தையும், போலி பக்தியையும் கருவியாகக்கையாளுகிருர்கள்''—என்று இரத்தினம் சொல்லி வாய் மூடுவதற்குள், கன்னையனும் அங்கு வந்து விட்டான்!

"இரத்தினம்! சொல்வதைக் கேள்...நமக்கேன் பெரிய இடத்துப் பொல்லாப்பு?...இப்பொழுது மூன்ரும் முறையாக அழைத்து எச்சரித்திருக்கிருர், என்னை! நீ அவர் சொல்லையும் மீறி கூட்டம் நடத்துவதாக இருந்தால் நாளையே நானும் தங்கத்தோடு அவருக்குச்சொந்தமான இந்த வீட்டைக் காலி செய்துவிட்டு வெளியே கிளம்பிவிட வேண்டுமாம்... என்ன சொல்கிருய்?" என்ருன் கன்னையன்.

"ஆகா! எவ்வளவு தாராள மனசு! கீதை படிக்கிற நெஞ்சமல்லவா...அது அப்படித்தான் பேசும்...அண்ணு! அவர் எது வேண்டுமானுலும் சொல்லட்டும்; அல்லது செய்யட்டும்... நான் மட்டும் கூட்டத்தை நிறுத்த முடியாது...இது உறுதியண்ணு...உறுதி!"— தெளிவோடு இப்படிக் கூறிவிட்டுச் சென்றுவிட்டான் இரத்தினம்.

கன்னையன் சிந்தனையில் ஆழ்ந்தான்! இரத்தினத்தின்மீது, அவனுக்கு அளவு கடந்த

## ஒரு தினசரி!

'நியூயார்க் டைம்ஸ்' ஒரு தினசரிப் பத்திரிகை. அந்த ஸ்தாபனம் 14 மாடிக் கட்டிடம் ஒன்றில் இருக்கிறது. அதில் 4000 பேருக்கு மேல் பணியாற்றுகின்றனர். தினந்தோறும் தந்தி, தபால், டெலிபோன், ரேடியோ மூலம் 10 லட்சம் சொற்களை கிரகித்துக் கொண்டு அவற்றைச் சுருக்கி. 1.45.000 சொற்களை அச்சிடுகின்றனர். நியூயார்க் நகரில் மட்டும் 150 நிருபர்கள் செய்தி திரட்டுகின்றனராம். செய்திகளுக்கு விளக்கமாகத் தலைப்பு எழுதவே பல உதவியாசிரியர்கள் வேலைக்கு இருக்கிருர்கள் ஒரே சமயத்தில் 16 பக்கங்களை, மணிக்கு 4,00 000 பிரதிகள் அச்சிடும் எந்திரங்கள் அங்கு உள்ளன. அப் பத்திரிகையின் ஒரு சாதாரணப் பிரதி 48 முதல் 64 பக்கம் வரை இருக்கும். ஞாயிறு மலரோ 360 பக்கங்கள்வரை கொண்டிருக்கும்!

—'பாரதி' (ஏப்ரல்-'57)

கோபம் எழுந்தது. கவிழ்ந்த தலையை நிமிர்த்தினான்! எதிரிலே இருந்த சுவறில் ஊர்ந்து சென்றபூச்சியை 'லெடு'க்கென்று பிடித்தது ஒரு பல்லி!

வீட்டைவிட்டு, வீதிக்கு வந்தான் கன்னையன்! எதிரே ஒரு ஆள் ஓடிவந்து, "உங்களை பெரிய எஜமான் அழைத்துக் கொண்டு வரச்சொன்னாங்க," என்று குறிப்பிட்டான்!

கன்னையன், நேரே தர்மலிங்கம் வீட்டை அடைந்தான்! இருவரும், கொஞ்ச நேரம் இரகசியமாகப் பேசினர். மகிழ்ச்சி தாண்டவமாடியது, தர்மலிங்கம் முகத்தில்! கலவரம் குடியேறியது கன்னையன் கண்களில்!

ஆயிரம் ரூபாய் நோட்டு ஒன்று, தர்மலிங்கத்திடமிருந்து கன்னையன் கைக்கு மாறியது. மற்றுமொரு காகிதப் பொட்டலத்தையும் தர்மலிங்கம் தந்தார்! மிரட்சியோடு, நடுங்கும் கரங்களால் அதை வாங்கினான் அவன். இதயம் வேகமாக துடித்தது!

ஆஸ்திக வளர்ச்சிக்காக தான் செய்ய இருக்கும் அருஞ்செயலை (!) எண்ணினான். இன்ப ரேகைகள், அவன் முகத்தில் படிந்தன.

"ஆயிரம் ரூபாய்!... என்ன இருந்தாலும் நம்ப முதலாளி மனசு தங்கமான மனசுதான்!"—பணத்தைக் கண்டதும் தங்கமும் இப்படித்தான் பேசினாள்.

ஆனால், அந்த ஆயிரம் ரூபாய் உள்ளடக்கிக் கொண்டிருக்கிற பயங்கர இரகசியத்தை மட்டும் அவளால் அப்போது அறிந்து கொள்ள முடியவில்லை!

அன்று இரவு, உணவை முடித்துக்கொண்டு, மறுநாள் கூட்டத்தில் கலவரம் ஏற்படாமல் பாதுகாக்க, போலீசிடம் சொல்லிவிட்டு வரப் புறப்பட்டான், இரத்தினம்!

நடு இரவு. வானத்தில் நட்சத்திரப் பூக்கள் மலர்ந்திருந்தன. நிம்மதியில்லாமல் படுக்கையிலிருந்து எழுந்து உட்கார்ந்தான் கன்னையன்! அருகிலே, தங்கம் அமைதியோடு தூங்கிக்கொண்டிருந்தாள்!

பக்கத்திலே உள்ள இலுப்பைத் தோப்பிலிருந்து, ஆந்தைகள் பயங்கரமாகக் கத்தின. தெரு நாய்கள் எங்கோ ஒன்றிரண்டு ஊளையிட்டுக்கொண்டிருந்தன! என்ன கவலையோ-எதை நினைத்து அழுதனவோ-யார் அறிவர்?

"பட, பட" வென்று கதவு இடிக்கப்படும் ஒலி கேட்டு எழுந்து சென்று கதவைத் திறந்தான். மேல் மூச்சு, கீழ் மூச்சு வாங்க, எதிரே ஒருவன் நின்றுகொண்டிருந்தான்.

"ஐயா...உங்க...தம்பி...இரத்தினம்..."-விட்டு விட்டுப் பேசினான், அவன்!

"என்ன நேர்ந்தது இரத்தினத்திற்கு?"-கன்னையன் உதடுகள் இச்சொற்களை உதிர்த்தன. உள்ளமோ 'அதை' எதிர்பார்த்தது போல், அமைதியாக இருந்தது.

"நம்ப நகரத்துக்குப் போற பாதையிலே, மைல் கல்லுக்கிட்டே போகும்போது...இரத்தம், இரத்தமா வாந்தி எடுத்ததுங்க...தூக்கிக்கிட்டு ஆஸ்பத்திரிக்குப் போறதுக்குள்ளேயே...இறந்து...போயிடுச்சுங்க...நம்ப முனியனும், மாரியும் தூக்கிட்டு வர்ராங்க

## 'சூடான' பேச்சு!

பனியும் குளிரும் மிகுந்த ஆர்க்டிக் வட்டத்தில் துணிந்து ஆராய்ச்சி செய்யப் போயிருந்த ஒரு கோஷ்டியின் தலைவர் நண்பர்களுடன் பேசிக் கொண்டிருந்தார்:

''ஒரு சமயம் பனி தாங்க முடியவில்லை; நாங்கள் எல்லாம் எங்கே உறைந்து; விறைத்துப் போய் விடுவோமோ என்று பயந்து விட்டோம்!''

''பிறகு எப்படித் தப்பினீர்கள்?''—ஆர்வ மிகுதியால் நண்பர்களில் ஒருவர் கேட்டார்.

''ஓ, அதுவா? உடனே நாங்கள் தீப்பொறி கக்கும் ஒரு விவாதத்தை ஆரம்பித்தோம்; பனி உடனே உருகிவிட்டது!''—எப்படிப் பதில்?

—'க்விப்ஸ் அண்ட் குவிஸ்'

ஐயா...''-இரத்தினத்திற்கு ஏற்பட்ட நிலையை விளக்குகிறான், அந்த ஆள்!

''ஐயோ, தம்பி! இறந்துவிட்டாயா? என் செல்வம்-என் இரத்தினம் கொள்ளையடிக்கப் பட்டதா? இனி என்றைக்கடா உன்னைக் காண்பேன்?...''-அவளையுமறியாது அவன் வாய் புலம்பியது. வெளியே ஓடினான்! தங்கம் திடுக்கிட்டு எழுந்து, செய்தியறிந்து, 'கோ' வெனக் கதறிக் கொண்டு அவனைப் பின் தொடர்ந்தாள்...

பிணம், வீட்டிற்கு வந்தது. இருள் கலந்தது. இரத்தினத்தின் சாவு, ஊர் முழுவதும் எதிரொலித்தது!

''கேட்டியா, அபிராமி! நம்ம தங்கத்தோட கொழுந்திஞரை, அந்த மைல் கல் முனி அடிச்சிட்டுதாம்! பாவம்...இரதம் இரத்தமாகக் கக்கி செத்து பொயிட்டாராம்!...''

ஆற்றங்கரை, கிணற்றடி, மற்றும் பெண்கள் சந்திக்கின்ற எல்லாப் பகுதிகளிலும் இதே பேச்சாக இருந்தது. பொதுவாக எல்லோரும் இதை உண்மை என்றே நம்பினர்.

ஆனால், அந்தோ! இரத்தினத்தை அடித்து வீழ்த்தியது மைல் கல் முனியல்ல; தர்மலிங்கம் பணம் என்பது யாருக்கும் தெரியாது—கன்னையனையும், அவரையும் தவிர!

மாலை, நான்கு மணி...இரத்தினம் நடத்தும் கழக ஊர்வலத்தைக் காணவேண்டிய அவ்வூர் மக்கள், இரத்தினத்தின் பிண ஊர்வலத்தைத்தான் கண்டார்கள்! தலைமை வகிக்க வேண்டிய அந்தச் செம்மல், தணலிலே குளித்துக்கொண்டிருந்தான்! பொதுக் கூட்டத்திற்குப் பதில் அனுதாபக் கூட்டம் நடந்தது!

அன்று இரவு...அமைதியின்றி அலைந்துகொண்டிருந்தான் கன்னையன். எதிர் வீட்டுத் திண்ணையிலே விளக்கு எரிந்து கொண்டிருந்தது.

அதனருகே குட்டிகளோடு படுத்திருந்த பூனை, தன் சிறிய நாக்கினுல் குட்டிகளைத் தடவிக் கொடுத்துக்கொண்டிருந்தது!

ஏதோ ஒரு உணர்ச்சி-ஒரு பாசம்-அவனது இதயத்தின் அடித்தளத்திலிருந்து எழுந்து அவனை அலக்கழித்துக்கொண்டிருந்தது! வீட்டினுள் நுழைந்து, பாயிலே படுத்தான்... யாரோ சம்மட்டியால் அவன் மண்டையிலே தாக்கியது போன்ற உணர்ச்சி ஏற்பட்டது...எழுந்து உட்கார்ந்தான்......

"இல்லை...இல்லை...நான் விஷமிட்டுக் கொல்லவில்லை... தம்பி...உன்னை நான்...கொல்லவில்லையடா ... தர்மலிங்கம் தான்...ஆ!...அதோ... போலீஸ் கோர்ட்...ஜெயில்... தூக்கு... ஐயய்யோ..."—உள்ளத்தின் தொடர்பின்றி உதடுகள், இவ் வார்த்தைகளைக் கொட்டிக் கொண்டிருந்தன...

தங்கம், ஒரு மூலையிலே சுருண்டு கிடந்தாள்!...

திடீரென்று படுக்கையை விட்டு எழுந்தான்...விளக்கைக் கொளுத்திஞன்...தன் பெட்டியைத் திறந்தான்...அதிலிருந்த ஒரு பச்சைத் தாளை இழுத்தான்...எந்த நோட்டைத் தன் தம்பியின் உயிரைவிட மேலாக மதித்தானே...அதே நோட்டு இப்போது அவனது அன்பு, ஆசை, பண்பு, பாசம், பற்று எல்லாவற்றையும் சுக்கல் சுக்கலாக நொறுக்கி எரிந்த கொலைக் கருவியாக அவனுக்குத் தோன்றியது...தங்கத்திற்கு, அவன் செய்கை வியப்பாகவே இருந்தது. கையிலே இருந்த விளக்கில், அந்த நோட்டைப் பிடித்தான்...

"அத்தான்," என்று அலறினுள், தங்கம்!

"பொறு தங்கம்...நம் வாழ்வின் ஒளிச் சுடரை அணைத்த இந்த நோட்டை, இன்று நான் அழிக்கப் போகிறேன்... கொத்திய பாம்பைக் கொன்று புதைக்கப் போகிறேன்...அஹ்ஹஹ்ஹா..."-பயங்கரம் நிழலிடச் சிரித்தான்!

நோட்டு, கரித்தூளாகத் தன்னை உருமாற்றிக்கொண்டு, கீழே கிடந்தது!

கையிலேயிருந்த கண்ணுடி விளக்கை ஓங்கி அடித்தான், சுவற்றில்! விளக்கு நொறுங்கி பொடிப்பொடியாகி விட்டது! அவள் சிந்தனையும், அதே நிலைக்குள்ளாகியது!

வெளியிலே ஓடிஞன்!...ஆந்தையின் அலறலோ, நரியின் ஊளையோ, இப்போது அவனுக்கு அச்சத்தைமூட்டவில்லை. மைல் கல்லுக் கருகில் உள்ள சத்திரமே, அன்றிலிருந்து இன்றுவரை அவனுக்கு உறைவிடம்!

இரத்தினத்தின் பரிதாப முடிவு—கன்னையனின் மதி குழம்பிய நிலை—வறுமையின் கோரப் பிடி-இந்தச் சுழலிலே சிக்கிய தங்கம், விழியை மூடி விட்டாள், மூன்றே மாதத்தில்!

இன்று, தர்மலிங்கம் பிள்ளை ஒரு எம். எல். ஏ.! கூட்டம் போட்டு, வெற்றிவிழா கொண்டாடுகிற நேரத்திலே, என்ன பேசுகிருர், கவனியுங்கள்:

"அன்பு மகா ஜனங்களே! கடவுளை மறக்காதீர்கள்! 'கடவுள் எங்கே?' என்று கேட்ட கயவன் ஒருவனை நமது மைல் கல் முனீஸ்வரன்நான்காண்டுகளுக்கு முன்னுல் அடித்து வீழ்த்தியதை நீங்கள் அதற்

குள் மறந்திருக்க முடியாது. அவனது குடும்பம் - அண்ணன், அண்ணி அனைவருமே நிலைகுலைந்து கெட்டதும் உங்களுக்குத் தெரியும்! நல்லவர்களுக்கு கடவுள் உதவி எப்போதும் இருக்கு மென்பதற்கு நான் 'எலக்ஷ'னில் ஜெயித்ததே ஓர் அத்தாட்சியாகும்...'' என்று, பேசிக் கொண்டே இருக்கும்போது, திடீரென்று கூட்டத்தில் குழப்பமேற்பட்டது.

''கடவுள் எங்கே?...ஏனய்யா தர்மலிங்கம்...தம்பி கேட்ட அதே கேள்வியை நானும் கேட்கிறேன்...பதில் சொல்...பணத்தைக் கொடுத்து படுகொலை செய்த படுபாவி!...பதில் சொல்!''—எங்கிருந்தோ கத்திக் கொண்டே கூட்டத்திற்குள் ஓடி வந்தான், கன்னையன்-அல்ல, அல்ல—பைத்தியக்காரன்! அவன் சொல்லுக்கு இன்று மக்கள் மன்றத்திலே மதிப்பேது?

மக்கள் அவனை இழுத்துக் கூட்டத்தை விட்டு வெளியேற்றினர்...

தர்மலிங்கம் பிள்ளை பேச்சைத் தொடங்கினார்...

''இப்போது நீங்கள் கண்டீர்கள் ஒரு பைத்தியக்காரனை... கடவுளை மறந்தால், இப்படித்தான் நீங்களும் கதி கெட்டு அலைய நேரிடும்...''—அந்த அறிவு மேதை (!) அறிவுரை வழங்கிக்கொண்டிருக்கிறது...

ஆனால், அந்த இதயமற்ற ஜீவன் அறியுமா, 'கடவுள் எங்கே?' என்று அந்தப் பைத்தியக்காரன் — கன்னையன் — எழுப்பிய ஒலியில் ஒளிந்து கொண்டிருக்கும் பொருள் பொதிந்த உண்மை எதுவென்று!

★

குறிப்பிலே சேர்க்கப்பட்டிருந்த பின் குறிப்பையும், சேர்த்துப் படித்து முடித்த பிறகு, அதை மேசைமீது வைத்துவிட்டு, என்னை நோக்கினான், முத்துவேல்! அவன்முகம் வெளுத்திருந்தது! ஆனால் கண்களில் மட்டும், ஒரு புத்தொளி வீசியது!

''என்ன முத்து...படித்துவிட்டாயா?''-என்றேன்;

''படித்தேன்...பயனும் அடைந்தேன்,'' என்றுகூறிவிட்டு, தான் கொண்டு வந்திருந்த கையெழுத்துப் பிரதியைக் கிழித்துக் குப்பைக் கூடையில் வீசினான்!

''முத்து! 'கடவுள் எங்கே?'-என்ற வீணன ஆராய்ச்சியில் இறங்காதே! அது, குழப்பத்திற்கே வித்திடும். அடிமைச் சமுதாயத்திலே கிடந்து உழலும் எண்ணற்ற மக்களின் வாழ்க்கைச் சிக்கலைக் கருப்பொருளாக வைத்து எழுது!... 'வறுமை' 'விதி'—இவற்றின் பிறப்பிடத்தையும், அவற்றைத் தொலைக்கும் வழியையும் அழகு தமிழில் வடித்துக் காட்டு...'' என்றேன்.

''நல்லது நண்பா!...என் வாழ்க்கையில் இன்று ஒரு புதிய அனுபவம் பெற்றேன்! இதை நான் என்றுமே மறக்க மாட்டேன்...இது உறுதி நண்பா...உறுதி!... நான் வருகிறேன்...'' என்று கூறி விடை பெற்றான், முத்து!

○○○



# உடல் மெலிவதால்

காய்ச்சல் சுகமான மறு நாள் டாக்டரிடத்தில் நோயாளி ஒரு கேள்வி கேட்டாராம். ''இரண்டு நாள் போகட்டும்,'' என்று டாக்டர் பதில் சொன்னார். மறுபடி மருந்து வாங்கத் தேவைப்பட வில்லை. மூன்று மாதம் சென்ற பிறகு அதே நோயாளி மறுபடியும் டாக்டரிடம் வந்தார். எதற்கென்று தெரியுமா? ''இனி குளிக்கலாமா?'' என்று கேட்டு விட்டுப் போகத்தான். எப்படி இருக்கிறது யோசனை?

அதிகமாக உடல் பருத்து விடுவதால் உண்டாகும் ஆபத்துகளைப் பற்றி சில நாட்களாகவே டாக்டர்கள் விரிவாகச் சொல்லி வருகிறார்கள். அதை யெல்லாம் வாசித்து விட்டுத்தானோ என்னவோ, சிலர், அதிலும் பெண்கள், உடல் நிறையைக் குறைப்பதற்கு என்னென்ன செய்யலாம் என்று நினைத்து, முன் இருக்காத விரதங்களுக்கெல்லாம் சேர்த்து ஒரு வேளை, இருவேளை என்று வருடக் கணக்காகக் கூட உபவாசங்களை மேற்கொண்டு வருகிறார்கள். ''டீக்காக'' இருக்க வேண்டும் என்ற இந்த நாகரீக காலத்து வியாதி அதிகமாகி வருகிறது. உடல் மெலிந்தவர்கள் இன்னமும் மெலிவாக இருக்க வேண்டும் என்று சத்துள்ள, கொழுப்புள்ள உணவுகளாகிய பால் முதலியவற்றை வேண்டவே வேண்டாமென்று வெறுத்து, நிறையைக் குறைக்கப் பிரயாசைப் படுவதுதான் மோசம்.

உடல் பருத்து, அளவுக்கு மிஞ்சி கனத்துப் போகாமல் இருப்பது நன்மை என்பது முற்றும் உண்மையே. உடல் பருமன் உறுப்புக்களை மிதமிஞ்சிய வேலை செய்ய வைக்கிறது என்ற காரணத்தினாலேதான், உடல் பருத்தவர்களைவிட உடல் சிறுத்தவர்களைத்தான் இரத்த சோகை, இருதய வியாதிகள், பித்தீரல் கோளாறுகள் அணுகுவதில்லை. ஆயுளும் அவர்களை விட இவர்களுக்குத்தான் அதிகம். ஆனால் உடல் நிறை குறைவதினால் உண்டாகும் கெடுதிகள் இன்னின்ன வென்று நாம் தெரிந்து கொண்டால் அதற்குத் தக்கதாக உடல் நிறையை அவ்வப்பொழுது சரி செய்து கொள்ளலாம் அல்லவா?

உடலில் உள்ள உயிரணுக்களில் கொழுப்பு உயிரணுக்கள் என்னும் ஒரு வகை தேக முழுவதிலும் பரவியிருந்து, உடலுக்

# வரும் ஆபத்து!



குத் தேவையான பாதுகாப்பு அளிக்கின்றன. உடல் அளவுக்கு மிஞ்சி மெலிந்தால், இவை உடலில் இல்லாது போகும். தசைகளால் ஆகிய உடம்பிலே கொஞ்சம்கூட கொழுப்பு இல்லாதிருந்தால் எப்படி? தசைகள் தங்கள் வேலையைச் சரிவர செய்வதற்குக் கொழுப்பு தேவையாயிருக்கிறது.

## கொழுப்பு உயிரணுக்கள்

இவை உடலின் சீதோஷ்ண நிலை சரியாக இருக்க உதவுகின்றன. ரொம்பவும் மெலிந்தவர்களுடைய பாதங்கள் அதிகமாகக் குளிரும்; நடுங்கும். இலகுவாகத் தொற்று வியாதிகள் தொற்ற, சுவாச ரோகங்கள் பீடிக்க, ஜலதோஷமுண்டாக மெலிந்தவுடல் ஏதுவானது.

அது மாத்திரமல்ல; அடிக்கடி நீங்கள் கோபித்துக் கொள்வதற்கும் முறைத்துக் கொள்வதற்கும் அதை ஒரு காரணமாகச் சொல்லலாம். உங்கள் நரம்புகள் இலகுவில் களைப்படைந்து விடுகின்றன. உடம்பு மிகவும் மெலிந்து சக்தியின்றி இருப்பதால் நீண்ட காலமாகவே நரம்புகளில் சோர்வும் தளர்வும் உண்டாகி, நரம்பு வியாதிகளினால் கஷ்டப்படுகிறவர்களும் உண்டு.

இந்த உயிரணுக்களின் மற்றொரு வகை மெத்தைபோன்று அமைந்து, அவயவங்கள் உடலோடு சேருமிடத்தில் தங்கி, அவை ஒன்றை ஒன்று உறுத்தாதபடி அவற்றின் இணைப்பை மென்மைப் படுத்துவது. ஆகவே இந்த உயிரணுக்கள் போதுமானபடி இராவிட்டால் குடல் தன் இடத்தை விட்டு நகருவது கூடும். உடல் மிதமிஞ்சி மெலிந்து வரும்போது, இப்படி குடல் புரளுவது சாத்தியம். இது மிகவும் ஆபத்து.

உங்கள் வயதின் எண்ணிக்கை, உயரம், இவைகளுக்குத் தக்கதாக உடல் இருக்க வேண்டிய நிறைக்கு சுமார் ஐந்து பவுண்டு குறைவாக இருந்தால் கவலைப்பட வேண்டாம்; அதற்கும் மிகவும் குறைவாக இருந்தால் உடல் நிறை அதிகரிக்கும்படிச் செய்ய வேண்டும். குறிப்பாக, போதுமான காரணங்கள் இல்லாமல் திடீரென உடல் நிறை குறையுமானால் டாக்டரிடம் காட்டி பூரணமான வைத்திய பரிசோதனை செய்து கொள்ள வேண்டும்.

நல்ல ஆரோக்கியமான, சதைப் பிடிப்புள்ளதான தேகத்தை ஆக்குவது மந்திரத்தினால் ஆகிற காரியமல்ல. மிதமிஞ்சி

சாப்பிடுவதினாலும் அவ்வாறு ஆகிவிடாது. உணவைத் தேர்ந்து எடுத்து உண்ணும் பழக்கமே, நல்லுணவே, அதற்குரிய திறவுகோல்.

## முதல் தேவை

இந்தக் கட்டுரையை முழுவதும் வாசிக்கும் முன்பாக, கொழுப்பு நிறைந்த உணவாக சாப்பிடுவதே தங்கள் தேவை என்று பலர் நினைத்துக் கொண்டு இருந்திருப்பார்கள். நமக்கு கொழுப்புள்ள உணவுகள் மட்டும் அல்ல; உடலைப் பாதுகாக்கும் உணவு வகைகளும் தேவையாகும். இந்த உணவுப் பொருள்கள் வைடமின்கள், தாதுப் பொருட்கள் நிறைந்தனவாக இருக்க வேண்டும். உடல் நிறை குறைவதை இது சமன் செய்யும். ஒவ்வொரு நாளும் சில புதிய பழங்கள், சாலட், இரு கோப்பைகள் நிறைய காய்கறிகள், ஒரு பைந்து பால், பருப்பு, தானிய வகைகள், இவற்றுடன் கோதுமை ரொட்டி ஒன்று, இவை போக வழக்கமாக நீங்கள் உபயோகிக்கும் அரிசிச் சாதமோ, சோளமோ, சப்பாத்தியோ இவற்றைச் சேர்த்து சாப்பிட்டு வாருங்கள்.

உடல் நிறை அதிகரிப்பது கொழுப்புள்ள உணவுகளாலும், மாப்பொருள், சர்க்கரை உபயோகிப்பதினாலுமே. உணவு வகைகள் மூலம் ஆரோக்கியமும் மிருதுவான தசையும் நாம் பெற வேண்டுமானால் மாப்பொருள்கள், சர்க்கரை இவற்றைச் சிறிது குறைத்தும், தாதுப் பொருள்கள், வைடமின்களை உணவுடன் தாராளமாகச் சேர்த்தும் உபயோகப்படுத்தி வரவேண்டும். வைடமின்கள் அதிகமாயுள்ள வெண்ணெய், முழுக் கோதுமை, உணவு வகைகள்—இவற்றைச் சேர்த்து வாருங்கள். மெல்லிய கோதுமை மாவால் செய்த ரொட்டிகளில் இருப்பதைப் பார்க்கிலும் முழுக் கோதுமையிலேதான் வைடமின்களும் தாதுப் பொருள்களும் மிகுதியாக உள்ளன.

சிறிது சிறிதாகப் பலதடவைகளில் கொழுப்புள்ள பதார்த்தங்களை அருந்துவது உடல் வளர்ச்சிக்கு மிகவும் நல்லது. கோதுமைபவுடர், பால், சோயா மாவு, விதைகளிலிருந்து எடுக்கப்படும் வெண்ணெய், கொக்கோ, சாக்கோலெட் முதலியவற்றை அவ்வப்பொழுது சாப்பிட்டு வாருங்கள். ஒவ்வொரு சாப்பாட்டுடனும் சிறிது சாக்கோலெட் சேர்ப்பது நல்லது. சில தடவைகளாகச் சாப்பிடுவதை நிறுத்தி, அநேக தடவைகளாகக் கூட சாப்பிடலாம்.

கலோரிகள் நிறைய இருக்கும்படியாகவும் சத்துள்ள உணவாகவும் பானங்களை உபயோகிக்கலாம். காபி, டீ குடிப்பதில் உபயோகம் ஒன்றும் கிடையாது. பழரச பானங்கள், மால்ட் உணவுகள், பால், நெல் போன்றவை அதிக பலன் அளிக்கும்.

## தேகாப்பியாசமும் ஓய்வும்

இவ்வளவையும் சாப்பிட்டுப் பலன் பெற வேண்டுமானால், அவை ஜீரணித்தாக வேண்டும். அநேகர் இவ்வாறு மெலிந்தேயிருப்பதற்கு விறைப்புத் தன்மையுடைய மனப்பான்மைதான் காரணம். சாதாரணமாக உட்கார்ந்து இளைப்பாறவும், உண்ணவும், அதற்கேற்ற பிரகாரமான சூழ்நிலையை

அமைக்கவும், தேவையாகிறது. நன்றாக இயற்கை மாதிரி சூழ் நிலையில் உட்கார்ந்து களைப்புத் தீர்ந்து, சாவதானமாக சாப்பிட்டு, மெதுவாக எழும்பி, பின் வேலைக்குச் செல்வது இப்படிப் பட்டவர்களுடைய தேக, மனோ நிலைக்கு நல்ல ஔஷதமாகப் பயன்படும். உடல் நிறை ஏறுவதற்கென்று சாப்பிடும் நாட்களிலும், உடல் மெலிவதற்கென்று சாப்பிடும் காலத்தைப் போல் தவறாமல் தேகாப்பியாசம் செய்யவேண்டும். தேகாப்பியாசம் செய்தால் உடல் மெலிவடையும் என்று பொதுவாகக் கூறப்படுவதை அநேகர் தப்பாக எண்ணிக் கொள்ளுகிறார்கள். ரொட்டியும் வெண்ணெயும் சேர்ந்த ஒரு வேளை உணவு ஜீரணிக்க வேண்டுமானால் குறைந்தது மூன்று அல்லது நான்கு மைல்கள் உலாவிச் சுற்றி வர வேண்டும். அதைவிட சத்துள்ள உணவாக சாப்பிட்டால் பின்னும் அதிகமான தேகாப்பியாசம் தேவை.

சரீரக்கூறு சாத்திரத்தின்படி தசைகள் இயங்குவதைப் பொறுத்துச் சரீரக்கட்டு ஏற்படுவதால், நல்ல கட்டான உடம்பு இருக்க வேண்டும் என்று விரும்புகிறவர்கள் தசைகளைத் தேகாப்பியாசம் செய்வதற்குப் பழக்க வேண்டும்.

கை கால்களை நீட்டி, நேராக நிமிர்ந்து நிற்க, எழ, கை கால்களை ஒழுங்குடனே இயக்கப் பழகுவதும் அன்றி, தசைகளைப் பிடித்து விடுவது, ஆழ்ந்த மூச்சு எடுப்பது, இவற்றுடன் ஒரு மணி நேரம் திறந்த வெளியில் வேலை செய்வது—இவை எல்லாம் மிகவும் நன்மை.

மெலிந்த தேகமுடையவர்கள் நரம்பு மிகச் சக்தியைப் பெருக்குவது சிரமம் ஆகையால், அதை எந்த வகையிலும் சிதறடிக்காமல் கவனமாக இருக்க வேண்டும். உடலின் உஷ்ண நிலை குறையாதபடி வைத்துக் கொள்ளுவதற்கே வேலை செய்வதினாலுண்டாகும் சக்தியைவிட அதிகமாக நாம் செலவழிக்கிறோம். மிக மெலிந்தவர்கள் குளிர் தாங்க முடியாமல் திண்டாடுகிறார்கள். குளிர் உடலைத் தாக்குவதால் சூடு தர தேவையான கொழுப்பு சக்தி உடலிலிருந்து வெகு சீக்கிரம் செலவாகிறது. முன்னெச்சரிக்கையாக் கம்பளி ஆடை அணிந்து, படுக்கு முன்னாக வெந்நீர் பாட்டில்களை உபயோகித்து, மெத்தைகளை இலேசாகச் சூடாக்கிக் கொண்டால், உடல் உஷ்ணமும் நரம்பு சக்தியும் கெடாது.

உடல் முழுமையும் நன்றாக, கட்டாக அமைவதற்கு ஏராளமான ஓய்வு தேவை. நாம் தூங்கும்போதும், இளைப்பாறும் போதுமே உடல் சக்திகள் புதுப்பிக்கப்படுகின்றன என்பதை மறந்துபோகக்கூடாது. இளைப்பாறுதலும், ஓய்வும், தூக்கமும் உடல் வளர்ச்சிக்கும் நிறை கூடுவதற்கும் இன்றிமையாதவை என ஞாபகத்தில் வைக்க வேண்டும்.

—''நல்வழி''

OOO

யானை குழியில் விழும்போது, தவளைகூடப் பின்னாலிருந்து ஒரு உதை கொடுக்கிறது.

—வங்காளப் பழமொழி

# குற்றமும் தண்டனையும்

நாவல் சுருக்கம்

ரஷ்ய மூலம் :
**டாஸ்டாவஸ்கி**

தமிழில் : சொர்ணம்

★

★

குற்றம் செய்யப்படுகின்றபோது அங்கு யோசனைக்கே இடமிருப்பதில்லை; ஆனால் அதன் விளைவு பெரும் பயங்கர இருளாகக் கவ்விக் கொள்ளும்போதுதான் மனிதமனம் 'ஓகோ' என்று ஓங்காரக் கூச்சலிட்டு அழுகிறது; அலறித் தவிக்கிறது! தவறு செய்த பிறகு அந்தத் தடுமாற்றம் எங்கிருந்து கிளம்புகிறது? சட்டத்தின் வலையிலே சிக்கி விடுவோமே என்ற பயத்தினலா? இல்லை; இல்லை; சட்டத்தின் ஒளி மங்கிப்போன கண்களிலிருந்தும் தப்பிவிடலாம். ஆனால் உள்ளம் என்ற வழக்கு மண்டபத்திலே யிருந்து உருவற்று, உருவாக்கு வாரற்றுக் கிளம்புகின்றனவே 'மனசாட்சி' என்ற சக்திமிக்க சட்டங்கள் அவற்றின் கூரிய விழிகளுள் சிக்காமல் தப்புவ தென்பது இயலாது; ஒருக்காலும் முடியாது!

தவறு செய்யத் துடிக்கும் ஓர் உள்ளத்திற்கு இந்தத் தத்துவ போதனை புரிய வேண்டுமென்றால், பனியும் வெயிலும் போட்டியிட்டுக் கொண்டிருக்கும் செயிண்ட் பீட்டர்ஸ்பர்க் நகரத்தில்—வெங் கொடுமைக்கு உறைவிடமான கீழ்த்தரப் பகுதி யொன்றில் — இருட் குகை போலக் காட்சியளிக்கும் ஒரு பாழடைந்த வீட்டில்—நான்காவது மாடியிலுள்ள அறை ஒன்றுக்குள் நாம் நுழைந்தாக வேண்டும்!

சிலரது உள்ளத்தைப் போல தூசி படிந்த மேசை ஒன்று; இரண்டொரு நாற்காலிகள்; அழுக்கடைந்த சோபா; நீண்ட நாட்களாக யாரும் தொட்டுப் பார்த்தறியாத சில புத்த

நான்! தயவு செய்யுங்கள்; இனி ஒரு முறை இப்படிக் கேட்டு என்னைச் சித்திரவதை செய்யாதீர்கள்......போய் விடுங்கள்!...'' —சூழ்நிலை தனக்கு அளித்துவிட்ட சாக்கடை வாழ்வை அவள் இழக்க சம்மதிக்கவில்லையோ என்று எண்ணினான், ரோடியன்.

''சோனியா! இப்போது உன் கண்களுக்கு உயர்ந்த எண்ணங்கள் படைத்த ரோடியனாக நான் தோன்றுகிறேன்! ஆனால், நாளை நிலைமை மாறலாம்; கொலைகாரன் ரோடியனாக நான் உன்னைவிட்டு வெகு தூரத்திற்கு அப்பால் சென்றுகொண்டிருப்பேன்!...''

''என்ன சொல்லுகிறீர்கள்?...அப்படியானால்...?''

''நான் கொலைகாரன்...!''—மறுகணம் ரோடியன் அறையை விட்டு வேகமாக வெளியேறினான். அவன் நடையிலும், முகத் தோற்றத்திலும், அவன் ஏதோ ஒரு தீர்மானமான முடிவுக்கு வந்துவிட்டான் என்று தோன்றியது!

●

நேராக தன் அன்னை தங்கியிருந்த வீட்டுக்குச் சென்றான். தன்னிடமும், உடன் பிறந்தாளிடமும் இறுதி வணக்கம் தெரிவித்துப் போக வந்திருக்கிறான் அவன் என்பதைப் புரிந்துகொள்ளாத அந்தத் தாய் மகனை ஆரத் தழுவி முத்தமிட்டாள்! ''மகனே! நீ புதுமையானவனடா! மிகப் புகழ்பெற்ற மேதைகளுக் கெல்லாம் சமமானவன் என்பதை உன் கட்டுரைகள் காட்டுகின்றன, கண்ணே! நீ இனியாவது நல்ல உடை உடுத்தி நான்கு பேருக்கு மத்தியிலே சிரித்துக் களித்து இருக்கக்கூடாதா?...'' என்று அன்போடு கண்டித்தாள்!

தங்கை டுனியாவை, நண்பன் ராசுமுகினுக்குத் திருமணம் செய்து விடலாம் என்ற யோசனையைத் தாயிடம் சொல்லி விட்டு அங்கிருந்து புறப்பட்டான் ரோடியன்! வழியிலே டுனியாவைச் சந்தித்தான். ''டுனியா! நான் போகிறேன்! எங்கே போகிறேன்; ஏன் போகிறேன் என்று என்னைக்கேட்டு விடாதே! உனக்கேற்ற துணைவன் ஒருவனை அம்மாவிடம் சொல்லியிருக்கிறேன். நான் திரும்பி வந்தால்—நீ கணவனுடனும் குழந்தைச் செல்வங்களுடனும் குறைவற்று வாழும் சிந்தை குளிப்பாட்டும் காட்சியைக் காணுகிறேன்...''

ரோடியன் ஓடி விட்டான்! தங்கையின் கதறல்கூட அவனை நிறுத்தவில்லை! தடைபடும் ஓட்டமா அது? பொங்கும் கடலாய், பிரளயமாய், எரிமலையாய், குமுறிக் கொந்தளித்துக் கொண்டிருந்த நெஞ்சம்—குற்றம் புரிந்துவிட்டு, 'அமைதி, அமைதி,' என்று அலைமோதிக் கொண்டிருந்த உள்ளம்—நிம்மதியைத் தேடி அல்லவா அப்படி ஓடுகிறது?

ஓடி வந்து உள்ளே நுழைந்த ரோடியனை ஏதோ ஒரு காட்சிப் பொருளாகக் கண் உருட்டிப் பார்த்தனர் போலீஸ் அதிகாரிகள்!

''என்ன வேண்டும்? என்ன வேண்டும்?'' என்று உபசரித்தார்கள்!

"என் கைகளுக்கு விலங்கிட வேண்டும்; சட்டத்திற்காக அல்ல; நீதிக்காக—நேர்மைக்காக நீங்கள் அதை செய்துதான் தீர வேண்டும்! நான் கொலைகாரன்! வட்டிக்கடைக்கிழவி அலியானாவையும், அவள் தங்கை எலிசாவிட்டாவையும் கோடரியால் கொன்று போட்டவன் நானேதான்! கொள்ளையடித்த பொருள்கள் ஆற்றங்கரையோர கல்லுக்கடியில் பத்திரமாக இருக்கின்றன. நிக்கோலாய் நிரபராதி! அவனை விடுதலை செய்யுங்கள்! உடனே விடுதலை செய்யுங்கள்!" என்று கத்தினான் ரோடியன்.

●

எட்டு வருட காலம் சிறைத் தண்டனை விதித்து ரோடியனை சைபீரியாவுக்கு அனுப்பி வைத்தது பீட்டர்ஸ்பர்க் வழக்கு மன்றம்!

ரோடியனின் அறை கவனிப்பாரற்ற நிலையிலேதான் இப்போது கிடக்கிறது! 'வாடகைக்கு விடப்படும்' என்று எழுதப்பட்ட பலகை ஒன்று அங்கே தொங்கிக் கொண்டிருக்கிறது!

அதே போன்ற பலகை ஒன்று இன்னொரிடத்திலும் தொங்குகிறது—அதுவும் நமக்கு முன்னே அறிமுகமான இடம்தான்! அது சோனியாவின் 'வியாபார ஸ்தலம்'!

அப்படியானால் சோனியா எங்கே?

ரோடியனின் நிழலாக அவள் சைபீரியாவுக்குப் போய்விட்டாள்! சமுதாயத்தின் கொள்ளிக் கண்களுக்கு துரோகிகளான அவர்கள், ஒருவருக்கொருவர் துணைவராக — தூயநெஞ்சுடையோராக—புத்துயிர் பெற்று வாழ்கிறார்கள்!

●

---

ஹாஸ்யக் கதைகள் எழுதுவதில் இணையற்ற அமெரிக்க ஆசிரியராகிய மார்க் ட்வெயினை, ஒரு பொதுக்கூட்டத்தில் பேசும்படியாக அவருடைய நண்பர்கள் வற்புறுத்தினார்கள். அவரும் அதற்கு ஒப்புக்கொண்டார். கூட்டத்தில் பேசி அதுவரையில் அவருக்குப் பழக்கமில்லை. பேசுவதற்காக அவர் மேடை ஏறியதும், அவருடைய கைகால் ஆடத் தொடங்கின. ஆனாலும், ஆரம்பத்திலேயே சமாளித்துக்கொண்டார். பிரசங்கத்தை அவர் தொடங்கியமுறையே விநோதமாக இருந்தது: "ஜூலியஸ் சீஸர் இறந்துவிட்டார்; ஷேக்ஸ்பியர் இறந்துவிட்டார்; நெப்போலியன், ஆப்ரஹாம் லிங்கன் எல்லாரும் இறந்து போய்விட்டார்கள். நானும் தேக அசௌக்கியமாக இருக்கிறேன்," என்று துவங்கினார். ஜனங்கள் சிரித்துச் சிரித்து வயிற்றைப் புண்ணாக்கிக்கொண்டார்கள்; வெளியே எழுந்துபோகக்கூட அவர்களால் முடியவில்லை.



198153

Wrapper printed at Shanti Press, Madras-1